அவர் நாளையில் நடந்த சங்கதி குருந்தட்டிக்கிராமத்தில் மாலைப் பாளையத்து மேற்கு வெள்ளைக்காட்டுக்கு கிழக்கு குருநாத சுவாமி கோவில் கட்டினது விழுவில்லாமல் நின்னுக்கும் மேலை தாழக் கொம்பிலிருந்து சக்கர ஆயிரம்பிரியவர்கள் நின்னடிக்கவில்லை சுத்தி வெட்டு சிவ தலமிருந்ததை விஸ்தீரணம் செய்து சர்வமானியமாகச் செய்து முன்னாளிலே மிகுந்த சத்திரமும் கதிர்வேல் கோவிலையும் விஸ்தீரணமாகச் செய்து சுவாமி நரசிங்கப்பெருமாள் கோவிலுக்குப் பெருநிலம் கொடுத்து அது முதல் விஸ்தீரணமாக்கினது. பின்னையும் கற்றுடைகத் துரையவர் களுடைய பன்னிரண்டுப் பாளையக்காரர்கள் வடக்கு வாசல் அந்த வேட்டில் மேய்ந்துக் கொண்டிருக்கும் போது தென்னாட்டு கள்ளர் வந்து பசுக்களையெல்லாம் பிடித்துக் கொண்டு போகையில் அந்தச் செய்தி தனிச்சியம் கிராமம் அந்த கோட்டையார் அறிந்து மேல்ப்படி அந்தக்கோட்டை ச் சேர்வைக்காரரும் சேவகரும்..... வாசேகர்துடனே போய் கல்லத்திரி வெள்குர ஊரையடுத்து வழிமறித்து பசுக்களை யுந்திருப்பிக் கொண்டு சிறுது கள்ளரையும் வெட்டிக் கள்ளர்....... மற்றப்பேரைப் பிடித்துக் கொண்டு மதுரையில் கற்றுடைக துரையவர் கள் சமுகத்தில் கொண்டுபோய் ஒப்பிவிச்சார்கள். அப்போது கற்றுடைகத் துரையவர்களுக்கு சந்தோஷம் வந்து அப்பாவை வல்லாளம் ..... மக்களை வரவழைத்து அநேகமாய் மரியாதை செய்து சாமம்...... வெள்ளைப்புரவி வீரகண்டாமணியும் தண்டிகை முன்சொன்ன சிங்க முகமும் கொடுத்து இந்த தண்டிகைக்கு சம்பளம் விட்டு கிராமம் .. மங்கலம் முடுக்குச் சீமையில் கல்லாத்து போனாப்பட்டி ச......நாய்க்கனூர் பெதக்காலிங்கமநாய்க்கன்பட்டி குப்பாணம்பட்டி ஊரா ஆக 6 கிராமம் விட்டுக் கொடுத்து மீனாட்சி சன்னிதியில் சங்கிலி மண்டபம் முதல் கொண்டு தெருவளூர்கோட்டை வரைக்கும் வழிகை சீமைத் தில் உள்ள அரமனை கிராமங்களெல்லாம் காவலும் கொடுத்து காவ லுக்குள்ள நஞ்சை புஞ்சையும் விட்டுக்கொடுத்து சொர்ணமய வெடிகை வெண்கொடையும் நஞ்சை புஞ்சைக்குள்ள சுபம...... மூன்காவலுக்கு விட்டுக்கொடுத்து பின்னையும் மதுரையில் கூடலழகர் பெருமாள் கோவில் ரத உச்சவத்துக்கு கொடியேற்றின நாள் முதல் ரத

உச்சவம் வரைக்கும் அம்மையவல்லாளமாக்கய நாயக்கரை வரவழைத்து வைத்துக் கொண்டு நிவேதி மாலையும் போட்டுப் பரிவட்டமுங் கட்டித் தீர்த்தப் பிரசாதமுங் கொடுத்து ஒன்பதாம் நாள் தேரோட்டம். பிடிக்கிற முன்னுக்கு இவர் கையினாலே தேங்காய் தொட்டுக்கொடுத்து ரதம் ஓட்டிவைக்கிறது. ரதம் நிலைக்கு நின்றவுடனே அருளிப் பரிவட்டமுங் கட்டித் தீர்த்தப் பிரசாதமும் மாலையும் கொடுத்து உபசாரத்துடனே அனுப்பிவைக்கிறது.

4-வது பட்டம்... பொம்ம நாயக்கர் அவர் பெண்சாதி பெரிய முத்தம்மாள் மேற்படி குமாரன் பொன்னைய நாயக்கர் காமய நாயக்கர் அவர் பட்டமிருந்தது வருஷம் 26.

அவர் நாளையில் நடந்த சங்கதி குருவித்துறைச் சித்திரத வல்லப சுவாமிக்கி மதில் உண்டுபண்ணி மதிலும் கட்டிவிச்சார்கள்.

5-வது பட்டம் பொன்னைய நாயக்கர் பெண்சாதி பெருமையம்மாள் அவர் தம்பி காமய நாயக்கர் மேற்படி பெண்சாதி சின்னபெரம்மாள் பொன்னைய நாயக்கர் மகன் பெரிய வக்கைய நாயக்கர் பொன்னைய நாயக்கர் பட்டமிருந்தது வருஷம் 24.

6-வது பட்டம் அதின் பிறகு வெங்கைய நாயக்கர் சிறுபிள்ளையாக யிருந்தவரை பட்டம் கட்டிவைத்தார்கள். அவர் பட்டம் வருஷம் 1.

அப்போது நடந்த வைபவம் பட்டக்காரனுடைய... பாரதிச் சம்பா வீட்டத்தில் துப்பாகிகாரனாக மேற்படி... பந்துசனங்களாக யிருந்த பேர் சொன்னது உன்னுடைய தெ...காமய நாயக்கன் உன்னையும் உன் பிள்ளையும் கொன்றுபோட்டு நாடாளுகிறதாக யெத்தனஞ் செய்திருக்கிறான். அவனைக் கொன்றுபோட்டால் உன் மகனுக்குப் பட்டம் நிலைக்குமென்று சொன்னமாத்திரத்திலே தன்கொழுந்தன் காமய நாயக்கனை அநியாயமாய் கொன்றுபோட்டாள். அந்தச் செய்தி காமய நாயக்கர் பெண்சாதி பெருமையம்மாள் அறிந்து தீக்குழியில் குதிக்கிறதுக்கு யெத்தனஞ் செய்து மக்கப்பட்டம் நிலையாமல் தாயாதி ராச்சியமாக வேண்டுமென்று சாபமிட்டு உடனே அக்கினியில் மூழ்கினாள் அந்த சாபத்தினாலே பட்டத்துக்கு யிருந்த குழந்தையுந் தெய்வீகமாச்சுது. அதுமுதல் தாயாதிப் பட்டமாச்சுது.

ஏழாவது தாயாதிக்காரனாகிய வெங்காரு சின்னநாயக்கரைப் பட்டங்கட்டி வைத்தார்கள். மேற்படி பெண்சாதி வெங்காரம்மாள் இவர் குமாரன் பெள்ளவராய்க் கதிரி நாயக்கர் சின்னைய நாயக்கர் பொன்னுச் சின்னநாயக்கர் வெங்காரு செல்லநாயக்கர் ஆக பிள்ளைகள் 4 வெங்காரு சின்னநாயக்கர் வருஷம் 20.

அப்போது நடந்த சங்கதி வகையறுப்புச் சக்கரம் 2000 பசலி அப்போது மதுரையில் கர்நாடகத் துரைத்தனமாகிய திருமலை நாயக்கரவர்கள் திருநகரத்துக்குப் போகவேண்டியதாய் அவர்கள் பல்லக்குப் போகிறபோதே ... அக்கவுபோவதையும் குலைப்போவதையும் ... மூன்று குழிக்குள்ளே போய் திருப்பரங்குன்றம் சென்றபோது ... திருப்பாகமில்லை. அம்மைய நாயக்கர் ... போகியதும் வந்திருக்கிறார்கள். அவர்களாலே ஆகுமென்று சொல்ல அப்படியே திருமலை நாயக்கரவர்கள் விடைத்துப் போகவே ... பல்லக்குக் கொண்டு திருநகரத்துக்குப்போய் அன்று ராத்திரியில் மதுரைவந்து சேர்ந்தார்கள். அப்போது ... கொம்பையும் சந்தோஷப்பட்டு சொக்கா ரெட்டியாரிடத்தில் சொல்லி ... செய்து ... பூமி விட்டுக் கொடுக்கச் சொன்னார்கள். ... அதுபோலவும் கம்பலையரும் கேட்டுக்கொண்டது. அவர்களுக்கு ... பூமி தேவையில்லை. ... சிவனம் நடந்து வரும் படியாய்த் தங்களையாரும் அதில் சேர்த்த ... கொண்டதுக்கு ... தோப்பு வருக்குப்பாலும் ... சிவனம் பண்ணும்படியாய் உத்திரவு கொடுக்கவேணுமென்று கேட்டார்கள். அந்தப்படியே கர்த்தாக்களாகிய திருமலை நாயக்கரவர்கள் ... செப்புப் பட்டயத்தில் எழுதிக் கொடுத்து சிவனம் நடக்கும் படி செய்தார்.

எட்டாவது பட்டம் அவர் குமாரனாகிய பெரிய சக்கனநாயக்கர் பட்டமாக வந்தார். மேற்படி பெண்சாதி. பெருமாள் வடு குமாரன் பெரியமுத்தனாயக்கர் சின்னமுத்தனாயக்கர் மகிமை. மேற்படியார் குமாரன் கதிரிநாயக்கர் குமாரநாயக்கர் வடு வெங்கிச்சக்கனநாயக்கர் பட்டமிருந்தது வருஷம் 35

9வது தாயாதிக்காரனாகிய வயித்தியப்ப நாயக்கர் பட்டமாக வந்தார். வடு பெண்சாதி சின்னபெருமாள் வடு குமாரர் பெத்தனாயக்கர் வயித்தியப்பநாயக்கர் பட்டம் வருஷம் 48.

அவர் நாளையில் நடந்த சங்கதி மதுரையில் மீனாட்சி சுந்தரேசுபரர் தெரிசனத்துக்குப் போயிருந்தபோது சுவாமிக்கு நித்திய உச்சிக்கால வேளையில் அபிஷேகம் செய்யும்போது நடக்கும்பாது ... சுவாமி கோவிலில் முன் பிரகாரம் நடக்கு நெட்டுக் கடம்ப மரத்துக் கிளைக்குத் தெற்குப் பார்த்த ... உண்டுபண்ணி அதற்கு உள் ... செய்துக் கொடுத்து சந்தக் கிரையத்துக்கு ... தோட்டமும் மதுரையிலேதானே வாங்கிவிட்டு நடப்பிவிச்சி வருகிறார்கள். பின்னே

யும் ஆதியில் யிந்த ஆதிக்கமானவர் ருஷ்யுதல் ஆயபட்டரைக் கீழ்கோட்டை தொப்பம்பட்டி யிந்த மூன்றும் பெங்கள் பாளையத்தில் வெள்ளோடு பச்சை மலைக்கோட்டை சமபுதுக்கோட்டை யிந்த மூன்று கிராமத்தில் சேர்ந்த உடபிருமாகயிருந்தது. யிப்போது விறுது ருன்னக்கிப் பிற்பாடு இந்தப் பாளையப்பட்டு தாயாதி பட்டமான பிறகு சத்துருக்களால் வெள்ளைக்காரர் அந்த நூறூற்றுப்பேரும் யிருந்தபேர்கள் அவர்தாயாதத்துக்கு பாளையப்பட்டு செய்து கொண்டார்கள்.

10வது தாயாதிகாரனுகிய பெரிய சின்னா நாயக்கர் பட்டமாக மைந்தர் மேற்படி பெண்சாதி பெருமாளம்மாள் அவர் பட்டம் யிருந்தது ௵ 25.

அப்போது நடந்த சங்கதி மதுரையில் அறக்கட்டளைக்கி டபரிக் கட்டளையாக நடப்பிவித்தார்.

11-வது பட்டத் தாயாதிக்காரனுகிய பெத்தனா நாயக்கர் மேற்படி பெண்சாதி ..மையம்மாள் கொண்டாரவி அவர்கள் மேற்படி குமாரர் குழந்தைவேலுநாயக்கர், கனகநாயக்கர், பொன்னையநாயக்கர், பொம்மாச்சிநாயக்கர், லக்கையநாயக்கர், ஆக-ஆண்மக்கள் 5-பெண், பாப்பாயி அம்மாள் அலங்காரியம்மாள் ஆக-பெண்மக்கள் 2 பெத்தனாயக்கர் பட்டம் யிருந்தது ௵ 20.

12வது பட்டம் தாயாதிக்காரனுகிய பெரியமுத்தனாயக்கர் மேற். பெண்சாதி வெங்காரம்மாள் சிக்கம்மாள் மேற்படி குமாரர் பெரியகாமனாயக்கர் மேற்படி பெரிய முத்தனாயக்கர் பட்டமிருந்தது ௵ 27.

அப்போது நடந்த சங்கதி கதிரி நரசிங்கப்பெருமாள் கோவில் முன்பாக யிருக்கிற மாடம் 1. சந்தைப்பூர் கன்னிமார் கோவில் குருநாதசுவாமி கோவில் முன்பாகயிருக்கிற மாடம் 1. யிந்த மூன்றும் கட்டி வைத்தார்கள்.

13-வது பட்டம் தாயாதிக்காரனுகிய கதிரிநாயக்கர் மேற்படி பெண்சாதி சின்னக்கண்ணம்மாள் மேற்படி குமாரன் சக்கனாயக்கர் மேற்படி கதிரிநாயக்கர் பட்டமிருந்தது ௵ 18

அப்போது நடந்த சங்கதி சந்தைப்பூருக்குத் தெற்குப் பெருமாள் கோவிலுக்கும் தேரோட்டி வைத்து மேற்படி கோவிலுக்கு முன்பு யிருக்கிற தெப்பக்குளத்தில் நடுமைய மண்டபமும் கட்டி வைத்து ...லையில் கூடழகிய பெருமாள் கோவிலுக்கும் தெப்பக்குளமும் ...ரதேவரையும் கட்டி வைத்தார்.

14-வது பட்டம் தாயாதிக்காரனாகிய கொல்லவாம்பு கதிரி நாயக்கர் வீடு பெண்சாதி மூத்து ரெங்கம்மாள் அவர் பட்டம் இருந்தது ௵ 3

அப்போது நடந்த சங்கதி சேஷுரா.. கலாபத்தில் சந்தையூர்ப் பெருமாள் கோவில் பூசையில்லாமல் அடைபட்டுப் போச்சுது. அப்போது வகைதாறுப்பு சக்கரம் 3000 பணம்

15-வது பட்டம் தாயாதிக்காரனாகிய சின்னைநாயக்கர் வீடு பெண்சாதி குமார சின்னம்மாள் வீடு குமாரன் காமனாயக்கர் வீரசின்னம நாயக்கர் பாப்பநாயக்கர் சின்னப்பநாயக்கர் ஆக ஆண்சந்ததி 4. பெண், லக்கம்மாள் நாகம்மாள் அவர் பட்டம் ௵ 6.

16-வது பட்டம் தாயாதிக்காரனாகிய குழந்தைவேலுநாயக்கர் வீடு பெண்சாதி வள்ளியம்மாள் வீடு குழந்தை வேலுநாயக்கர் பட்ட மிருந்தது ௵ 15.

அப்போது நடந்த சங்கதி வரிச்சி கொண்டிட்ட முயர் வேட சந்தை பூஜை கட்டிக் கொண்டார்.

17-வது பட்டம் தாயாதிக்காரனாகிய காமநாயக்கர் அவர் பெண்சாதி லங்காரு சின்னம்மாள் அப்போது நடந்த சங்கதியுள் சேஷுராயர் கலாபத்தில் அடைப்பட்டிருந்தப் பெருமாள் கோவிலுக்கு சம்பாட்டினை பண்ணி பூசை நடப்பிவித்தார். அவர் பட்டம் இருந்தது ௵ 18.

18வது பட்டம் தாயாதிக்காரனாகிய வீரசின்னமநாயக்கர் வீடு பெண்சாதி பூச்சம்மாள் அவர் பட்டம் ௵ 4.

19வது பட்டம் வீடு யாகிய குருசின்ன நாயக்கர் வீடு பெண்சாதி கன்னம்மாள் அவர் பட்டம் இருந்தது ௵ 1.

20வது பட்டம் வீடு யாகிய குமாரன் சின்னநாயக்கர் மேலப்பட்டு பெண்சாதி சின்னம்மாள் பாப்பம்மாள், சின்னம்மாள் மகள் பெரிய சின்னம்மாள் லக்கமாரு பெத்தம்மாள் ஆக பெண்சாதி 2. பாப்பம்மாள் மகன் கலகநாயக்கர் குருமுகநாயக்கர் வீடு குப்பயசிங்குநாயக்கர் பட்டம் இருந்தது ௵ 7.

அப்போது நடந்த சங்கதி பழனி தலத்தில் மடங்கட்டி வைத்தார். பின்னேயும் விக்கலமங்கலம் கன்னாத்துருப்பநாயக்கனூர் உள்ளிட்ட கிராமங்கள் தம்பியளுக்கு விட்டிருந்த (கிராமம் அ)வைதத் தேசத்தில் மதுரைக்கி நேரயாக வந்த அப்பாஜிக்காள் கட்டிக்கொண்டார்கள்.

21வது பட்டம் ௸ யாகிய பெரியகவலைக நாயக்கர் ௸ பெண்சாதி வெங்கிடலெட்சுமியம்மாள் அவர் பட்டம் ௵ 1.

22வது பட்டம் ௸ யாகிய சக்கணநாயக்கர் ௸ பெண்சாதிபோ நாகம்மாள் வீரமுத்தம்மாள் வேநாகம்மாள் குமாரன் சொக்கலிங்க முத்தையநாயக்கர் வீரமுத்தயநாயக்கர் குமாரன் கதிர்வேல்நாயக்கர் ௸ பெண் பிள்ளைகளில் பாப்பாயி அம்மாள்...அம்மாள் சின்னக் கண்ணம்மாள் ௸ சக்கணநாயக்கர் பட்டம் ௵ 8.

அப்போது.. மக்களில் பிறுசாமா யைசையறுப்புத் தீர்ந்துவிட்டது. கலி 31.. பணம் 23வது ௸ யாகிய சொக்கலிங்க முத்தைய நாயக்கர் பட்டம் ௵ 1.

24வது பட்டம் ௸ யாகிய சங்கரகுமாரநாயக்கர் அவர் பெண்சாதி அழகு தாயம்மாள் ௸ குமாரன் கதிர்வேலப்ப நாரசிங்கநாயக்கர் ௸ குமாரத்தி...தனுசெங்கம்மாள் பெத்தாயியம்மாள் சங்கரகுமார நாயக்கர் பட்டமிருந்தது ௵ 16.

25வது பட்டம் ௸ யாகிய கதிர்நாயக்கர் ௸ பெண்சாதி அக்கலம்மாள் பாப்பாயி அம்மாள் ௸ அக்கலம்மாள் குமாரன் குமாரசாமி நாயக்கர் ௸ குமாரத்தி பொன்னம்மாள் முத்தையம்மாள் அவர் பட்டம் இருந்தது ௵ 3.

அவர் நாளையில் நடந்த சங்கதி திண்டுக்கல்லில் வெள்ளைக்காரத் துரைமார்களாய் மக்கூட்டிதுரை பெங்கதுரை மருவிதுரை நாளையில் கையறுப்பு கலி பணம் 3600

26-வது பட்டம் ௸ யாகிய கனகநாயக்கர் ௸ பெண்சாதி செந்தாயி அம்மாள் பாப்பாயியம்மாள் பெருமாள் ௸ செல்லம்மாள் குமாரத்தி வங்காரு பெத்தம்மாள் அவர் பட்டமிருந்தது ௵ 19.

அப்போது நடந்த சங்கதி சந்தையூர் வயிரீச்வரஸ்வர்க்கப்பெருமாள் கோவிலுக்கு திருப்பணியாக கட்டி வைத்தார். ஒரு தட்டு கிராமத்தில் குருநாதசுவாமி கோவிலுக்கு வடக்கிலுள்ள சமுத்திரக்குளமும் வெட்டி அதற்குக் கிழக்கு மருகாலில் கல்லுமண்டபமும் உண்டு பண்ணி வைத்தார். குமரேசபுரம் கோட்டையில் மலைமேல் பொன்னுரங்கப் பெருமாள் கோவிலுக்கு கல் கம்பம் நாட்டி வைத்தார். ரச தானியில் அரமனைவாசலுக்கு முன்னுதாக கல் ஆசார அரமனைக் கணக்கிடம் கட்டி வைத்தார். பரவித்தலத்தில் முன் மண்டபமும் பிரமாண மாகயிருந்ததைக் கெட்டி மச்சுக் கட்டிவைத்தார். ௸ மடத்துக்கு

தாம்பரசாசனம் உண்டுபண்ணி வைத்தார். பின்னேயுந் நிலபடிக்கல் சீர்மைக்கு அமுலாகாரந்த நமஸ்கரணிய ஸ்ரீமத் ஆறுமுகசாமயப்பு துரை யவர்கள் சீர்மையை 25 பாகம் .... கிலியாய மடு, கற்படுபாளை, அஞ்சி கூக, ஆறு ஓடை, சுவையானதுவுக்கும் அளந்து வைபோகம் செய்து ஒசிக கம்போட்டு சந்ததியுரிமை வகைபி...ச் சேரிபண்ணித் தீர்ப்பு செய்தது உதூர் கச்சேரிக்கும் ஆத்தானி . மூனர் நமீயுபிர்ஜியர் ரகுநாதருமர் சேது ராயர் தம்பி வெங்கிட்டுமார் யிவர்கள் வந்து குடிபாருக்கு விசுவசிப்பட்டமும் கொடுக்கத் தீர்மானஞ் செய்தது. சீர்மை ஆய கூடு செயதாபந்தி பிரகாரம் ..தீர்பாக்கு அனுதிகூட பாளையம் செதீர் அடங்கூர் நீர் தி 100-9408 பணம் இவங்கள் சர்க்காருக்கு 100 பணத்துக்கு 70 பணம் ஆக நிருதி 6585 பணம் 6...பாளையக்காரருக்கு 100 பணம்... 30 பணம் ஆக பங்கு ..2822 பணம். இந்த படிக்கி இத்துக் குடுத்து வந்தார்கள்.

27-வது பட்டம் நாளது நடப்பில் இருக்கிற கதிரேசநாயக்கர் இவர் பெண்சாதி பெரியக்க அம்மாள் பொம்மக்கம்மாள் சதம்மாள் பெரியக்கம்மாள்குமாரன் ருமபதிநாயக்கர் சக்கனநாயக்கர் ஆக ஆண்சனம் 2. பெண் வேலம்மாள் மீனாட்சியம்மாள் முத்தம்மாள் ஆக பெண்சனம் 3. பொம்மக்கா குமாரன் முத்துநாயக்கர் வீரமுத்தம்மாள் குமாரன் வித்தியப்பநாயக்கர் 24-ம் பசலிவரைக்கும் உடனுடன் பட்டு பணமும் சர்க்காருக்குச் செலுத்திவிச்சுக் கொண்டு வருகிறோம். பாளையப்பட்டும் அனுபவித்துக் கொண்டு வருகிறோம். கதிரேநாயக்கன்.

*

# ஊற்றுக்குழி பாளையக்காரர் காலிங்கராயக் கவுண்டருக்கு எழுதிய கடிதம்

டி. 3045

ஊத்துக்குழி பாளையகாரர் காலிங்கராயகவுண்டர் பேருக்கு எழுதப்பட்ட காகிதமின்று நக்கல்.

ஸ்ரீமது சகல குண சம்பன்னரான சகல தரும சிரேஷ்ட பாளையக்காரருமா பந்து ஜன பிரிதிபாலனமுள்ள அகண்டித லட்சுமி பிரசன்னரான வெகு ஜன பரிபாலகரான கீர்த்தியாதிகாரனான விஜயநகர மகாமேருவுக்குச் சரி சமான ஸ்ரீ ராஜ ராஜஸ்ரீ ஊற்றுக்குழி காலிங்கராயக் கவுண்டர் அவர்களுக்கு ராஜமானிய ராஜஸ்ரீ பாலக்காட்டுக் கோட்டை மேசர், கமண்டர், சேபிக சயல்சாயபு அவர்கள் மெத்த சலாம் பம்பாயில் பகுத்தாளுகிற மகா ராஜஸ்ரீ குவர்னர் ராஜஸ்ரீ சகல பாளைக் கொத்தாமுதல் பெரிய ஜெனரல் அவர்கள் சித்திரேட்டிசாயபு அவர்கள் ஜெனரல் அட்டமி சாயபு அவர்கள் மலையாளத்துக்கெல்லாம் கமிசனர் சாயபு நம்ம அவர்களும் இவர்களெல்லாம் ஒரு மனதாக யோசனை செய்து நமக்கு அப்பனை தந்தார்கள். உங்களுக்கும் தெல்லச் செல்லி எழுதுகிற காரியத்துக்கு மெத்த மெத்த சந்தோஷமாய் தங்கள் மனதிலே பெரிய காரியம் வேண்டியிருந்தாலும் வெகு மானப்பட்ட இங்கிலீசு கும்பெனி சர்க்காரோடே சேர்ந்தாக இருக்க வேணும் சொல்லியிருந்த பிரகாரத்துக்கு அதே பேருக்கு நமக்கு அப்பனையாச்சுது. அது காரியத்துக்கு இப்போ சறுக்கு காரியத்துக்கே தாங்கள் குழுந்து செய்து நடக்கவேண்டிய காரியத்துக்கு பச்சாதாமான பழயதிலே தாங்கள் அஞ்சவேண்டி நம்முடைக்கு தாமதியாக எழுதி யிருக்கிறோம். பின்னையும் நமக்கு அப்பனையாத் தங்களுக்கும் தங்கள் வகையிலே தங்களை சேர்ந்த கவுண்டமாரும் தங்களுக்கும் சிநேகிதமாக இருக்கிற கவுண்டமாரும் ஆரும் தங்களைச் சேர்ந்து இருக்கிறார்களோ அவர்களும் தாங்களுமாக கும்பினி சருகாரத்துக்கு செய்தப் பிறகாரம் நமக்குச் செய்வீர்களோ அந்தப் பிரகாரம் பிரயாசப் பட்டு நடத்திக்கொள்ள வேணுமோ அதுப்படி நடக்க வேண்டியது அந்தப்படி நடந்துகொள்வாய் தங்களுட. முழுக்கு வேண்டி தங்களுக்கும் தங்கள் குடிகளுக்குமான தங்கள் பிள்ளையும் மோதலும் தங்களைச் சேர்ந்த கவுண்டமாரையும் பிதுக்கெல்லாம் தங்களுக்கு வேண்டி இங்கிலீசு கும்பினி சருகார் வங்களை வச்சு ரெட்சிக

நூபா போலே நம்முடைவசம் ஒப்பிட்ட சீமையும் தங்களையும் கும்பெனி சர்க்கார் உள்ள வரைக்கும் ரட்சிக்கிறப் போலே செய்து தருகிறோம் தங்கள் கையிலே யெந்தப் பிரகாரம் ஆகுமோ பாளயக்காட்டுச் சேரியா யிருக்கிறசமாதானத்தோடே கூட தாங்களும் தங்களைச் சேர்ந்த ஜனங்களும் நமக்குத் தாசமயமாக யிருக்கிறவரை அவாக்கு செய்யவேணுமென்ற அப் படிக்கு செய்யவும் அல்லாதே போனால் கின்னேக்கல்லுலே பழுகளைத் தோடே கூடவின்னேறு தாங்கள் செய்விக்குறதாலும் செய்யவும் இல்லாதே போனால் பாளயிலே யிருக்கிற பவுசோடே கூடவின்னேறு செய்தாலாலும் செய்யவும் அல்லாதே போனாலும் தாங்களும் தங்களைச் சேர்ந்த ஜனங்களுமாக அவனை யெந்தப்படி வெசாரு செய்யவேணுமோ அந்தப்படி செய்யவும் மஹாராஜஸ்ரீ சென்னைக் கிறிஸ்தொட்டு சாயபு அவர்களும் ராஜஸ்ரீ செனறல் அட்டனி சாயபு அவர்களும் கம்மந்த சாயபு அவர்களும் யிவர்கள் முன்னிதாக தங்களை யெந்தப்படி பொறுமையாக்கி வைக்க வேணுமோ அந்தப்படி யாக்கி நடப்பிச்சி குடுக்கிறோம். தங்கள் மனசும் நம் மனசும் ஒன்றாக யிருக்கிற படியினாலே தங்கள் காரியக் காரர் திருத்தர் நம்மண்டையிலே எந்நேரமும் பிரியமாய் காத்து இருக்கிறப் போலே செய்யவும்.

சர்க்கார் காரியம் எந்த வேலை எந்தப்படி வருமோ அனைபடி யினாலே தங்கள் மனுஷரைப் பிரியமாய் இருக்கச் செய்யவேண்டியது தாங்கள் இவிடத்துக்கு எந்த வேலை வந்தாலும் தங்களைக் காணுகிறது மெத்த சந்தோஷம்.

1795 ஞ் மார்ச் மீ 1உ இதன் கீழ்ச் சயின பொகருடனே தஸ்தா வேசாய் மேல் எழுதப்பட்டதின் தலைப்புகளுக்கு இங்கிலீஷிலே எழுதி யிருக்கப்பட்டிருக்கிறது.

# ஊற்றுக்குழி பாளையக்காரன் காலிங்கராயன் வம்சாவளி

டி. 3044

தாராபுரம் துக்குடி பொள்ளாச்சி தாலூக்கா ஊற்றுக்குழி பாளையக்காரர் காலிங்கராய கவுண்டர் என்பவருடைய வம்சாவளி முதலானது கைபீது.

என்ன வென்றால் :-

பூர்வத்தில் சோழ தேசத்தில் தொண்டை மண்டலத்து வேளாள ரென்று பேர் பிரசித்திப்பட்ட நாற்பத் தெண்ணாயிரம் பசுங் குடி பன்னீராயிரம் ஆக அறுபதாயிரம் கோத்திரக்காரர்களில் பின் காலம்-நிறுபித்த-சோழராஜா மகளை முறை தப்பிச் சேர ராஜா-பண்ணி கிரகணம் பண்ணிக்கொண்டபடியினாலே-அந்தக் காலத்தில் நாற்குடி நாற்பத்தெண்ணாயிரம் குடியில்-எண்ணாயிரம் குடி சேனை கொடுத்த படியினாலே-அப்போ வரப்பட்ட வேளாளருக்கு-தென் திசை நோக்கி வந்த படியினாலே-தென் திசை வேளாளரென்று பேர் வரப் பட்டது......

சேர தேசத்துக்கு வரப்பட்ட வேளாளருக்கு-சேரனுக்கு வெங்கலை கேரளம்-பேர் இருக்கிற படியினாலே-கொங்கு வேளாள ரென்றும்-கொங்கிருபத்திரண்டு நாடு என்றும்-ஏற்படுத்தி இருக்கும் நாட்டில்-அக்காலத்திலேயே காலிங்க கவுண்டன் என்கிற பெயர் பூந்துறை நாட்டுக்கு-காணியான (ஊற்று) (குழிக்கு) மேல்வரை முப்பத்தி ரெண்டு-கிராமத்துக்கும் சேர்ந்த-வெள்ளோடு குடியிருப்புக் காரனாய்-தம்முடைய இஷ்ட தெய்வமாகிய-சர்வேஸ்வர பார்வதியின் ஸ்தானத்-தேவஸ்தானம் சிறப்பாதாரணம் பண்ணிக் கொண்டிருந்தான் ..

மதுரை மண்டலத்து-ராட்டானை-வெள்ளோட்டு குடி. இருப்புக் காரனாயிருக்கும் ஆம்பயிர்-கம்பை குலம்-சர தந்த கோத்திரம் காலிங்க ராயன்கவுண்டன்-செல்லக்குமார-தன்னுடைய குமாரனுக்கு-கலியாணம் பண்ண வேணுமென்று நினைக்க-மாமன் மக்களானவ-பண்ணை குலத் தாளி வீட்டிலே-பெண் கேட்டு கலியாணம் செய்யத் தக்கதாக யோசிக்க-பெண் சம்மதமாகி அந்த முகூர்த்தச் சாப்பாட்டுக்கு சமையல் பண்ணுகிறவன் வந்து இவர்களுக்கு சமையல் பண்ணுகிறதுக்கு

மெத்த அரிசி போகிறது என்று சொல்ல அவனவன் கர்ப்ப ஸ்திரீ திறமையிலே இருந்தோர் சேர்வைக்கு மெத்த அரிசி வேண்டும் தெரிய போதாது படியின் காலை போடு போனென்று சொல்ல அது சேதி கேட்டு காளிங்க கருணடன் கொடு அவனவன் வீட்டுப்பேய வாரிநது பழுத்து இறந்தது பேர்க்கு எல்லையும்படியாக நீர் பாங்கு உண்டு பண்ணிக் கொண்டு உங்கள் வீட்டு பேரை சொல்லு காப்பிற்குரிர என்று சிபுதம் கோடரிகொண்டு மந்திரம் ஆறுலே வந்து சேர்ந்து மகா ஆடி பெத்தவர் இருக்கும் நகரியின் இவர் இட்ட தெய்வமான சர்வேஸ் வரனை தன்னுடைய ஸ்ரீசந்நிதம் சீக்க வேணுமென்று நினைக்கையிலேயும் வேளையில் சந்நிதி செப்பனத்திலே ஒரு விருத்த பிராமண ரூபமாய் வந்து இந்த சர்ப்பம் போகுமளவாக வைக்கோல் கெட்டி வைக்க சொல்லி காரியமாக செப்பனமாக்கி அந்த செப்பனம் மாய வுடனே கண் முழித்து பார்த்தும் இடத்தில் ஒரு சர்ப்பம் பிரதிட்சமாக இருந்தது. தான் கண்டு இருக்கப்பட்ட செப்பனத்தை கண்டு அறிய வேணுமென்று நினைக்க வீடு விட்டு வெளியிலே வந்த சமயத்தில் சர்ப்பம் இவரை கண்டு முன்னே நடந்தது. அந்த சர்ப் பத்தைத் தொடர்ந்து போய் வீடு வழியாக போகும்போது அட யாளங்கள் போட்டுக்கொண்டு வருகிற போது கொடுமுடி சேத் திரத்தில் சர்ப்பம் நின்றது.

அந்தச் சர்ப்பம் போன போக்குலே வாக்கியாலே வெட்டி வைக்க வேணுமென்று நினைக்க பனாளி ஆத்திலே குறுக்க அணை கட்டி வைக்க வேணுமென்கிறதாக நினைக்க இருந்த சமயத்தில் பனாளி கூடல் கிதனத்துக்கு மேல் புறத்தில் பனாளி யாத்திலே சர்ப்பம் குறுக்கே படுத்துக்கொண்டது. அந்த இடத்திலே அணைக் கட்டி வைக்க வேணுமென்று பனாளிக் கூடலுக்கு வடக்கே ஆறாச்சிபாளையம் ஆ முன் அந்த கிராமத்துக்கு வாங்கி அணை கட்டுற சமயத்தில் வெள்ளை வெட்டுமாம் பெண்ணுக்கு பாளையக்காரன் அணை கட்டுகிற பெண்ணே தன்னிடத்தில் சண்டை பண்ணின படியினாலே வெள்ளை வேட்டுவரை ஜெயிக்க அணையும் கட்டி மேற்கு திசையிலுங்கள் செயிக்க சர்ப்பம் போயிருந்த அடையாளங்களை பிடிக்க வாக்கியால் வெட்டி கொடுமுடி வரைக்கும் வாக்கியால் வெட்டி வச்ச பனாளி அணை முதல் கொடுமுடி கிதனத்து ஆத்து வரைக்கும் முக்காத வழி தூரத்துக்கு சர்ப்பம் போன போக்குலே வாக்கியால் வெட்டின படியால் காதவழி தூரம் கோணக் கோணலாக வாக்கியால் வெட்டி வச்சான்.

அந்தச் சர்ப்பம் போன போக்குலே வாக்கியால் வெட்டி வச்ச பனாளி ஆத்திலே-சர்ப்பம் படுத்துயிருந்த இடத்திலே-அணையும்

கட்டுவிச்ச படியினாலே காலிங்க கவுண்டன் என்னும் பேர்வரப் பட்டு பிரசித்திப் பட்டவனும் இருக்கும் நாளையில் முன்னாலே சபத்தம் கோவியிருக்கப்பட்ட பெண்ணை குலத்திலே தன்புள்ளைக்கு கலியாணமும் செய்து கொண்டு அம்ச பழையூரி தெய்வ கடாட்சத்தினாலே சம்பத்து ஐசுவரியமான காலிங்கரென்கிற நாமதேயமும் வெள்ளாள சாதியானபடியினாலே கவுண்டர் என்கிற நாமதேயமும் ரெண்டு நாமதேயமும் சேர்ந்து காலிங்க கவுண்டன் என்கிற பேர் பிரசித்திப் பட்டுயி தான் கட்டி வச்ச அணைக்கு காலிங்ககவுண்டன் அணை யென்றும் காலிங்கக் கவுண்டன் வாய்க்கால் என்றும் தான் உண்டு பண்ணின நீர்ப்பாய்கு நிலத்தில் வெள்ளாமை. காலிங்க ஜெயந்து யிருந்து வெள்ளைப் பண்ணை ஏற்படுத்த பாக்கியங்களும் செய்து கொண்டு யிருந்தாள்.

இப்படி வாய்க்கால் வெட்டி அணை கட்டி பிள்ளைக்கு கலியாணமும் பண்ணுகிற வரைக்கும் சாதும் கோரி நிட்டை வைத்துக் கொண்டு யிருக்கும் சமயத்தில் தெய்வ கடாட்சத்தினாலே மகேஸ்வரன் பெரியவறி யிருக்கும் சமயத்தில் ஒரு நாள் ஆசாரத்துடனே நித்திரை பண்ணிக்கொண்டு யிருக்கிற சமயத்திலே ஒரு ஜங்கமன் இட்சை யபினை வாங்கி போய் நீலகண்டருடைய பெருமையை வச்ச வணக்கத் துடனே நின்னுக்கொண்டு யிருந்தான். நித்திரை தெளிந்து எழுந்து கண்ணுறு பார்த்தபோது ஆயுசுகாரப் போலி யிருந்தபடியினாலே சந்தோஷம் வந்து ஜங்கமனை பார்த்து உனக்கு என்ன வேணுமென்று கேட்டார். அந்த ஜங்கமன் என் பேர் விளங்கியிருக்கும்படியாக என்ன வேணுமென்று மனுவு கேட்டுக் கொண்டபடியினாலே தாம் கட்டுவிச்ச அணையோடும் தாம் இருக்கப்பட்ட மாளிகை பாளையத் துக்கு தெற்கிலும் நாசுவன் பேராலே ஒரு உண்டுபண்ணி ஜங்கமன் பாளையமென்றும் பேர் விளங்க பண்ணி அந்த ஜங்கமனுக்கு அந்த பாளையம் சர்வமானியமாகக் கொடுத்தார்.

இப்படிக்கு காலிங்கராயக் கவுண்டர் என்கிற பேர் பிரசித்திப் பட்ட வரைக்கும் வெள்ளோட்டு குடியிருப்பாக் காராயி பூந்துறை நாட்டு நாடாதிபத்தியம் தாம் உண்டு பண்ணின அணை வாய்க்கால் பரிபாலனம் பண்ணிக் கொண்டு புள்ளை புள்ளை தலை முறைக்கும் காலிங்க கவுண்டன் என்கிற நாமதேயம் உண்டானவர்களாய் யிருந்தார்கள்.

பவானி கூடுதுறை காலிங்கக் கவுண்டன் என்கிறவன் அணைகட்டி வச்ச மேற்படி விருத்தி பண்ணினது. கலியுக சகாப்தம் 2000 காலிங்க கவுண்டன் கட்டியிருக்கப்பட்ட. அணை இதிலே யிடி கவுண்டனையும்

சற்பத்திரமும் சிலா பிரதிமை ரூபமாக கல்லிலெட்டி வைச்சு விவாசானமும் பெருந்திலிருக்கிறது அந்த அலிரா போட்டு யிருக்கப்பட்ட இடத்தில் குடிகள் பாரம்பரையாய் வருஷமிருதியும் உச்சவம் பண்ணிக் கொண்டுவருகிறது வருஷம்பிரதியும் காலிங்கக் கவுண்டன் பிரதிமைக்கு பூசை நெய்வேத்தியம் பண்ணிக்கொண்டு வந்தால் வெள்ளம் வந்து வெள்ளாமையை வெகுவாய்க் கொண்டு வருகிறது. இப்படி கல்லரா அனுக்கிரகத்தினாலே மூர்த்திகரம் உண்டாயி யிருக்கிறது.

இவ்வாறு அநுக்கிரஹத்துனாலே காலிங்க கவுண்டன் யெங்குர அனேகபுறவும் பச்ச பரம்பரையிலே காலிங்ககவுண்டரென்று பேர் வச்சுக் கொண்டு வருகிறது.

இப்படி காலிங்ககவுண்டர் யென்கிற பேர் பிரசித்திப் பட்டவர்களாய் வடாட்டிகளும் வெள்ளோட்டு பூந்துறை நாடாதிபத்தியம் ஆண்டு கொண்டு வந்தார் பாளையிலே கொங்கு இருபத்திநாலு நாட்டுக்கும் பட்டக்காரர்களாகி யிருக்கப் பட்டவர்கள் சரிவிருப்பும் சரிமரியாதிகளும் குறைக்கப்படாது யென்று சொன்னதுனாலேயும் பூர்வத்தில் சேரமான்பெருமான் சக்கிரவத்தி கொங்குநாட்டுக்கு கரிவிடிக்கை நாடு பிறகும் பண்ணி வைத்து யிருக்கிற படியினாலேயும் நாட்டு பட்டக்காரர்கள் சரிமரியாதி நடக்க மாட்டாதென்று சொல்லிக் கொண்ட படியினாலே வெள்ளோட்டு விட்டு மணவெருப்புனுலே ஆனைமலை சரிவிலே தங்கள் காணியாட்சியான காளிங்கராயன் நாடு கொண்டு வனமாயிருந்ததில் தங்கள் மாடுகளை விட்டிருந்து மாடுகளை சம்ரட்சணை பண்ணுகிறதுக்காக தங்கள் சனங்கள் இருந்த படியினாலே காளிபுக்க நாட்டு வனத்துக்கு வந்து மாடுகளையும் பார்த்து மாட்டுகளுக்கு சமரட்சணைக்காக பட்டிகளும் போடுவிச்சு அந்தவாறு காலைகளும் கட்டுவிச்சு கொண்டு யிருபத்தினாலு நாட்டுக்கும் பாளையபட்டுகளுக்கும் இராச்சியத்துக்கெல்லாம் அதிகமரியாதைகள் உண்டு பண்ணிக் கொள்ள வேணுமென்று நினைச்சு ருசதுபான் தயனத்துக்குப் போனார்.

ரூப சமுஸ்தானத்தில் காத்துக் கொண்டு யிருக்கும் நாளையில் பனிரெண்டு வருஷம் வரைக்கும் ருசாவர்கள் பேட்டியில்லாமல் காப்பிலே கொண்டு போன திரவியங்களெல்லாம் செலவழிந்து போய் கஷ்டப்பட்டுக் கொண்டு அதிவேலைத்தை அடைஞ்சவனும் தன்னுடைய இஷ்ட தெய்வத்தைப் பிராத்தனைச் செய்து கொண்டு மலையிரத்தை அடைஞ்சாயும் பெருக்கொண்டை பட்டணத்துக்கு வெளியிலே தென்புறம் காளி கோவிலிலே போய் செத்திரமாக படுத்துக் கொண்டு யிருந்தார்.

சந்தனம் பொசத்துடனே காளியோனியிலே யிருக்கப்பட்ட காலிங்க கவுண்டன் சொப்பனத்திலே பளிச்சென்றாற்போல் ராஜ குமாரனுக்கு சித்த பிரமை பிடிக்க அது விபாரணையில் லில்லாமல் யிருக்கிறபடியினாலே நீ என்னுடைய சன்னிதானத்தில் இருக்கப்பட்ட விபூதியை கையிலே கொண்டு போய் அந்த சித்தப் பிரமையாயிருக்கப்பட்டவன் பேரில் போட்டால் சித்த பிரமை தீர்ந்து ராஜ குமாரனுக்கு ஆரோக்கியம் சேர்ந்து யிருப்பான் ராயர் அவர்கள் உன் பேரிலே சந்தோஷமாய் உன் மனோபிஷ்டம் சித்தியாகும் என்று சொப்பனமாச்சுது.

அந்தச் சொப்பனத்தை கண்டவுடனே பளிச்சென்று நாள் பட்டணி யிருக்கப் பட்டவன் விபூதி யெடுத்துக் கொண்டு பெனு கொண்ட பட்டணத்துக்கு வந்து இது சொப்பனத்து சொப்பன பார்த்து கொண்டு வருகிற சமயத்தில் ராஜகுமாரன் பட்டணத்து வீதியிலே சித்த பிரமை பிடிக்க தன்னாலே திரியுற குதிரையை கண்டுபிடிக்க ராஜகுமாரன் பேரிலே காளிய நினைக்க விபூதி போட்டவுடன் அந்த விபூதி நானி ராஜகுமாரன் பேரிலே விழுந்தவுடனே சித்த பிரமை தெளிந்து ராஜ சின்னங்களுடனே அரமனைக்குப் போய்ச் சேர்ந்தான்.

அக்காலத்தில் நரபதி சிம்மாசனாதிபதியான பெனுகொண்டை விசயநகரம் ஆளப்பட்ட தேவராயர் அவர்கள் தம்முடைய குமாரனாவனுக்கு சித்த பிரமை விடுபட பண்ணினவனைத் தரிசிக்கச் சொல்லி மந்திரி பிரதானிகளுக்கு உத்திரவு செய்த படியினாலே அந்த சமயத்தில் தரிசிக்க ராயர் அவர்கள் ரொம்பவும் சந்தோஷத்துடனே காலிங்க கவுண்டனை பார்த்து உன் ஜென்மபூமி ராஜ்ஜியம் சித்தாந்தம் என்ன வென்று கேட்டதற்கு அவன் பழைய கூடல் சமீபத்தில் உண்டு பண்ணின ஆதீன வைக்கியால் ஏரலாறு முதலான சங்கதிகளும் கிருபை கடாட்சத்துனாலே காலிங்க கவுண்டன் என்கிற பேர் வைப்பட்ட வரலாறும் கொங்கு இருபத்திநாலு நாட்டிலே பட்ட குறுப்பு காரர்கள் பாளையக் காரர் சமஸ்தான அதிபதிகள் தானப்பு நடக்கப்பட்டு சமஸ்தானத்திலே காத்து கொண்டிருந்து காளிகாதேவி அனுக்கிரகம் பண்ணின நான் வைக்கும் வரலாறு அறியப்பண்ணிக் கொண்டபடியினாலே ராயர் அவர்கள் ரொம்பவும் சந்தோஷப்பட்டு உன்னுடைய நாம தேயம் என்ன வென்று கேட்டார்கள் அப்போ பேர் அறிய பண்ணிக் கொண்ட படியினாலே ராயர் அவர்கள் உத்திரவு செய்து என்னுடைய வம்சம் உத்தாரம் பண்ணியிருக்கிறபடியினாலே யென்னுடைய பேர் தெய்வ கடாட்சத்துனாலே உண்டாகிய பெருமையை ராச கடாட்சத்

துறையில் குறிக்கப்பட்ட ராஜ சமுகத்துடனே காலிங்கராய கவுண்டன் என்று பேர் வச்சு உமக்கு யென்ன வேணுமென்று கேட்டார்கள். அந்த சமயத்தில் வெள்ள காணியாட்சியான ஆனைமலை சாரலிலே காளிக்கை நாடு யென்னப்பட்ட பூமியை தாரவார்த்து செய்ய வேணுமென்று கேட்டுக் கொண்டார்.

ராயரவர்கள் கடாட்சம் செய்து யானை, சிமுருப்பலா பல்லாக்கு, உபய சாமரம், குடை, சூரியபான ஆலவட்டம், வெள்ளைக் கொடை பச்சைக் கொடை, பஞ்சவர்ண கொடை, பஞ்சவர்ண பெட்டி பாவாடை, அனுமான் டால், கெருட டால், மகர டால் பசவசங்கர டால் பஞ்ச வர்ண டால், ஆனை மேல் பேரிகை, ஒட்டகை மேல் நகாரு, குதிரை மேல் டங்கா, யெருது மேல் தம்பட்டம், தாரை, சின்னம், யெக்காளம், பூரிகை, சிந்தமேளம் இது முதலான வாத்தியங்கள் பிருதுகளும் கொடுத்து ரெண்டு பாதமும் கவிதுரையி, முத்துக்கொண்டை, பஞ்சகொண்டை, தண்டேகிரகு வீரசங்கிலி, நுக்காறும் புலி சேறபம், கரத்து யெந்த லக்ஷ்மிபிரி, தங்கவளையம், வீரகண்டாமணி, சாமதுரோக ஜயவெண்டையும் தங்க மிஞ்சி இது முதலான ஆபரணங்கள் எல்லாம் அலங்கரித்து குதிரைக்கு புலி தோல் மெத்தை மொகமட்டு, அனேட கவசம், முகசல்லி, பக்கசல்லி, கால் தண்டை கலிகி தாரி இது முதலான ஆபரணங்கள் தரிச்சு பட்டத்து குதிரையென்று நிருபம் செய்து பட்டணப் பிரவேசம் பண்ணுவிச்சு ஆனைமலை சாரலிலே காளிக்கை நாட்டு பூமிக்கு நீயே மானசதாராளாக ஆண்டு கொண்டு சந்திராதித்தர் உள்ள வரைக்கும் வம்ச பரம்பரையாய் மானசபுத்திரனாக ஆண்டு அனுபவிச்சுக்கொண்டு வர வேணுமென்று பட்டாபிஷேகம் செய்து பட்டத்து ஆயுதம் கையிலே கொடுத்து அனேகத்து நாலு ஆரகாரரை நிருபம் செய்து இரட்டை வாள், பச்சை சட்டை, சரிட்டி, வெள்ளி சட்டை, தங்க கட்டு துப்பாக்கி வெள்ளி மொளாப் துபாக்கி சிறுவாளுடைய இது முதலான ஆயுதங்களும் கொடுத்தார்கள்.

முன்னாலே நாகூர் பாளையப்பட்டு பட்ட குறுப்புக்காரர்கள் சரீர மான மறிபாதித குடுக்குரது மில்லை யென்று சொல்ல வளரெறுப்பு றாலே ராயர் முன்தானத்திலே காத்துயிருந்து தெய்வ கடாட்சத்தாலே சகல பிருதுகள் ஆயுதங்களும் உண்டாய் காளிக்கை நாட்டுக்குப் பாளையக்காரனாக காலிங்க ராய கவுண்டர் என்கிற பேர் பிரசித்திப் பட்டவராய்ப்பட்டு கட்டியங்களுடனே புறப்பட்டு ஆனைமலை சாரலிலே வேந்திரத்திலே தம்முடைய மாட்டுப் பட்டிகள் இருக்கப்பட்ட இடத்தில் சேர்ந்து ஆமணியும் கட்டு வீடுகள் உண்டு பண்ணி பூர்வத்தில் வனத்திலே மாடுகளுக்கு ஆதாரமாக தோப்பு

ஏற்படுக்கப்பட்ட ஊற்றுக் குழிகள் இருக்கப்பட்ட இடத்தில் ஊர் கட்டு விச்சபடியினாலே ஊத்துக்குழி யென்று கிராம நாமதேயம் உண்டாய் ஊற்றுக்குழி பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப் பட்டவரும் இருந்தார்கள்.

இராயர் சமுஸ்தானத்திலே காலிங்கராயக்கவுண்டர் என்கிற பேர் தெய்வ கடாட்சத்தினாலேயும் ராஜ கடாட்சத்தினாலேயும் பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப்பட்டு பாளையப்பட்டு உண்டான முதல் காலியாகவே சகாப்தம் 1120 முதல் சகாப்தம் 1712 வரைக்கும் ஞ 582க்கு பட்டக்காரருடைய வரிசைகளும் அவாளவாளுடைய சரித்திரமும் இதன் கீழே எழுதி வருகிறது.

வம்ச பரம்பரையாய் தெய்வ கடாட்சத்தினாலேயும் ராஜ கடாட்சத்தினாலேயும் காலிங்கராய னென்கிற பேர் வமிச பரம்பரையாய் பட்டகாரர்களுக்குப் பேர் உண்டாகி வருகிறது.

தெய்வ கடாட்சத்தினாலே சர்ப்பம் போன போக்கு வாய்க்காலும் வெட்டுவிச்சு அணையும் கட்டுவிச்சு காலிங்கராய னென்கிற பேர் பிரசித்திப்பட்டு வமுசா பிவிர்த்திலே காலிங்கராய னென்கிறவர் காலிங்க நாட்டுக்கு ஏகபுத்திரராய் காலிங்கராய னென்கிற பேரிலே ஊத்துக்குழி பாளையக்காரர் என்று பட்டாபிஷேகம் அவருடைய ஆள் வரைக்கும் ஏகபோகமான படியினாலே வமுசங்கள் ஒருநாளும் தெரியாமலே அனைத்தும் பாக்கியோருக்கும் காலிங்கராயன் அணை யென்றும் கலிங்கராயன் வாய்க்கால் என்றும் பேர் பிரசித்தி படலாச்சுது.

1. காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட ஞ 50
2. இவர் குமாரன் நஞ்சய காலிங்கராய கவுண்டர்
   பட்டம் ஆண்ட ஞ 40
3. இவர் குமாரன் அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர்
   பட்டம் ஆண்ட ஞ 21
4. இவர் குமாரன் நஞ்சய காலிங்க ராயக்கவுண்டர்
   பட்டம் ஆண்ட ஞ 20
5. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர்
   பட்டம் ஆண்ட ஞ 19
6. இவர் குமாரன் நஞ்சய காலிங்கராயக்கவுண்டர்
   பட்டம் ஆண்ட ஞ 21
7. இவருடைய தம்பி அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர்
   பட்டம் ஆண்ட ஞ 12

8. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 23

9. இவர் குமாரன் நஞ்சய காலிங்கராயக்கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 21

10. இவர் குமாரன் அகத்தூர் காலிங்கராயக்கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 16

11. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 9

12. இவர் குமாரன் நஞ்சய காலிங்கராயக்கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 26

13. இவர் குமாரன் விருமாண்டை காலிங்கராயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 30

14. இவர் தம்பி அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 11

15. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 20

16. இவர் குமாரன் மல்லைய மூர்த்தி காலிங்கராயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 8

17. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 15

18. இவர் குமாரன் அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 31

19. இவர் குமாரன் விருமாண்டை காலிங்கராயக்கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 23

20. இவர் குமாரன் பிள்ளை முத்துகாலிங்கராயக்கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 13

21. இவர் குமாரன் சின்னைய காலிங்கராயக்கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 19

22. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 20

23. இவர் குமாரன் நஞ்சய காலிங்கராயக்கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 30

24. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 26

25. இவர் தம்பி நஞ்சய காலிங்கராயக் கவுண்டர்
பட்டம் ஆண்ட ௵ 12

26. இவர் குமாரன் காலிங்கராயக்கவுண்டர்
பட்டம் ஆண்டது ௵ 24

27. இவர் குமாரன் நஞ்சய காலிங்கராயக்கவுண்டர்
பட்டம் ஆண்டது ௵ 2

28. இவர் தம்பி அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர்
பட்டம் ஆண்டது ௵ 4

| | |
|---|---|
| 28 | 582 |

முதல் பட்டக்காரனான காலிங்கராயகவுண்டர் நாளையிலே வெற்றிக்குழிபுரம் என்றுபண்ணி வெற்றிக்குழி பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப் பட்டவராய் கொங்கதேசத்து ஆலயம் முதலாகிய ஸ்ரீரங்கம், சிதம்பரம், கும்பகோணம், மாயவரம், திருக்கடையூர், ஆவுடையார்கோயில், ராமேஸ்வரம், தர்ப்பசயனம், மதுரை, பழனி யாண்டவர் பிரதட்சணமாகி பிராத பிற திரத்து மஹாஸ்தலங்களெல்லாம் யாத்திரை செய்து அந்தந்த ஸ்தலங்களுக்கு தர்மங்கள் அனேகம் பண்ணி யாத்திரைகள் தீர்ந்தவுடனே வெற்றிக்குழிக்கு வந்து தமது சமஸ்தானத்திலே தமக்குப் பிரசன்னமான இஷ்ட தெய்வத்தைக் கௌரி பிரதிஷ்டை பண்ணி அகத்தூர் அம்மனென்று திருநாமமாகப்பட்ட தேவாலயம் சீர்ணோத்தாரணம் பண்ணி அகத்தூர் அம்மனென்று பேர் பிரசித்திப்படும்படியாய் பூசை நிவேத்தியங்கள் செய்வித்துக்கொண்டு ராயசமஸ்தானத்திலே தாலுக்கு மாகாணபுத்திரர் இலாகாவுக்குச் சேர்ந்த வாரக்க ஜோட்டு வெள்ளை பள்ளத்துக்குத் தெற்கு, நல்லுருக்க நாடு பாலைத்துக்கு வடக்கு, பருத்திக்கே நாடு தானக்கரை பள்ளத்துக்கு மேற்கு, கம்பாலத்துறை மணலியாறுக்குக் கிழக்கு இந்த நான்கெல்லைக்கு உட்பட்ட கீழ் மேல் நாற்காதம் தென் வடல் இருகாதம் இந்த அத்து காரவழிக்க ஜோட்டு காடுகளை யெல்லாம் வெட்டுவிச்சு அந்தந்த இடங்களிலே நீர் பாய்ச்சு ஏண்டு பண்ணி குடிகளும் ஏற்று பண்ணிக்கொண்டு நன்செய் புன்செய் நிலங்களும் பண்படுத்தி நாடு ஊர் பாளையப் பட்டுகளுக்கு யெல்லாம் அருமையிலே அதிக மரியாதைக்காரனும் வெற்றிக் குழி பாளையக்காரர் என்று பேர் பிரசித்தி பட்டவர்களாய் அதி தர்மசாலியாய் பிரபுத்துவம் பண்ணிக்கொண்டு வந்தார்.

இரண்டாம் பட்டக்காரனான நஞ்சய காலிங்கராயகவுண்டர் நாள் முதல் எட்டாம் பட்டக்காரனான காலிங்கராயக் கவுண்டர் நாள் வரைக்கும் வெற்றிக்குழி பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப் பட்டவர்களாய் வம்சபரம்பரையாய் பண்ணப்பட்ட தருமங்களைப்

பரிபாலனம் பண்ணிக்கொண்டு அந்தந்த காலத்திலே ராஜ சமுஸ்தானாதிபதிகள் கட்டளையிட்டபடிக்கு சமுஸ்தானத்திலே ஆசரணையாயிருந்து நடந்துகொண்டு வம்மிசபாரம்பரியம் பாளையப்பட்டு ஆண்டு அநுபவிச்சுக்கொண்டு வந்தார்கள்.

ஒன்பதாம் பட்டக்காரனான தஞ்சய காலிங்கராயர் கவுண்டர் நாளையில் அக்காலத்தில் பாண்டிய சிம்மாஸனாதிபதியாக விசுவநாத நாயக்கர் எழுந்தருளியிருக்கிற நாளையில் சமுஸ்தானத்துக்குச் சேர்ந்திருந்த பாளையக்காரர்களை யெல்லாம் பேட்டிக்குத் தருவிச்சு மதுரைக்குப் போயிருக்கும் நாளையில் அக்காலத்தில் தட்சண பிரதேசத்து திருநெல்வேலி சீர்மையிலே அஞ்சுகோட்டை போட்டுக்கொண்டு அஞ்சிறுராஜாக்கள் என்றுபேர் சமஸ்தானத்து பிரபுக்களை நிராகரிச்சு யெதிர்பாளையம் போட்டுக்கொண்டு யிருக்கும் நாளையில் அந்த சமயத்தில் நாயக்கரவர்கள் உத்திரவுபடிக்கு யென் வமுசஸ்தனான தஞ்சய காலிங்கராய கவுண்டர் சேனைசேகரத்துடனே திருநெல்வேலி சீமைக்குப் போய் அஞ்சிறுராஜாக்களுடனே யுத்தம் செய்து யிந்த கோட்டையிலே யிருக்கிற அஞ்சிறுராஜா வெட்டி போட்டு கோட்டை கைவசம் பண்ணிக் கொண்டு யெதிராளி தலையும் கொண்டுவந்து நாயக்கரவர்கள் சன்னிதானத்திலே வச்சார். அப்போ நாயக்கரவர்கள் நீ பராக்கிரமசாலி யென்று ரொம்பவும் சந்தோஷப்பட்டு தங்க சிம்மாசனத்தில் சமுகத்துலே தலை போலே பண்ணிப்போட்டு யெதிரியின் தலையென்று காலுக்கு போடுகுற விருதும் குடுத்து பராக்கிரம தஞ்சய காலிங்கராய கவுண்டர் என்று பேரும் கொடுத்து ஆடையாபரணங்கள் முதலான ஆபரணங்களும் குடுத்து சகல வெகுமதியும் பண்ணி மதுரை ஆஸ்தான கோட்டைக்கு அன்பத்தி மூன் கொத்தளத்துக்கு சனம் வைக்கும்படியாக நிருதி செய்து பாளையப்பட்டு இராச்சியங்களை சந்த்ர சாசியாக அநுபவிச்சுக் கொண்டு வரும்படியாக நிருதி செய்த படியினாலே அந்த நாள் முதல் பதினெட்டாம் பட்டம் அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் நாள் வரைக்கும் மதுரை ஸமஸ்தானத்து கர்த்தரான நாயக்கரவர்கள் பரம்பரையிலே கட்டு பண்ணின நிருதி படிக்கு அமலுக்கு நடந்து கொண்டு வம்மிசபாரம்பரியமாய் பாளையப்பட்டு ஆண்டு அநுபவிச்சுக் கொண்டு வந்தார்கள்.

பத்தொன்பதாம் பட்டக்காரனான சின்னண்ணன் காலிங்கராயக் கவுண்டர் நாளையில் அக்காலத்துக்கு மயிசூர் சமுஸ்தானாதிபதிகளான கர்த்தாக்கள் முன்பிரபுத்துவம் பண்ணிக்கொண்டு வரும் நாளையில் யென் வமுசஸ்தனான யிருபத்தி மூணாம் பட்டக்கார தஞ்சய காலிங்கராய கவுண்டர் நாள் வரைக்கும் மயிசூர் சமுஸ்தானத்துக்கும்

மதுரை சமஸ்தானத்தாருக்கும் கனுவாயிக்குக் கீள்ப்பட்ட கெடிகளுக்காக யுத்த சண்டையாக யிருந்தார்கள்.

இந்நிலத்தி முழுவும்பட்டக்காரனுவ நஞ்சய காலிங்கருய கவுண்டர் நாளையில் கனுவாயிக்குக் கீள்ப்பட்ட கெடிகள் எல்லாம் மயிசூரு சமஸ்தானத்துக்குச் சேர்ந்துயிருக்கும் நாளையில் அக்காலத்தில் மயிசூரு சமஸ்தானத்துக்குக் கர்த்தராகிய இம்முடி ராஜஉடைய வற்கள் பேட்டிக்குப் போயிருக்கும் நாளையில் அக்காலத்தில் மயிசூரு சமஸ்தானத்துக்குச் சேர்ந்த கொடகற் சமஸ்தானத்துக்கு பெருந்து யிருக்கிறார்கள் யென்று பொன் வம்சஸ்தாற்களில் சன சேகரத்துடனே குமுத போகச் சொல்லி வுத்திரவு ஆனபடியினாலே சன சேகரத்துடனே கொடகுராசாவின் பேரிலே போய் யுத்தம் செய்து செயிக்க வந்தார்கள்.

அப்போ மைசூர் சமஸ்தான கர்த்தாக்கள் ரொம்பவும் சந்தோஷப்பட்டு அவ்விட சேனை தளவுளைக்கு தங்கருவாம் பூச்சு, பெட்டு கலசத்துடனே தண்டிகையும் கொடுத்து ஆபரணங்களும் கொடுத்து ஊற்றுக்குழி பாளையப்பட்டுக்கு அக்காலத்தில் சேர்ந்து யிருந்த கிராம(ம்) ஒன்பதுக்கும் வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ... 1750 பணம் கிஸ்தி செய்து உத்திரவு செய்தார்கள் அந்த நாள் முதல் என் சகோதரமான நஞ்சய காலிங்கருய கவுண்டர் அகத்தூர் காமிண்டராய கவுண்டர் பட்டம் ஆண்டுகொண்டு வந்த நாள் வரைக்கும் மயிசூரு சமஸ்தானத்தார் கட்டளையிட்ட கிஸ்திபடிக்கு அரமனைக்கு நடந்துகொண்டு ஊத்துக்குளி பாளையக்காற் யென்கு குறவாளாய் பட்டம் ஆண்டு கொண்டு வந்தார்கள்.

பூர்வம் முதலாக பொன் வம்சஸ்திருள்ள பாளையப்பட்டு ஆண்டு கொண்டு வரப்பட்டவர்கள். செவுதிய வுதார கெம்பீர குணசீலங்கள் உள்ளவர்களாகி யிருந்து மத்த பாளையக்காறர்களிலே அந்தந்த காலத்திலே அரமனைக்கு திருக்சிக்க யிருக்கப்பட்டவர்களையும் தமக்கு யெதிராயிருக்கப்பட்டவர்களையும் மட்டடக்கி கொண்டு ஊத்துக்குளியிலே கோட்டையும் பந்தோபஸ்து பண்ணிக் கொண்டு காலதளம் அய்யாயிரம், ஆறு குதிரை. ஆயுதங்கள் வச்சு யிருக்கப்பட்ட சனு... அய்யாயிரம் ஒரு கட்(ட)டம் யானை யிதுகளுடனே ஆனைமலை காடுகளிலே ஆனைகள் பிடிச்சு அரமனைக்கு குடுத்து கொண்டு அரமனையார் கட்டளையிட்டபடிக்கு நடந்து கொண்டு அரமனையார் கட்டளையிட்ட ஆனைமலை மாநசிறுயசம் பாளையம் பாதிகாரரும் முன்னாள் ஆகே பொதிக்கு கிரியன் ஒரு பணமும். மதிப்பு பயசரக்கு பொதி ஒன்றுக்கு ஒரு ரூபாயும் மகமை நடத்து வந்தபடியினாலே அந்த பாதிகாவலும்

மகமையும் அனுபவிச்சுக் கொண்டு அரமனையிலே கட்டு பண்ணின திருதி பணமும் செலுத்தி வச்சுக்கொண்டு பாளையப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு வரும் நாளையில் யென் முப்பாட்டனுத் நாளுலே பாதிகாவல் விட்டு போயி மங்கானத்து கோட்டைபட்டி ஜமீனின் பேரிலே மத்த சனகத்துலே யெட்டபள்ளியிலே விருந்து போயி விட்டார். யென் தொப்பனுற் நாள் முதல் காவல் மகமை நடந்து வந்தது.

யென் தகப்பனார் இரண்டு பேர் நாளையிலேயும் டிப்புகலகத்தால் அங்காயி நான் வரைக்கும் ஒரு நிருதியில்லாமல் சில்லறை கள்ளர் ஆங்காயிகளுக்கும் தொந்தரவுகள் பட்டு கொண்டு யிருந்தேன்.

பூர்வம் முதலாக வம்சாவளி முதலானதுகளுக்கு தஸ்தாவேசுகள் உண்டான ஆதரவுகள் முதலானதுகளும் கலாந்திரங்களிலே டிப்பு கலகத்திலே கை சோர்ந்து போய் விட்டபடியினாலே அகப்பட்ட-புஸ்தகங்கள் பரம்பரை நிறந்தங்கள் நாலேயும் மூனுகள் நாலேயும் பரம்பரையிலே அனுபவித்து கேள்விகளேயும் தெரிந்து கொண்டு யெழுதி தெரியப் படுத்தி கொள்ளவேணும்.

கலியுகாப்தம்-4811-க்கு மேல் செல்லாநின்ற பிரோதிகிருது வருஷம் மாசி மீ 4௳ தேதி கட்டளைத்தில் யெனக்கு பட்டமாய் குமாரசாமி நாயக்கருடைய கவுண்டன் யென்னப்பட்ட பேர் விளங்கி கொண்ட வருக யிருந்து டிப்புகலத்தால் துரைதனத்தில் சில்லறை கள்ளர் தொந்தரவுகள் பட்டுக் கொண்டுயிருக்கும் நாளையில் மஹாராஜ ராஜ ஸ்ரீ-கும்பினி துரைத்தனமாகுறது யென்று கொம்புலும் சந்தோஷத்தை அடைந்தவராய் முஞ்சு முன்னிலைகளை யெல்லாம் யெப்பாயி சீமையிலே வச்சு போட்டு, நான் ஆத்துக்குள்யிலே நாவலுலே காத்துக்கொண்டு கும்பினி தயவு கோரியிருக்கும் நாளையில் சித்திரார்த்தி வருஷத்திலே மஹா ராஜ ராஜ ஸ்ரீ பாளையங்கோட்டை கோட்டை மேசர் கமாண்டர் செமிதுரவலி சாயபு அவர்கள் மஹா ராஜ ராஜ ஸ்ரீ யெம் பாலி பவுகதார்களுக்கு பெலகாயம் பெரிய சேர்வை துரைகளாகிய சித்திரம்பட்டு சாமர் அவர்கள் மஹா ராஜ ஸ்ரீ செனரல் ஆட்டவி சாயபு அவர்கள் யெல்லெழுதப்பட்ட துரையவர்கள் யென் பேரிலே கடாட்சம் செய்து வந்தபடியினாலே நானும் துரையவர் கடாட்சத்தும்படி நடந்துகொண்டு வந்தனாயிருந்தபடியினாலே யென்னிடத்தில் பூர்ண தயவாக கடாட்சம் பண்ணிக்கொண்டு வந்தார்கள்.

மஹாராஜ ராஜ ஸ்ரீ கும்பினி துரையவர் கடாட்சம் செய்து யென் யோசனை மரியாதிகளை பரிபாலனம் பண்ணி ஆத்துக்குளிக்குச் சேர்ந்த ஒன்பது கிராமத்துக்கும் கவுண்டுமுதலான பேரிலே சாதவாரத்

செபந்தி தவிர பத்தில் மூணு பாளையத்தார் மிருசெத்தில் மூணு சாரி செய்து யிருக்கிறபடியினாலே சாதகவாற் செபத்தி தவிற பத்தில் பேரூ சர்க்காருக்குச் செலுத்திக் கொண்டு பெண் பட்டத்து ஆயுதங்கள் தயவு செய்து இருக்கிறபடியினாலே சாரி ஊத்துக்குழி பாளையகாற் வென்று பேராய் யிருக்கிறேன்.

மஹா ராஜ ராஜஸ்ரீ கும்பினி துரை அவர்கள் கடாட்சத்துக்குப் பாத்திரமான் குமாரசாமி காலிங்கராயக்கவுண்டன் என்கிற பேர் உள்ளவனும் என்வம்ச பரம்பரையிலே சம்ரட்சனை பண்ணப்பட்ட வாணுடைய சந்ததியிலே சேரப்பட்ட அடுத்த சன்மசயிதமாய் முத் தாறு சனத்துக்கு அனுமனனியாளியாய் காலட்சேபத்துக்கு மார்க்க மாய் நடப்பிவிக்கக் கொண்டு துரையவர் கட்டளையிட்டபடிக்கு நடந்து கொண்டு ம-ள-ள-ஸ்ரீ கும்பனி துரையவர் கடாக்ஷத்துப் பாத்திரனாக இருக்கிறேன்.

வைத்துருக்குழி காலிங்கராயக்கவுண்ட ன் ரூ.

*

# எமக்கலாபுரம் ஜமீன்தாருடைய

# வமுஸ்தாவழி கணக்கு

## டி. 3841

இந்த யெமக்கலாபுரம் வம்முஷாவழித்திதி கணக்கு ஓலைப்பட்டயத்திலிருந்து எழுதினது.

கலியுகம் 4520 சாலிவாகன சகாப்தம் 1341 மகாருசமானிய ஸ்ரீ ராயரவர்கள் சமஸ்தானத்தில் ராயரவர்கள் ராச்சியபரிபாலனம் பண்ணுகிற முன்னுக்கு என் முன்னோர்கள் காமயநாயக்கருடைய காலத்தில் காமுலக்கநாயக்கர் கடலூர் தேவரம்பட்டணத்தில் குடியாயிருந்து நாட்டாண்மை பிரதாபத்துடன் செய்துகொண்டு இருக்கையில் ராயரவர்கள் சமஸ்தானத்தில் லாயத்தில் ஒரு குதிரை மானதேசி யென்குற வண்டாறிய குதிரையிருந்தது. அந்தக்குதிரைக்கு ஆள் அடித்துப் போய் லகம் போடவும் சேணம் வைக்கவும் நில்லாது. அந்த குதிரையேறி திருப்புகிறதற்காக ராயரவர்கள் நிருபங்கள் சேர்மைக்கு வந்ததில் யென் முன்னோர்கள் காமுலக்கநாயக்கர் ராயரவர்கள் சமஸ்தானத்தில் போயிருக்கும்போது அந்த சமஸ்தானத்தில் கூடியிருக்கப்பட்ட ஜனங்களுக்கெல்லாம் குதிரையேறித் திருப்பும்படியாய் ஆக்கினை செய்தார்கள். அப்போது என் முன்னோர் காமுலக்கநாயக்கர் ராயரவர்களுக்குச் சலாம் செய்துகொண்டு லாயத்தில் நிற்கிற குதிரைக்கு லகமும் குடுத்து சேணமும் வைத்து குதிரை மேலேறிக் கொண்டபோது அகாயபிச்சாரி கடிவாளம் பத்து தாண்டிவிட்ட மாத்திரத்தில் எங்கும் நில்லாமல் மூணு நாள் வரைக்கும் காட்டுக்கு மேடு காடுகண்டது செடிகண்டது யெங்கும் போய்ப் பின்னையும் நாலா நாள் ராயரவர்கள் சமஸ்தான முன்னிலைக்குக் கொண்டு வந்து சாதுவாய குதிரை போலே தானே நடத்தினதில் ராயரவர்கள் வெகு சந்தோஷப்பட்டு மானதேசி யென்குற வண்டாறிய குதிரை மேல் கொண்ட காமுலக்கநாயக்கர் என்குறப் பேருங்குடுத்து சிங்கமுகப் பல்லாக்கு, பஞ்சவர்ண வெட்டுப்பாவாடை, சந்திரகாவி வெட்டுப்பாவாடை, உபய வெண்சாமரம், சந்திரகாவி டால், அனுமந்த டால், கருட டால், வெத்துப்பாட்டு, கருடகொடி, உபய பூச்சக்கிறக்குடை, குடை மேல் குடையும், வீரகண்டாமணி விருதும், சாமந்தரேக வெள்ளைடையும் கைப்பிடியிலக்கிறதத்து தன்தாமுதுகில் பெம்பலே, முத்துத்தாரும்,

முத்துமோகனமாலை, கண்ட சொடாலி, கொலு, வல்லயத்தில் முத்து மணிக்கட்டிய வாளா யுத்தயாதி விருதுகளுங் குடுத்து, ஒட்டகைமேல் நகரா, ஆனைமேல் அம்பாரியுங் குடுத்து. சிறிது பெருமதியளுஞ்செய்து, கூடலூர் தேவனும்பட்டணமும் பாளையப்பட்டாக இரும் விட்டுக் கொடுத்து, அனுப்பிவிச்சார்கள். அப்போது பாண்டிய தேசத்தில் பாண்டியராசாக்கள் துரைத்தனம் கெடுபாடு முயரவர்கள் கொட்டமும் ஞானமுறைப்க்கரார்களுடைய குமாரனாகிய விசுவநாதனாய்க்கரவர்களை வரவழைத்து மதுரைபுரிக்கிப் பட்டம் கட்டி அனுப்பிவிக்கிற போது என் முன்னோர்கள் யெடி மான்தேசியென்கிற வண்டனாகிய குதிரை மேல் கொண்ட காமுலக்கநாய்க்கரை வரவழைத்து நீ நம்ம செயகருமை படியினாலே நீ விசுவநாதனாய்க்கர் கூட சேதனைபூர்ச்சுப் போக வேணுமென்று உத்தரவான பேரைச்சுக் கூடவந்து சிறுமலைக்கு வடக்கு ஆரணியமான காடும் அதுக்கு வடக்கு எமக்கலாபுரம் வென்ற ஊரை யடுத்து படபுரம் வலசை யிறங்கினத்தில் குலதெய்வமாகிய கூட(ட)ல் அழகியபெருமாள் விக்காகாரமாய் அவ்விடத்தில் தானே யிருந்து கொண்டது. குலதெய்வமாகிய ஆகாச கன்னிமாரும் யெடி சிறுமலை அடிவாரம் ஆரணியமானக் காட்டில் நிலையாயிருந்து கொண்டது. அப்படி குலதெய்வம் தனது நிலையாயிருந்து கொண்ட படியினாலே யெடி யிடத்தில் தானே வலசையை நிறுத்திப்போட்டு யெடி விசுவநாதநாய்க்கர்அவர்களுக்கு மதுரைபுரி பட்டணம் போய்ச் சேர்ந்தபின்பிறகு யெடி விசுவநாதநாய்க்கரயவர்கள் சிறுது சனங்களுங் குடுத்து கோட்டை சுத்தி வெட்டி பத்திரமாய்க் காவலாக மதுரைபுரி கோட்டையில் தானையம் யிருக்கச் சொல்லி உத்திரவு கொடுத்தார். அந்த பேரைச்சு வெட்டி பத்திரமாக காவலாகக் கோட்டையில் யிருக்கும்போது யெடி விசுவநாதநாய்க்கரவர்களுக்கு விரோதமாகிய குலசேகரராஜாவன் படை யெடுத்துப் பாளையம் வந்து யிறங்கியிருந்த போது யெடி குலசேகரன் பாளையத்தின்பேரில் சண்டைக்குப் போகதற்கு விசுவநாதநாய்க்கர் அவர்கள் உத்திரவு வாங்கிக்கொண்டு யெடி பாளையத்தில் போய்ச் சண்டை செய்து அநேகம் தலைகளையும் வெட்டி முறியடிக்க வருகிற போது யெடி சொந்த ஜனிந்திருந்து மான்தேசியென்கிற வண்டனாகிய குதிரைமேல் கொண்ட காமுலக்கநாய்க்கரை வெட்டிக் காயப்படுத்தினதால் தெய்வீகமானார். அப்பால் விசுவநாதநாய்க்கரவர்கள் ஆள்விட்டு விசாரிச்சு புரோ(கி)தத்தை யெடுத்து தகனஞ்செய்தார்கள். அப்பால் வலசையிலிருந்த அவருடைய குமாரனாகிய அனந்தப்பநாய்க்கரை மதுரைபுரிக்கு வரவழைத்து உன்னுடைய தகப்பன் சண்டையில் இறந்து. போன படியினாலே நீ மலைக்கவேண்டியதில்லை யென்று அவர்களுடைய

சமஸ்தானத்திலே இருந்த விருதுசாகலாமல் பின்னுஞ்சிறுது விருதுகள் குருவைக்கி ஒத்தைநமுகர் சல்லி, முன்காஸ் வெண்கலயம், வெள்ளைக்குடைவெள்ளை யம், கவலையமரி, நாகசல்லி, பீச்சல்லி, சிங்கமுகத்து டுப்பு அண்டத்துமணி, புலித்தோல் முகமூட்டு வெடிக்கி ஒத்தைச் சல்லி, முகவைச்சல்லி மித்தைதயாறு விருதுகளுங் குடுத்து வேண்டிய வெகுமதி பணுஞ் செய்து திருமலைக்கி வடக்கு .... மேற்கு.

பொக்கலாபுரங்கிராமம் 1. செர்ப்பைகிராமம் 1. சாலூறப்பட்டிக் கிராமம் 1. பஞ்சாலம்பட்டி கிராமம் 1. இந்த கிராமங்களுக்குச் சிறுமலை யில் துர்க்கையம்மன் கல்ச் சிலைக்குக் கிளக்குப்பட்ட மலையும் இதும் விட்டு பொமக்கலாபுரம் பாளையப்பட்டென்று பேருண்டுபண்ணிக் குடுத்து அவருக்கு அனுப்பிவிச்சார்கள்.

அதேமேரைக்கு ஊருக்கு வந்து பொமக்கலாபுரம் காமுலக் கணுக்கரென்று பட்டப்பேரிட்டுக்கொண்டு அரமனைக்கிக் குமார வர்க்கமாக நடந்து வருவதில் கர்நாடகத் துரையவர் மதுரையிக் கோட்டைப் போட்டுக் கோட்டைக்கி 72 கொத்தளமும் போட்டு விச்சுப் பாளையக்காரரைக் கொத்தளங் காக்கும் படியாய் அவரவர் களுக்குக் கொத்தளம் பிரிவு நிர்க்கமிச செய்ததில் யிது காமுலக்கண க்குக்கர் குமாரன் அனந்தப்பனுக்கருக்கு திருமஞ்சனவாசல் பிற தெருவாசக ஏழாங்கொத்தளம் பிரிச்சுவிட்டு சிறுது சனங்களும் வைச்சுக்கொள்ளச் சொல்லியும் உத்திரவு குடுத்து யிந்த சொந்த பூமியை இனாமாக அனுபவித்துக்கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்க மாக நடந்து கொண்டு 30 வரு பாளையப்பட்டு துரைத்தனம் பண்ணி அதின் பேரில் தெய்வீகமானார். அப்பால் 2-ம் பட்டம் அவர் குமாரன் காமுலக்கணுக்கருக்குப் பட்டமாகிச் சொந்த பூமியை அனுபவித்துக் கொண்டு கொத்தளமுங் காவல் காத்துக்கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்கமாக நடந்து கொண்டு 35 வரு பாளையப்பட்டுத் துரைத்தனம் பண்ணி அதின் பேரில் தெய்வீகமானார். அப்பால் 3-ம் பட்டம் வருபயநாயக்கருக்கு பட்டமாகிச் சொந்த பூமியை இனாமாக அனுபவித்துக் கொண்டு கொத்தளக்காவலும் காத்துக்கொண்டு பாளையப்பட்டு துரைத்தனம் பண்ணிக்கொண்டு கர்த்தாக்களுக்கு குமார வர்க்கமாக நடந்துகொண்டு 17 வரு யிருந்து அதின் பேரில் தெய்வீக மானார்.

அப்பால் 4-ம் பட்டம் அவர் குமாரன் அனந்தப்பனுக்கருக்குப் பட்டமாகி சொந்த பூமியை இனாமாக அனுபவித்துக் கொண்டு கொத்தளக்காவல் காத்துக்கொண்டு 75 வரு துரைத்தனம் பண்ணி அதின் பேரில் தெய்வீகமானார். அப்பால் 5-ம் பட்டம் அவர் குமாரன்

காமுலக்கநாயக்கருக்குப் பட்டமாகி சொந்த பூமியை இனாமாக அனுபவித்துக் கொண்டு கொத்தளமும் காவல் காத்துக் கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்கமாக நடந்து கொண்டு 27 வருஷம் பாளையப் பட்டு துரைத்தனம் பண்ணி அதின் பேரில் தெய்வீகமானார். அப்பால் 6ம் பட்டம் அவருடைய குமாரன் வெங்கடநாயக்கருக்குப் பட்டமாகி சொந்த பூமியை இனாமாக அனுபவித்துக்கொண்டு கொத்தளமும் காவல் காத்துக்கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்கமாக நடந்துக் கொண்டு 33 வருஷம் பாளையப்பட்டு துரைத்தனம் பண்ணி அதின் பேரில் தெய்வீகமானார்.

அப்பால் 7ம் பட்டம் அவருடைய குமாரன் அனந்தப்பநாயக்கருக்குப் பட்டமாகிச் சொந்த பூமியை இனாமாக அனுபவித்துக் கொண்டு கொத்தளமும் காவல் காத்துக் கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்கமாக நடந்துக்கொண்டு 25 வருஷம் பாளையப்பட்டு துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானார். அப்பால் 8ம் பட்டம் அவருடைய குமாரன் காமுலக்கநாயக்கருக்குப் பட்டமாகி சொந்த பூமியை இனாமாக அனுபவித்துக்கொண்டு கொத்தளமும் காத்துக் கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்கமாக நடந்து கொண்டு 55 வருஷம் பாளையப் பட்டு துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானார். அப்பால் 9ம் பட்டம். அவர் குமாரன் வெங்கடநாயக்கருக்குப் பட்டமாகி சொந்த பூமியை இனாமாக அனுபவித்துக் கொண்டு கொத்தளமும் காத்துக் கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்கமாக நடந்துக்கொண்டு 30 வருஷம் பாளையப்பட்டு துரைத்தனம் பண்ணி அதின் பேரில் தெய்வீகமானார். இந்தப்படி 9 பட்டக்காரரும் கர்நாடக சமஸ்தானம் உள்ளவரைக்கும் முகன் மகன் தலைமுறையாய் சொந்த பூமியை இனாமாக அனுபவித்துக் கொண்டு வருகையில் ஸ்ரீரங்கப்பட்டணத்து மைசூர் கர்நாடக துரையவர்கள் இண்டிக்கல் சீர்மைக் கட்டிக்கொண்ட முன்னிலைக்கு வெங்கடநாயக்கர் குமாரன் அனந்தப்பநாயக்கருக்கு பட்டமாகிச் சொந்த பூமியை இனாமாக அனுபவித்துக் கொண்டிருக்கையில் இண்டிக்கல் சீர்மை அருள் வரிக்கி வெங்கிட்ட ராயவர்கள் இந்தப் பாளையப் பட்டுக்கு தோப்பாப்பணம் திருதி செய்து வெ 100 பணம் ஜாஸ்தித்து திருதி செய்து அமானிக்கி அந்த மேரைக்கிப் பணங்கட்டிக் கொண்டு 20 வருஷம் பாளையப்பட்டு துரைத்தனம் பண்ணி அதின் பேரில் தெய்வீகமானார்

அப்பால் அவர் குமாரன் காமுலக்கநாயக்கருக்குப் பட்டமாகி ஜும்தர் சாயபு நாளையில் முன்பகுதி 100 பணத்துக்கு மேல்...... 30 பணம் உபரி கட்டி ..130 திருதி செய்விக்கக் குடுத்தார்கள் அந்த

மேரைக்கு 130 பணம் செலுத்திவிச்சுக் கொண்டு சொந்த பூமியை அனுபவித்துக் கொண்டு 21 ௵ நாத்தவம் பண்ணி அதின் பேரில் தெய்வீகமானார். அப்பால் அவருடைய குமாரன் அனந்தப்பனுக்கருக்கு பட்டமாகி மீருசாயபு நாக்கியில் வசையதுசாயபு திண்டுக்கல் சீமை அமுல் வந்த முன்னிலைபிக்கி பணம் பகுதி செய்த 150 பணம் மேல் கூ பளி ... 300 பணம் கூட்டி ஆக ... 300 பணம் திருதி செய்தார்கள். அந்த மேரைக்கி அபயமிக்கி .. 300 பணம் குடுத்துக் கொண்டு வருகையில் தெய்வீகமானார். அப்பால் அவருடைய குமாரன் வருமனுக்கராகிய எனக்கு பட்டமாயி சனமிய ௵ வரைக்கும் சொந்த பூமியை அனுபவித்துக் கொண்டு வந்தேன். சாதாரண வருஷம் கும்பினியாயவர்கள் திண்டுக்கல் சீமை நாத்தனத்துக்கு வந்த மகாராசமானிய ருச ருசஸ்ரீ மக்களுட்டுதுரையவர்கள் அதிகாரத்தில் எம் பாளையம்பட்டுக்கு முன் விருதி செய்து குடுத்து வந்த .. 400 பணம் மேல் உ பளி , 150 பணம் கூட்டி ஆ ... 450வசைபருப்பு பணம் திருதி செய்துவிச்சபடிக்கு அதே மேரைக்கி துன்மதி ௵ வரைக்கும் சர்க்காருக்குச் செலுத்திவிச்சுக்கொண்டு வருகையில் துந்துபி ௵ பைமேஷ் சமாபத்தி நிருதி செய்விச்ச நிர்ணய .. 1620 பணம் ..... பணமும் 1212 ம் பசலி முதலில் 1230 ம் பசலி வரைக்கும் சாடாவாய் சர்க்காருக்கு செலுத்திவிச்சுக் கொண்டு வந்தேன். பைமீ சி-- ருஷம் பாரமாயி விருக்கபடியினாலேயும் மானூலாய் சேர்த்து வரப்பட்ட பூமியில் பைமேஷ் செய்ததுறபோது சிறுது நிலங்களை வெல்லாகத் தகுமென்று அமானியாயில் நிறுத்தி யிருக்குறபடியினாலேயும் காச்சல் உபத்திரத்தினாலே சிறுது குடிகள் மரணமாய்ப் போன படியினாலே குடிகள் பத்து ௵ அதிக நிர்ணயங்கள் குடுத்து சைமெலிந்து, ஓடிப் போய் விட்ட படியினாலேயும் என் ..... சாகுபடி நஷ்டம் வந்து பணம் செல்லாத நிமித்தியம் பிரமோதூத ௵ முதல் கும்பினியிலே சப்திபண்ணி யிருக்குறார்கள் சீர்மைக்கித் தீர்வை சவுக்கியமாய்செய்து இப்போது நாதனமான தருந்த பூமியெல்லாம் மானூல்படிக்கி சேர்த்துக்கொடுத்து அடியேன் பேரில் கும்பினியார் தயவுவைத்து காப்பாத்தி வடிசிக்கவேண்டியது.

# எறியோடு
# வல்லக் கொண்டம நாயக்கர் வமிசாவளி
## டி. 3012

எறியோடு (எரோடு) பாளையப்பட்டு ஜமீன்தாரி குழந்தைவேல் வல்லக் கொண்டம நாயக்கர் வமிசாவளி:- தறியாபத்து நிட்டல நாயக்கன் அய்யன் ராமய் கர்த்தாக்களாகிய திருமலை நாயக்கர் அவர்கள் நாளையில் அவர் தளவாய் இராமப்பையர் அவர்கள் சமஸ்த்தானதிகாரமும் செய்து கொண்டிருக்கும் போது கக்காம் பட்டியில் ராஜதானியாய் பாலமுக்கொண்டு முத்தைய்ய நாயக்கரவர்கள் தம்பி கோலைக்க முத்துவல்லக் கொண்டம்ம நாயக்கர் சிறு நாயக்கராகப் பட்டமாய் இப்படி இருக்கும் போது யிது கக்காம் பட்டி ஜமீன்தார் ஆகிய பாலமுத்துக்கய்ய நாயக்கர் மகையராப் பெண்டுகள் சிறு நாயக்கராகிய கோளைக்கமுத்து வல்லக் கொண்டம்ம நாயக்கர் பேரில் விரோதமாய் இவர் சாப்பிடுகிற அன்னாத்தில் மருந்து வச்சுக் கொல்லனும் என்று நினைச்சு பச்சை ... திலும் வச்சி சாதம் வைக்கும்போது யிவர் நித்தியமும் நாய்கள் பேரில் ... இருப்பார். அந்த நாய்களுக்கு முன்னே சாதம் வச்சி பிறபாடுதான் சாப்பிடுகுறது. அந்த வெகுமிக அன்னைக்கும் நாய்க்கு சாதம் வைக்கவும். அந்த சாதம் தின்னுது அது அங்கனே தானே செத்துப் போச்சுது. இதனை இவர் பார்த்து இந்த சமாசாரம் பண்ணினது சொல்லுங்கள் என்று தான் சாப்பிடாமல் குதிரையேறிக் கொண்டு எறியோடு வந்து சேர்ந்தார்.

எறியோடு கிராமத்தில் நாட்டாண்மைக் காரபேறியதுறிய காளை கவுண்டன் இடத்தில் பேற்படியார் வந்துசேர்ந்த உடனே அவனிடத்தில் நடந்த சமாசாரம் சொல்லி இனிமேல் என்றும் அன்னம் தேவையில்லை ........ யென்று சொன்னார். இது சமா சாரம் யிது கிராமம் நாட்டாண்மைக் காளைக்கவுண்டன் கேட்டு தன்னுடைய சொந்த ஆஸ்திகளை செலவு செய்து யிது கிராமம் எறியோட்டில் ஓர் ராத்திரிக்குள்ளாக மண்கோட்டையும் கட்டி அதில் அரண்மனை கட்டி வச்சிருக்குது. கொஞ்சம் சேவுகத்தில் சேகரம் செய்து இவரை ஏஜமானை விதானமாக வச்சிக்கொண்டு ஒரு மாசத்துக்குப் பின்பு பெரும்பள்ளிக்கோட்டை பேரில் சண்டைக்கிப் போயி சண்டை செய்து யிது கோட்டையும் கட்டிக்கொண்டு அந்தக்

கோட்டையில் இருந்துகொண்டு இருந்தார். அப்பால் நல்லமனு கோட்டைக் கிராமம், பாடியூர், வெள்ளத்தூர், மகரம்பாடி, மல்லுவார் பட்டி, ஆலங்குவாரபாடி, சிறுமலைத்தூர், இத்தூர், இந்த பத்து கிராமமும் கட்டி எறிக்கோட்டில் பிரியாதி இறு பசலி மாதம் இது கிராமம் நாட்டாண்மைக் காணிக்கவுண்டனும், அவனைச் சேர்ந்த காப்பிலியரும் இந்த கிராமம் நாட்டாண்மை காரரும் கூடி...யகாந்த அம்மை நாயக்கர் என்று சொன்னார் கன்னிவாடி அப்பைய நாயக்கரும் இவர்கள் எல்லாரும் கூடி மேலெழுதிய பாளையக் கொண்டு கொணக் கொண்டு வல்லக் கொண்டம நாயக்கருக்கு சபதினத்தில் பட்டம் கட்டி வைச்சார்கள். அவர் கர்த்தாக்களாகிய திருமலை நாயக்கரவர்கள் உத்தரவு பாக்கி நடந்துகொண்டு வகை திர்ப்பு கலிபணம் 4000 பணம் கொடுத்துக்கொண்டு வந்தார். அவர் பட்டம் இறு 30. ரெண்டாவது பட்டம் மேற்படியான் மகன் கறுங்கண்வல்லக்கொண்டம நாயக்கர் நாளையில் தென்னம்பட்டி கிராமம் 1 பாகநேத்தம் கிராமம் 1 கொம் பேரம்பட்டி கிராமம் 1 சிலத்து கிராமம் 1 இந்த நாலு கிராமமும் கட்டி வசப்படுத்திக்கொண்டு மேலெழுதிய பாகநேத்தம் கிரா மத்தில் விஸ்திரமாய் பரிசெண்டு கொத்தளத்துடனே கோட்டையும் கட்டி அதுவே ஏறுதாவியாக இருந்துகொண்டு அவர் பட்டம் இறு பத்து. மூன்றாவது மேற்படியான் மகன் ஆறுமுகவல்லக் கொண்டம நாயக்கர் நாளையில் சிங்காரக்கோட்டை கிராமமும், காவலப்பட்டி, கோவிலூரும் பாளையம், புத்தூர்கொம்பை, பஞ்சந்தாங்கி, அமிர்தூர் இந்த ஏழு கிராமமுங்கட்டி வசப்படுத்திக்கொண்டு அமிர்தூர் ஏறுதாவியாக கோட்டையும் கட்டிக்கொண்டு வைத்தாருந்தும். திண்டுக்கல்லில் வகை திர்ப்பு...5000 பணம் குடுத்துக்கொண்டு அவர் பட்டம் இறு முப்பது.

நாலாவது பட்டம் மேற்படியான் மகன் முத்துக்குமாரலிவல் வல்லக் கொண்டம நாயக்கர் நாளையில் மேற்படி திர்ப்புபடிக்கி கலி...5000 பணம் திண்டுக்கல்லில் ஆழ்வி பாளையக்காரருக்கு செலுத்திக் கொண்டு அவர் பட்டம் இறு 40. அஞ்சாவது மேற்படியான் மகன் முத்துக்குமாரலிவல் வல்லக்கொண்டம நாயக்கர் நாளையில் மேலெழு திய வகை திர்ப்புக்கு பணம் செலுத்திக்கொண்டு அவர் பட்டம் இறு பத்து. ஆறாவது மேற்படியான் மகன் முத்துக் குமாரலிவல் வல்லக் கொண்டம நாயக்கர் நாளையில் இது வகை திர்ப்பு மேனாதிக்கே திண்டுக்கல்லில் பிறுசாவுபு அவர்களுக்கு பணம் செலுத்திக் கொண்டு அவர் பட்டம் இறு 10. மேற்படியான் நாளையில் எதிரியோடு சீர்மையை ஜப்தி செய்து இருந்தபோது அவர்கட ஊரில் போயிருந்தார். ஜப்தி இறு 9.

நாயக்கர் நாளையில் கர்னல் ஹூராட்டு துரையவர்கள் திண்டுக்கல்லின் பேரில் சண்டை செய்து திண்டுக்கல் கைவசப்படுத்திக் கொண்டிருந்த போது யெ. முத்துக்குமாருவேல் வல்லக்கொண்டம நாயக்கரிடத்தில் யெ. கர்னல் ஹூராட்டு துரையவர்களுக்கு ..... கோட்டைக்கொண்டதில் அவர்கள் பட்டம் கட்டி வைத்தார்கள். இப்படியிருக்கும் நாளையில் மறுபடியும் வைசீது ராயபு திண்டுக்கல்லுக்கு வந்தவுடனே [illegible] பேரில் சண்டை செய்து யெ. முத்துக்குமாருவேல் வல்லக்கொண்டம நாயக்கரைப் பிடித்துக் கொண்டு திண்டுக்கல் மலை மேலே போட்டு வைத்தார். மலை மேலே அநேக வருஷம் இருந்தார். அப்போ [illegible] மாசம் 12. இப்படி இருக்கும் நாளையில் சாதாரண வருஷத்தில் மேஸ்தர் மக்லூர்ட்டு துரையவர்கள் திண்டுக்கல் கைவசப்படுத்திக் கொண்ட முன்னுக்கு மேலெழுதிய வல்லக்கொண்டம நாயக்கர் பேரில் தயவு செய்து கும்பினியார்க்குப் பிள்ளை என்று பட்டமும் கட்டி [illegible] வகை தீர்ப்பு வகையிட 7000 பணம் ஜீவிய செலவு போக்கிற்கு அனுப்பிவித்தார்கள். மேலெழுதிய சாதாரண ஆடி முதல் நாள் வரைக்கும் பட்டம் ஆண்டுக் கொண்டு வருகையில் [illegible] அவர்கள் திண்டுக்கலுக்கு [illegible] வந்திருந்த போது யெ. ஜமீன்தாரன் திண்டுக்கல்லுக்கு வரச் சொல்லி உத்திரவு கொடுத்ததில் யெ. ஜமீன்தார் சிறு பிள்ளையானதினாலேயும் காய்ச்சல் பத்தியில்லாததினாலேயும் உத்திரவுக்கு மாறு உத்திரவு வாரதின்று என்று சொன்னதினாலே திருச்சி புறங்கோட்டையிலிருந்து கொண்டு பட்டாளம் சண்டைக்கு வந்த போது யெ. ஜமீன்தார் ஓடிப் போய்விட்டார். அப்போ சீர்மை ஜப்தி செய்துக்கொண்டதின் பிறகு உடனே ஓடிப்போயிருந்த ஜமீன்தார் திண்டுக்கல்லுக்கு வந்து ஆறாக துரை அவர்கள் இடத்தில் வந்து இருந்தார். அப்போது துரையவர்களுக்குத் தயவு வந்து மாதம் 1க்கு நூறு ரூபாய் சம்பளம் செய்து கொடுத்து [illegible] இங்கேயே [illegible] படும் என்று உத்தரவு செய்திருந்தார்கள். அப்பால் மேஸ்தர் பேலீக துரையவர்கள் வந்த முன்னுக்கு யெ. ஜமீன்தார் முத்துக் குமாருவேல் வல்லக்கொண்டம நாயக்கரை மதுரைக்கி வரச் சொல்லி உத்தரவு வந்து இவர் போய் மேஸ்தர் பேலீக துரையவர்களைக் கண்டு பேசிக் கொண்டதில் அவர் சொன்னது- நீ ஆஜராய் இரு என்று சொல்லி இருந்தார்கள். அவர் துந்துபி வருஷத்தில் மதுரையில் தேக வியோகமாய்ப் போனார்கள். யெ. ஜமீன்தாருக்கு பிள்ளையில்லாததினாலே அவருடைய சகோதரமான சின்னசாமி வல்லக்கொண்டம நாயக்கரை தருவிச்சு அதற்படிக்கோர் சம்பளம் ரூபாய் 100 வரைக்கு நடத்தி வந்தது. இப்படி இருக்கையில் ஒரு வருஷத்துக்கு பின்பு என் அண்ணாவுடைய முத்துக் குமாருவேல் வல்லக்கொண்டம நாயக்கர் உடைய பெண்

சாதி சின்னக்கண்ணம்மாள் எங்கள் பட்டத்துக்கு அலங்காரமாய் விருதுகளுடைய சேர்ந்த தங்க நகைகளைக் கேட்டதில் அம்மாள் சொன்னது. ஜமீன்தார் பட்டத்துக்கு ஒன்றுமடையா மகனை எனக்கு குடுத்தாய் பட்டமும் கட்டி வைச்சி என்னிடத்தில் யிருக்கிற ஆஸ்தியும் குடுக்கிறேன் என்று சொன்னார்கள்.

இதுமேல் ஒன்றுக் கொண்டு விரோதமாய் மேல்நாட் போலீசு துரையவர்கள் கிட்ட சொல்லிக் கொண்டதில் நீங்கள் இருபேரும் ராஜிபட்டு வருகிறவரைக்கும் . . 80 . . . ரூபாயாக்கி அமானியே வச்சி... 20 . . . ரூபாய் சின்னக்கண்ணம்மாளுக்கு குடுத்து வருகுறீர்கள். யெடு பாளையபட்டுக்கு கிழக்கு ஆரு மாகாணம் எல்லை, மேல்க் கரட்டுக்கு மேற்கு, வேடசந்தூர், சேகரம், வெள்ளோ, பெரமனைப்பட்டி எல்லைக்கும் கிழக்கு; சாமனுநாயக்கர். ராமகிரி, சேகரம், நாகங்கோட்டை எல்லை. எல்லை ஆறுக்கும் தெற்கு; திண்டுக்கல் சேகரம் செட்டி நாயக்கன்பட்டி எல்லை பாலாறுக்கும் வடக்கு இந்த நான்கெல்லைக் குள்பட்ட பூமி விஸ்திரணம் ஏத்தேசம் நீள்மேல் தாளிகை 15 நாழிகை 10 இதில் அகப்பட்ட கிராமங்கள் விபரம்.

1. எரியோடு
2. பாகநத்தம்
3. பெரும்பள்ளி
4. நல்லமனார்கோட்டை
5. பாடியூர்
6. கோனத்தூர்
7. ஆலத்துவாரப்பட்டி
8. மாறம்பட்டி
9. மல்லதுவாரப்பட்டி
10. சீராமனத்தம்
11. சித்தூர்
12. தென்னம்பட்டி
13. பேலாத்து
14. கொம்பேறுபட்டி
15. கோவிலம்பட்டி
16. சிங்காரக்கோட்டை
17. வேலாயுதம்பாளையம்
18. புத்தூர்
19. பெரிய கோம்பை
20. பஞ்சந்தாங்கி
21. அயிதூர்

ஆக கிராமங்கள் இருபத்தொன்று 21. யிது வகையில் யிந்த கிராமங் களில் சேர்ந்த பாகஸ்வத்தும் கணக்கு நாச்சிமுத்துப் பிள்ளை 1818 ௵ ஆவணி மீ 30உ எழுதிவச்ச வரலாறு.

# காக்காவாடி வேங்கடாசல நல்லணைக் கவுண்டன் வமிசாவளி

டி. 3937

வெங்கல நாட்டுப் பட்டக்காரராகிய காக்காவாடி பட்டக்காரர் வேங்கடாசல நல்லணக் கவுண்டன் கயிபீயத்து.

தாராபுரம் தாலூக்காவைச் சேர்ந்த அரவக்குறிச்சி தாலூக்கா [illegible] 'காக்காவாடி' கிராமத்திலேயிருக்கும் வெங்கடாசல நல்லணை கவுண்டன் என்னப்பட்ட பட்டக்காரனுடைய வமிசாவளி மொதயாக கைபீயது என்னவென்றால் :-

பூர்வத்தில் குலகுல வம்சமான க்ஷத்திரிய சாதியில் ஸ்ரீ காளை ஹஸ்திபுரத்தில் வாசம்பண்ணும் ஈசுவர கடாட்சத்தினாலே பூவாது பஞ்ச ணிச் சுவாமியினுடைய அனுக்கிரகம் பெற்ற 'கன்னப்ப நாயனார்' என்கிறவருடைய வேட்டுவச் சாதியில் காளஹஸ்திபுரத்துக்கு ராஜா வான 'நாகராசர்' என்னப்பட்ட வமிச பரம்பரைகளிலே 'புத்திர ராஜாக்கள் கூட்டம்' ஐந்து பேர் பிரசித்தி பட்டவர்களாய் இருக்கும் நாளையில், அக்காலத்தில் கொங்கு தேசமான சேரன் ராச்சியத்தில் சில பிராமணன் செட்டியள் காணியாட்சிகாரராய் இருக்கிற நாளையில் அக்காலத்தில் ராச்சியாதிபதிகளான சேர, சோழ, பாண்டிய மூன்று ராசாக்களிடத்திலேயும் ஏற்பட்ட சாதியள்தான் நூறுபேரும் சேனைகளிலே குடிகளை மிகவும் அதிகாரம் பண்ணிக்கொண்டு இருக்கும் நாளையில் அங்காளிக்கு பொறுக்கமாட்டாமல் குடிகளான சில பிராமணன் செட்டியள் போய் பாண்டிய ராசா அவர்களிடத்தில் மனுவு சொல்லிக் கொண்டு அவர்கள் மூன்று பேரையும் செயிக்கிறதுக் காக வெகுவாது தன்பகைக் காரர்களிலே முத்துராசா கூட்டத்தில் பெரிய ஊராளி குடியிருக்கும் நல்லண்ணன் என்னப்பட்ட வனை அழைப்பிச்சு அங்காளி தீவர்த்த பண்ணசொல்லி பழயிறையிலே அவன் போய் மூன்று பேரையும் செயிச்சப்படியினாலே பாண்டியராசா பட்டமும் குடுத்து பட்டப்பேர் விளங்கும்படியாக தொப்புசிறாதுகள் மூதலானதுகள் யிதின்கீழ் வெளுதி வருகுறது.

பாண்டிய தேசாதிபதியான சவுந்திரபாண்டிய ராசா அவர்கள் நாளையில் ஊட்டுபடை செயிச்சபடியினாலே தேசிகாரன் காளகஸ்தி காரன் யிருவருக்கும் பட்டமும் குடுத்து பல்லக்கு, வெஞ்சாமரம், கருப்பு

வெட்டுப்பாளையம், உடையார் உகார், சமஸ்தானரோகநடவெண்டயம் இது முதலான பிருதுகளும் குடுத்து வெங்கலநாடு யென்னப்பட்ட நாட்டை(க்கு) சிறப்பாக்கின செட்டு பாளையக்காறதனமாய் நெருகப் பண்ணியிருந்தார்கள்.

அக்காலத்தில் பாளையக்காற பிறுப்பாத்துவகாரருடைய தேசிகாதன் காளதுஸ்தி ராசருடைய சமீகாதரனை சிவிப்பக்காரன் நல்லண்ணைக்காறர் இருவரும் பாண்டியராசா அவர்கள் கடம்பவத்துறையில் பட்டமும் கட்டிக்கொண்டு வெங்கல நாட்டு ஆம்பறுவதி தென்கரை பட்டக்காறரென்று பேர் பிரசித்தி பெற்றவர்களாயி இருந்தார்கள்.

பாண்டியராசா அவர்களுக்கும், பேறுராசா அவர்களுக்கும் தாரதுப்பட்டு அக்காலத்தில் பாண்டியராசா அவர்கள் தம்முடைய ஸபையில் இருக்கப்பட்ட பாளையக்காரரை வரச் சொல்லி உத்திரவு செய்துயிருக்கும் வேளையில் அந்தச் சமயத்தில் வெங்கலநாட்டு நல்லண்ணை வெட்டிக்கு வெற்றிக்கு வெட்டிக் கொண்டு வரச் சொல்லி உத்தரவு செய்திருக்கும் வேளையில் அது வெகு பெரிதாயிருப்பதை யென்று பிரதிவாதித்துக்கைக காலை வெட்டி வேகம் பண்ணினார்கள். அதுமுதல் மேற்படி நாட்டுக்கு வெங்கல நாடென்று பேர் கொடுத்தார்கள்.

இப்படிக்கு பட்டம் ஆண்டு வருங்காலத்தில் பொருதுமாளையம் பிறவில் தலைமுறைகள் இத்தனையென்று தெரியவில்லை.

சாலிவாகன சகாப்தம் 1381க்கு சித்திரபானு ௵ முதல் பட்டம்கதுடைய வமிசங்களும் அவரவருடைய நடத்தைகளும் இதன் கீழே யெழுதி வருகிறது.

1. முதல் தலைமுறை செட்டி நல்லண்ணைக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ௵ 32
2. யிவர் குமாரன் நல்லண்ணைக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ௵ 28
3. யிவர் குமாரன் நல்லண்ணைக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ௵ 26
4. யிவர் குமாரன் செட்டி நல்லண்ணைக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ௵ 23
5. யிவர் குமாரன் பசுபதி நல்லண்ணைக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ௵ 21
6. யிவர் குமாரன் வெங்கிட்டாசல நல்லண்ணைக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ௵ 34

7. இவர் குமாரன் பெரிய நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ௵ 23

8. இவர் குமாரன் பசுபதி நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ௵ 29

9. இவர் குமாரன் பெரிய நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ௵ 28

10. இவர் குமாரன் செட்டி நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ௵ ?

11. இவர் குமாரன் பசுபதி நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ௵ 17

12. இவர் குமாரன் பசுபதி நல்லண்ணக் கவுண்டன்
பட்டம் ஆண்டு ௵ 33

| | |
|---|---|
| 12 | 300 ? |

சாலிவாகன சகாப்தம் 1709க்கு பிலவங்க ௵ வரைக்கும் பட்டம் ஆண்டு 12க்கு ஆண்டு ௵ 326. முதல் தலைமுறை பட்டக்காரனான செட்டி நல்லண்ணக் கவுண்டன் நாளையில் தன்னுடைய சகோதரான் சேதிகரன் சீட்டத்தில் பிரிவு பண்ணி கொண்டு பட்டக் காரப்பிள்ளை என்று பேற் பிரசுத்தி பட்டவராய் காக்காவாடி கோ(ட்)டை முதலானதுகள் உண்டு பண்ணி கொண்டு சிறிது சமஸ்தானத்தோ சறுகாருக்கு பேஷ்கஸும் ஊழியம் செய்து கொண்டு கிராமமும் அநுபவிக்கக் கொண்டுயிருந்தார்கள்.

அதின் பிற்காலம் ஒன்பதாம் தலைமுறைகாரரான பெரிய நல்லண்ணக் கவுண்டன் நாளையில், அக்காலத்தில் ராச்சியாதிபதியான மதுரை சமுஸ்தானத்துக்கு கர்த்தராகிய நாயக்கரவர்கள் குட்டத்து துரைத்தனத்தில் பாளையப்பட்டுகாரர்களில் ராமகிரி சாமய நாயக்கர் ...கிர முளிங்கி முற்கேதைகான் யிறுவது சீமைகளிலே கிலவை பண்ணி அங்காமி பண்ணி கொண்டிருக்கும் நாளையில் அநடவையாத் உத்திரவு படிக்கு அவாளை செயிக்க அங்காமியை நிறுத்திறபடியினாலே நாயக்கரவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டு பொகுமதி பண்ணி முத்து துரைசி பிறுது கொடுத்தார்கள்.

பனிரெண்டாம் தலைமுறைகாரனான பட்டக்காரன் மென் தோப் பனுருனா பசுபதி நல்லண்ணக்கவுண்டன் நாளையில் அக்காலத்தில் மயிசூரு சமுஸ்தானத்துக்கு கர்த்தாக்களுடைய காரியத்துக்கு கர்த்தரான தளவாயி நஞ்சராயர் நாளையில் திருச்செங்கோட்டைப்பள்ளியாத்

பேரிலே பாளையம் எடுத்து போனபோது சிறிது சனங்களுடனே கூட வரச்சொல்லி உத்திரவு செய்தபடியினாலே கூட போய் இருக்கும் சமயத்தில் திருச்சிறாப்பள்ளிக்குச் சேர்ந்த சமயபுரத்தில் திருச்சிறாப் பள்ளியாருக்கு ஏதுகள் சேர்ந்திருந்தபடியினாலே அப்போ மைசூர் கர்த்தாக்களின் தளவாய் நஞ்சிராஜனை அவிதாள்லிகான் கட்டளைப்படி நல்லெண்ணைக் கவுண்டனையும் இருவரையும் அனுப்பிச்ச அந்த ஏதுகளை வெட்டி பிடுங்கிக் கொண்டுவரச் சொல்லி உத்திரவு பண்ணினார்கள்

சமயபுரத்திலே யிருக்கும் திருச்சிறாப்பள்ளியார் ஏதுகளுக்கு காத்திருந்த சனங்களை அடிச்சு துரத்திவிட்டு அந்த சமுதாயத்தையும் வெட்டி ஏதுகளை எல்லாம் பிடுங்கிக் கொண்டு தளவாய் நஞ்சராய அவர்கள் இடத்தில் கொண்டு வந்து வச்சபடியாலே தங்களையும் பதக்கம், முத்து, ஒட்டி முதலான வெகுமதிகள் பண்ணினார்கள்.

சாலிவாகன சகாப்தம் 1710க்கு மேல் ஜெயமன்ன பசுபதி நல்லண்ணைகவுண்டர் தெய்வகதி அடைந்தார். அன்னேரத்தில் கீலக வருஷம் ஆவணி மீ 15ல் புதன்கிழமை நாள் அக்காலத்தில் டிப்புசுல்தான் துரைத்தனத்தில் அரண்மனையார் கட்டளைப்படிக்கு நாடனையூரார் கூடி பட்டமுங்கட்டி வேங்கிடாசலநல்லண்ணை கவுண்டன் என்னைப் பட்டம் பேர் விளங்க பண்ணினார்கள்.

முன்னாலே பூர்வத்தில் எங்கள் வமிசத்திலே யெங்களுக்கு பட்டய வர்த்தியாதி வெள்ளில நாட்டு கிராமங்களிலே புஞ்சை தோட்டம் உள்பட பெரியதொரு நஞ்சையிற் காணி 30. இது சருவமானியமாகி நடந்து வந்தது "டிப்பு சுல்தான்" நாளையில் ஜெப்தி பண்ணிக் கொண்டார்கள்.

இது மகா ராஜ ராஜஸ்ரீ "தம்பியவர்கள்" அவர்கள் தயவுக்குப் பாத்திரமாய் சாக்கிரதையாய் குடியிருப்புக் காரனாய் குடித்தனம் பண்ணிக்கொண்டு காத்துயிருக்கிறேன்.

வெங்கடாசல நல்லண்ணைக் கவுண்டன் ருசவு.

# காங்கயம் பல்லவராய கவுண்டன் வம்சாவளி

டி. 2865

தாராபுரம் துக்குடி காங்கயம் தாலூக்கா கசபா காங்கயத்திலே யிருக்கும் பல்லவராய கவுண்டன் என்னப்பட்ட வேட்டைக்காரனுடைய வம்சாவளி முதலான கயிபியது என்னவென்றால் :-

பூர்வத்திலே சோழ தேசத்தில் தொண்ட மண்டலத்து வெள்ளாளர் என்று பேர்பட்ட வடக்குடி 48000 பகுக்குடி 12000 ஆக 60000 கோத்திரக் காரர்களில் வடக்குடி 48000 கோத்திரத்தில் 8000 கோத்திரக்காரர் சோழ ராசாவை சேர ராசா கேட்டுக்கொண்ட படியினாலே 8000 கோத்திரக் காரரையும் சேர ராசாவுக்குக் கொடுத்தார். அப்போ தொண்ட மண்டலத்திலேயிருந்து தென்திசை நோக்கி வரப்பட்ட வெள்ளாளருக்கு தென்திசை வெள்ளாளர் என்று பேர் வரப்பட்டவர்களாயி சேர தேசத்தில் வந்து யிருந்த யிடத்தில் பூர்வத்தில் இந்தச் சேர தேசத்தில் குடித்தனம் பண்ணப்பட்ட மாவிலவன், பூவிலவன், காவிலவன், வேடன், வெட்டுவன் இந்த சாதிகளுக்கு யிருக்கப்பட்ட காணிகளிலே இந்த வெள்ளாளருக்கு பாதி பிரிச்சு பெலம் பண்ணி குடுத்தார்கள்.

அக்காலத்தில் கொங்கு வெள்ளாளரென்றும் யிருபத்து நாலு நாடு என்றும் பேதப்பட்டு யிருக்கும் காலத்தில் அந்த நாளையிலே பூந்துறை நாட்டில் சித்தெழுந்தூர் என்னப்பட்ட கிராமத்தில் குடியிருப்புக் காரனும் இருக்கப்பட்ட வெள்ளாள சாதியில் செங்கண்ண கோத்திரத்தில் லிங்கண்ணா என்னப்பட்டவனுக்கு நாலு பிள்ளைகள் பிறந்து யிருக்கும் நாளையில் அந்தப் பிள்ளைகளிலே ஒருவன் யாடு மேய்ச்சுக் கொண்டு யிருக்கும் நாளையில் காங்கயம் கிராமத்தில் அக்காலத்தில் காங்கயத்துக்கு காணியாளராயிருக்கப்பட்ட பெருங்குடி கோத்திரத்தில் வேல்கவுண்டன் யென்னப்பட்டவனுக்கு சகோதர மற்றுமாயி ஒரு பெண் பிறந்தபடியினாலே அந்தப் பெண்ணை கலியாணம் பண்ணிக் கொண்டவனுக்கு தன் காணியிலே காணியாட்சி குடுக்கிறோமென்று சொல்லியிருந்த சமயத்தில் சித்தெழுந்தூரு லிங்கண்ணன் (என்பான்) யாடு மேய்க்கக் கொண்டிருந்தவன் கலியாணம் பண்ணிக் கொண்டு காங்கயத்தில் காணியும் வாங்கிக்

செய்து காரியத்துக்கு காணியாட்சிக்காரராயிருக்கும் நாளையில் சவுதலைத்தனமாயிருக்கப்பட்ட பெண்பிள்ளைக்கு லிங்கக் கவுண் டன் என்னப்பட்டவன் புறந்து சுகத்திலே யிருந்தார்கள்.

லிங்கக் கவுண்டன் என்னப்பட்டவன் வீரவைத்தராயி பிறப் பட்டு சோள தேசாதிபதியான திரிபுவனச் சக்கிரவர்த்தி யென்னப் பட்ட சோள ராசபட்டத்தில் சேர்ந்துயிருக்கும் நாளையில் அக்காலத் தில் பல்லவனென்னப்பட்ட சர்தார் பெருகுறு நாயி சோள ராசாவுக்கு விரோதமாயி இருக்கும் நாளையில் சோள ராசாவானவர் அந்தப் பல்லவனைச் சம்மாரம் பண்ணி செயிச்சவனுக்குச் சகல வெகுமதிகளும் பண்ணி கொடுக்கிறேனென்று தம்முடைய சேர்வைகாரருக்கு எல்லாம் அறியப் பண்ணியிருக்கும் நாளையில் மேல் எழுதப்பட்ட லிங்கக் கவுண்டன் நான் பல்லவனை சம்மாரிச்சு செயம் பண்ணி வருகிறேன் என்று வெத்திலை பாக்கு வாங்கிக் கொண்டான்.

லிங்கக்கவுண்டன் சிறிது பவுசுகளாக கூட்டிக்கொண்டு சோள ராசாவிடத்தில் உத்திரவு வாங்கிக் கொண்டு, ராசாவிடத்தில் ஆயுதம் வாங்கிக்கொண்டு பல்லவனை கைபிடியாயி பிடிக்க வேணுமென்று யுத்தம் பண்ணுகிறபோது அந்த பல்லவன் பெருகுதாரும் வியாபிக்க வடக்கே உத்திர தேசத்திலும் பல்லவனைத் தொடர்ந்து வெகுநாள் சண்டை பண்ணி பல்லவனைச் சம்மாரம் பண்ணி பல்லவன் தலையைக் கொண்டு வந்து சோள ராசா அவர்களிடத்தில் வைச்சபடியினாலே சோள ராசா மிகவும் சந்தோஷப்பட்டு பல்லவனுக்கு உபயசாமரம், ஆலியபட்ட விருதுகளான சகல வெகுமதிகளும் கொடுத்து லிங்கப்பல்லவனென்று பேரும் கொடுத்து தம்மிடத்தில் சகல காரியத்துக்கும் முதன்மைக் காரராய் வைச்சுக்கொண்டு யிருந்தார்கள்.

அந்த நாள் முதல் லிங்கம பல்லவனென்று பேர் பிரசித்திப் பட்ட வராயி சோள ராசாவிடத்தில் காரியஸ்தகர்த்தராயி ராசசெம்பிர வண நாட்டில் வம்ச பரம்பரையாயி குடியிருப்புகாரராயி சோழ ராசா அவர்கள் இருந்து கொண்டு கட்டளையிட்டபடிக்கு நடந்து கொண்டு யிருந்தார்கள்.

சோளராசா பட்டத்தில் அனேகர்த்தராயியும் காரியத்துக்கு காணியாட்சிக்காரராயும் பிரகத்திப் புருஷராயி யிருக்கும் நாளை யில் வம்ச பாரம்பரையிலே உத்தம பல்லவரெங்குறவர் புயாங்கயிலே காங்கைநாடு குடியிருப்புக்காரரா யிருந்தார்கள்.

மேல் கலத்தில் எழுதப்பட்ட உத்தம பல்லவரென்னப்பட்டவர் குமாரன் சிதம்பர பல்லவரென்கிறவர் அதி புத்திசாலியாயி விரா

ரிக்கக் கொண்டு யிருக்கும் நாளையில் அக்காலத்திலே தக்ஷண சிம்மா சனாதிபதியான நரபதி விஜயநகரம் பெனுகொண்ட ஆனைப்பட்டி ராயர் சமுகத்துக்குப் போய்ச் சேர்ந்து காத்திருந்தார்.

சிறிது நாள் ராயர் சமுகத்தானத்தில் காத்திருக்கும் வேளையில் அக்காலத்தில் மகாராஜ சமஸ்தானாதிபதியான நரபதி தெலுங்ராயர் அவர்களிடத்தில் ஒருநாள் பேட்டி பண்ணி கொண்டு தன்னுடைய முன்வம்ச பரம்பரையிலே லிங்கயபல்லவனுடைய செயசிய காம்பிளிங்க மலைவாய் அறிக்கைப் பண்ணிக் கொண்டு யிருக்கும்பட்டத்தில் ராயரவர்களுக்கு கடாட்சம் வந்து சிதம்பர பல்லவனுடைய பக்தி குணங்களுக்கு சந்தோஷப்பட்டு நீ போகு நாளாயி இந்த சமஸ்தானத்திலே வியாபிக்கக் கொண்டு யிருக்குறபடியினாலே உன்னிடத்தில் நமக்கு மிகவும் சந்தோஷமாச்சுது என்று பூர்வத்தில் சோள ராஜா வாலே சகல போகுமதிகளும் பெற்று யிருந்தவனே யென்று சொல்லி உன்னுடைய செம்ம பூமி பிரதேசத்திலே யிருமென்று பல்லாக்கு உபசாமரம் சுருட்டி கொடை முதலான விருதுகள் குடுத்து பல்லவராயர் என்கிற பேரையும் கொடுத்து சகல விபவத்துடனே பட்டமும் கட்டி தங்களுடைய ராச்சியாதிபத்தியத்துக்குச் சேர்ந்த காங்கய நாட்டுக் காங்கயம் சிறுமம் ஒன்னு இனாமாகக் கொடுத்து நாட்டிலே பெரியதனக்காரனாயி யிருக்கும் படியாக கட்டளையிட்டு சிறிது சனங்களையும் குடுத்து அனுப்பி வச்சார்கள்.

சாலிவாகன சகாப்தம் 1301க்கு சித்திரபானு ௵ சைத்திர மீ சுக்கில பட்சம் பஞ்சமி சுக்கிரவாரம் ரோகணி நட்சத்திரம் சுப யோக சுப கரணமும் பெற்ற சுபதினத்தில் காங்கய நாட்டுக்கு பெரியதனக்காரனாகி பட்டாபிஷேகம் பண்ணிக் கொண்டவராயி சிதம்பர பல்லவராயர் என்கிற பேர் பிரசித்திப் பட்டவராய் காங்கயத்திலே யிருந்து பிரபுத்துவம் பண்ண ௵ 141.

இவர் குமாரன் அமராபதி பல்லவராயர் பிரபுத்துவம் ௵ 56 இப்படி அமராபதி பல்லவராயர் என்றும் சிதம்பர பல்லவராய னென்றும் இந்த ரெண்டு பேர்கள் பட்டப்பேராயி வச்சுக்கொண்டு வருகிறது. சாலிவாகன சகாப்தம் 1301 முதல் சகாப்தம் 1499 வரைக்கும் பிரபுத்துவம் பண்ணி வந்த பட்டம் 6க்கு ஆண்டு ௵ 199.

சாலிவாகன சகாப்தம் 1500 பொகுதானிய ௵ முதல் சகாப்தம் 1559க்கு சகவது ௵ வரைக்கும் ௵ 60க்கு ஆண்டு வந்த பட்டம் 4க்கு அமராபதி பல்லவராயக் கவுண்டர் பட்டம் 1. இவர் குமாரன் சிதம்பர பல்லவராய கவுண்டற் பட்டம் 1. இவர் குமாரத் சிதம்பர பல்லவராய கவுண்டன் பட்டம் 1.

மேல் எழுதப்பட்ட 12 பேர் பட்டக்காரர் வம்ச பரம்பரையாகி அவர்களுடைய பட்டத்தையன் முதலானதுகள் ஒன்றும் தெரியவில்லை.

1. சாலிவாகன சகாப்தம் 1560 போகு தானிய (வெகு தானிய) ஷ்ரு ஆனி மீ 1-ம் தேதி முதல் நந்தன ஷ்ரு ஆவணி மீ 30உ வரைக்கும் அமராபதி பல்லவராய கவுண்டர் பட்டம்.

2. இவர் குமாரர் நந்தன ஷ்ரு புரட்டாசி மீ முதல் ஸ்ரீமுக ஷ்ரு ஆடி மீ வரைக்கும் சிதம்பர பல்லவராய கவுண்டர் பட்டம்.

3. இவர் குமாரர் ஸ்ரீமுக ஷ்ரு ஆவணி மீ முதல் நந்தன வருஷம் மார்கழி மாதம் வரைக்கும் அமராபதி பல்லவராய கவுண்டர் பட்டம்.

4. இவர் குமாரர் நந்தன வருஷம் மாசி மாதம் முதல் ரத்தாட்சி வருஷம் ஆவணி மாதம் வரைக்கும் சிதம்பர பல்லவராயக் கவுண்டர் பட்டம்.

5. இவர் குமாரர் ரத்தாட்சி வருஷம் புரட்டாசி மாதம் முதல் தாது வருஷம் வைகாசி மாதம் வரைக்கும் அமராபதி பல்லவராயக் கவுண்டர் பட்டம்

6. இவர் குமாரர் தாது வருஷம் ஆனி மீ முதல் ஜய வருஷம் மாசி மாச வரைக்கும் சிதம்பர பல்லவராய கவுண்டர் பட்டம்.

7. இவர் குமாரர் ஜய வருஷம் மாசி மாச முதல் விரோதிகிருது வருஷம் கார்த்திகை மீ வரைக்கும் அமராபதி பல்லவராயக் கவுண்டர் பட்டம்.

மேல் எழுதப்பட்ட பட்டம் 7-க்கு சாலிவாகன சகாப்தம் ஷ்ரு 1713 வரைக்கும் ஷ்ரு 153.

ஏழாவருக்குள் அமராபதி பல்லவராயகவுண்டர் அவர்கள் நாளையில் அக்காலத்தில் ராச்சியம் பிறபுத்துவமான பாண்டியதேசாதி பதியான சொக்கநாத நாயக்கரவர்கள் நாளையில் கொங்கு இருவத்தி நாலு நாட்டுக்கும் கட்டளையும், கட்டமனை 1க்கு ஆறு நாடுமேனி வீதத்தில் பிரோட்டு கட்டமனைக்கு அமராபதி பல்லவராயகவுண்டரவர்களை சுவாதீனம் பண்ணி கொடுத்து மேற்படியாருடைய அரமனையார் கட்டளையிட்டபடிக்கு பலம் முதலானது செலுத்திக் கொண்டு பிரோட்டு கட்டமனைக்குச் சேர்ந்த ஆறு நாட்டுக்கு பெரிய துலக்காரராகி பெருமிதத்தி புருஷராய் இருந்தார்கள்.

அதின் பிற்காலம் அஞ்சாவது புருஷன் அமராபதி பல்லவராய கவுண்டர் அவர்கள் நாளையில் அக்காலத்தில் மதுரை சமஸ்தானத்துக்கு கர்த்தராகிய நாயக்கரவர்கள் காரியகர்த்தரான ரங்கா ரெட்டியார் அவர்கள் கனுவாயின் பதிவெட்டு கெடிக்கும் அதிகாரமாயி இருக்கும் வேளை அமராபதி பல்லவராய கவுண்டர் அவர்கள் இடத்தில் மிகவும் தயவு செயிது அபிரீதியாய் இருக்கும் நாளையில் ரங்காரெட்டியார் அவர்களுக்கு இவ்வளவு பாளையப்பட்டாராலே துவ வருத்தம் வந்து நேரிட்டிருக்கும் போது அந்த சமயத்திலே அமராபதி பல்லவராய கவுண்டர் அவர்கள் சாமபேத தான தண்ட முதலுபாயங்களாலேயும் நிறுத்து சனங்களைக் கூட்டிக் கொண்டு போய் இவ்வளவு பாளையப்பட்டுக்காரரெல்லாம் செயிக்க வந்தபடியாலே ரங்காரெட்டியார் ரொம்பவும் சந்தோஷப்பட்டு கனுவாயின் பதிவெட்டு கெடிக்கும் சகல காரியங்களுக்கும் முதல்வைகாரராயி இருந்தார்கள்.

அதின் பிற்காலம் ரெண்டாவது புருஷன் பாட்டனான சிதம்பர பல்லவராய கவுண்டர் அவர்கள் நாளையில் அக்காலத்தில் ராச்சியம் பிறப்புத்துவம் பண்ணப்பட்ட அயிதரலிகான் துரைத்தனத்தில் காங்கய நாட்டில் காங்கயம் 1 கண்ணபுரம் 1 வெள்ளகோவில் 1 பாப்பாணி கிராமத்தில் பாதி களைநத்தம் பிறவு 1 இந்த கிராமங்கள் முதலிலே பிரிச்சுக்கொண்டு இருந்தபடிக்கு தம்முடைய சேர்க்கை கொண்டு அரமனையாற் கட்டளையிட்டபடிக்கு பணம் செலுத்திக் கொண்டு இருக்கும் நாளையில் டிப்புசுல்தான் அவர்கள் அரமனைக்கு பணம் செல்லவில்லையென்று துராக்கிருதமாய் சிதம்பர பல்லவராய கவுண்டர் அவர்களையும் அவர் குமாரன் அமராபதி பல்லவராய கவுண்டர் அவர்களையும் செனகிரியில் கையிது வச்சிருந்து அதுக்கு பிறகு ஸ்ரீரங்கப்பட்டணத்துக்கு தருவிச்சு விசாரனை செயிது விடுதலை பண்ணின சமயத்தில் சிதம்பர பல்லவராயக் கவுண்டர் அவர்கள் தெய்வகதியை அடைந்தார்.

அதின் பிற்காலம் என் தகப்பனார் அமராபதி பல்லவராய கவுண்டர் அவர்கள் காங்கயத்தில் வந்து இருக்கும் போது டிப்புசுல்தான் அவர்கள் அங்காளியாயும் சின்னமலை கவுண்டனும் தம்பா கவுண்டன் அங்காளியாகவும் இருக்கிற சமயத்தில் அமராபதி பல்லவராய கவுண்டர் அவர்களுக்கும் சின்னமலைக் கவுண்டனுக்கும் தம்பா கவுண்டனுக்கும் விரோதமாயிருந்த படியாலே விரோதியிருந்து ஒரு கார்த்திகை மீ ஆறு பக்கம் சிறுகுட்டை ஜோத்தில் காங்கயத்தில் சின்னமலைக் கவுண்டனுடைய சம்பாரம் பண்ணி போட்டான்.

அந்த நாள் முதல் சிதம்பர பல்லவராய கவுண்டன் என்று பேர் உள்ளவராய் பாளையாரப்பியமாறு பணவி சித்னம தொப்பணைப்பட்டு கிருமத்தில் குடியிருப்புக்காரனாய் மகா ராச ராசஸ்ரீ கும்பினியார் துரையவர்கள் கடாட்சத்துக்கு பாத்திரனாகி காத்துக்கொண்டு இருக்கிறேன்.

மேல் யெழுதப்பட்டதில் தகவலாய் இருக்கப்பட்ட புராதன மான ஓலைகள் முதலானதுகள் காலாந்தரங்களிலே யாகிகங்கள் பேர் வைகோத்து போயி விட்டது.

சிதம்பர பல்லவராயன் ஒப்பிதம்

—()—

# காங்கய மன்றாடியார் வமிசாவளி

டி. 3038

தாராபுரம் தாலூகாவுக்குச் சேர்ந்த காங்கயம் தாலுக்கா மடவிளாகம் காடையூரிலேயிருக்கும் "காங்கயமன்றாடியார்" என்னப்பட்ட பட்டக்காரனுடைய வம்சாவளி முதலான கைபீயத்து யென்னவென்றால்:-

பூர்வத்தில் சோழ தேசத்தில் தொண்டை மண்டலத்து வெள்ளாளர் என்று பேற்பட்ட முக்குடி 48000 பகங்குடி 12000 ஆக 60000 கோத்திரக்காரர்களில் நத்குடி 48,000 கோத்திரத்தில் 8000 கோத்திரக்காரரை சோழராசாவை சேர ராசா கேட்டுக் கொண்டபடியினாலே 8000 கோத்திரக்காரரையும் சேர ராசாவுக்குக் கொடுத்தார்.

அப்போ தொண்டை மண்டலத்திலேயிருந்து தென் திசை நோக்கி வரப்பட்ட வெள்ளாளருக்கு தென்திசை வெள்ளாளர் என்று பேர் வரப்பட்டவர்களாகி சேர தேசத்தில் வந்து யிருந்தயிடத்தில் பூர்வத்தில் இந்த சேர தேசத்தில் குடித்தனம் பண்ணப்பட்ட மாவிலயன், பூவிலயன், காவிலயன், வேடன், வேட்டுவன், இந்த சாதிகளுக்கு யிருக்கப்பட்ட காணிகளிலே, யிந்த வெள்ளாளருக்கு பாதி பிரிச்சு யிடம் பண்ணிக் குடுத்தார்கள். அக்காலத்துக்கு கொங்கு வெள்ளாளரென்றும், யிந்தத் நாடு நாடுயென்றும், பேற்பட்டு குடியிருக்கும் காலத்தில் அந்த நாடுயிலே பூந்துறை நாட்டில் எழுமாத்தூர் என்னப் பட்ட கிராமத்தில் குடியிருப்புக்காரனாயி இருக்கப்பட்ட வெள்ளாள சாதியில் காங்கய மென்னப்பட்டவன் மதுரைக்குப் போயிச் சேர்ந்து யிருந்துச் சொக்கநாதர் மீனாட்சிக்குப் பணிவிடை செய்துக் கொண்டு இருந்தான்

மதுரையில் சொக்கநாதர் மீனாட்சி தேவிக்குப் பணிவிடை செய்துக் கொண்டுயிருந்த காங்கய மென்னப்பட்டவனுடைய வம்சத்தில் யென்னப்பட்டவன் கொசமாட சமுத்தமாகி பிறப்பட்டு உத்திர திசை நோக்கி வந்து காங்கயநாட்டுக்குச் சேர்ந்த நட்டூர் யென்னப்பட்ட கிராமத்தில் பசு மாடுகளை மேய்ச்சுக் கொண்டுயிருந்தான்.

அந்தச் சமயத்தில் நட்டூரில் யிருக்கப்பட்ட சேட குலத்தாயி யென்னப்பட்ட வெள்ளாள வம்சத்தில் ஒரு முட பெண் பெறந்து யிருந்து அந்த முட பெண்ணை கலியாணம் பண்ணிக் கொண்டவனுக்கு

காணிப்பங்கு காணியாட்சி கொடுக்கிறோமென்று சொல்லியிருந்தார்கள் என்று கேள்விப்பட்டு பசுமாடுகளை மேய்ச்சுக் கொண்டுயிருக்கப் பட்டவன் அந்த மூட பெண்ணை கலியாணம் பண்ணிக் கொண்டு நாட்டுநிலே வாசமாயிருக்கும் நாளையில் இந்த மூட பெண்ணுக்கு நாலு பிள்ளைகளும் பிறந்து அவளுடைய புருஷன் தெய்வகதி அடைஞ்சி யிருக்கும் வேளையில் அந்த பெண்ணுடைய சகோதரர்கள் அந்த காணிப்பங்கு காணியாட்சி கொடுக்கிறது யில்லையென்று சொன்னார்கள்.

இந்த மூட பெண்ணும் அவளுடைய பிள்ளைகளும் தன் தாய் பனூர் சொன்ன காணியை தன்னுடைய தோப்பனும் புருஷனும் தெய்வகதி அடைந்த பிற்பாடு தன்னுடைய சகோதரர்கள் தாமதியோ மென்றும் குடுக்குறது இல்லையென்றும் சொல்லப்பட்ட நியாயத்தை இந்த நாட்டிலே உள்ள சனங்களுடனே சொல்லிக் கொண்ட பாடிக்குநிலே நாட்டிலுள்ள சனங்களும் இந்த ஞாயத்தைக் கேட்டு அறிந்த காணிப் உண்டு பண்ணி குடாத போல படியினாலே இடத்தில் கேள்வியில்லாத போன படியினாலே உத்திர திசை நோக்கி யிந்த பிள்ளைகளும் மூட பெண்ணும் பிறப்பட்டுப் போற போது அவ்விடத்தில் இருந்த துலுக்க சருதாரிடத்தில் இந்த நியாயத்தைச் சொல்லிக் கொள்ளுவோமென்று அவ்விடத்தில் நின்று சருதாரை யிந்த பிள்ளைகள் காணப்பிக்கக் கொண்டயிடத்தில் இந்தப் பிள்ளைகளைப் பார்த்து அந்தச் சருதார் நீ யாரு என்று கேட்டார். நாங்கள் ஒங்களுடைய பிள்ளையள் காத்து யிருக்கிறோமென்று சொன்னார்கள். அது சேதி சருதாரானவர் மனதிலே வைத்து நீ யென்னுடைய பிள்ளையென்று சொன்னயே என்னுடனே கூட சாப்பிடுவாயா என்று கேட்டதில் ஒன்னுடைய பிள்ளையென்று சொன்னது மெய்தானென்றும் ஒங்களுடைய மனசுப்படிக்கு யிக்காந்து சாப்பிடுகிறோமென்றும் பொருந்தயிதிலே வத்தருக்காரயி சொன்ன வாக்கு மசைத்துநாலே சருதாருக்கு ரொம்ப சந்தோஷம் வந்து யிந்தப் பிள்ளைகளைப் பார்த்து ஒங்களுடைய சாதினிதி முதலான துகளும் கேழ்க்கும் இடத்தில் நாட்டிலே காணியில்லை என்று சொல்லப்பட்ட மையனங்கள் முதலான சேதிகளும் சொல்லிக் கொண்டார்கள். இந்த பிள்ளைகளுடைய சேதிகள் அந்த சருதார் கேட்டு அந்த நாட்டிலுள்ள சனங்களை யம்மாரம் பண்ணி போட்டு அந்த காணிகளை யெல்லாம் ஒங்களுக்கு குடுப்பிக்கிறோ மென்று சொன்னார். அதுக்கு அந்த பிள்ளையள் நாலு பேரும் அப்படிக்கு துருக்காகமாகி அந்தவூருக் காணியை கட்டி குடிக்க வேண்டிய அக்கரையில்லை. தங்களுக்கு எங்களிடத்தில் தயவு யிருந்தால் சனங்களை தருவிச்ச நியாயங்களை விசாரிச்சி நிசமாயி குடுக்கிறோ

யென்று சொல்லப்பட்ட காய் பழமும் வாங்கி குடுப்பிக்க வேணு மென்று கேட்டுக் கொண்டார்கள்.

அப்போ அந்தப் புள்ளையள் வீட்டத்தில் ரொம்பவும் தயவு தோண் றிந்து பயசுகளுடனே கூட பிறப்பட்டு நட்டுறுக்கு வந்து யிருந்து கொண்டு அந்த துலுக்க சருதாற் துருகளிலேயும் நாட்டுகளிலேயும் இருக்கப்பட்ட அனேகங்களோடேயும் தரிசிக்க வீந்த தியாகத்தை விளங்கும் இடத்தில் சனங்களெல்லாம் தம் குபேர பேச்சாயி அந்த முட பெண்ணுடைய தோப்பனாற் காய்பழம் கொடுக்குறேனென்று சொன்னதை நாங்கள் அறியோமென்று சொன்னார்கள். அந்த சமயத் தில் அந்த முட பெண்ணை அழைச்சு சேநுக்குறும் வீட்டத்தில் வெங்கடா தோப்பனார் பெண்ணை நகிராயம் பண்ணிக் கொண்டவனுக்கு காய்பழம் காணியாட்சி கொடுக்கிறேனென்று சொல்லுறது உண்டு யென்று சொன்னாள். அந்த சமயத்தில் நாட்டு சனங்கள் அனைவரும் வேகமாகத்துலே அவள் சொல்லுகிறது பொய் என்றும் மெய்யானதை யாரும் தெரியுமா துவாரத்துலே இருக்கப்பட்ட விடத்தேற்றிருச் சத்தை கூர்மையா செய்விச்ச அந்தப் பெண்பிள்ளை கையிலே அருந்த பாம்பு சுருளுமாக்கி ஒட்டிக்கொண்டு கையிலே காயம் படாமல் யிருந்தால் அந்த பெண்பிள்ளை பேச்சு நிசம் யென்று பெண்ணை காய் பழம் காணியாட்சி கொடுக்கிறேனென்று சொல்லுறார்கள். அப்போ அந்த பெண்ணும் அவளள் நம்பி சொல்லி பிறகும் பேச்சுக்கு அனுமானம் யென்ன யென்று வீநாவம் பண்ணி ஆசாரத்துடனே தெய்வ துவாரத்திலே விடத்தேற்றிருச்சத்து வீட்டத்தில் வந்து நின்று விடத்தேற் விருட்ச்சத்தை கூர்மை செய்துவிச்ச வெங்கடா தோப்பனார் காணி கொடுக்கிறேனென்று சொன்னது நிசம் யென்று வையாலே அந்த கையெடுக்கும்போது அந்த விடத்தேற்றிருட்சம் சுரு ளுமாக்கி கய்யோடே கூர் துட்டிக்கொண்டு வந்து காயம் படாமல் யிருந்ததைப் பார்த்து முருபடி அந்த விருட்சம் பொதுவானதாயாக்கி இருக்குறபடிக்குப் பண்ணினாள் காய்பழம் காணியாட்சி குடுப்பிக்க கிறேனென்று சொன்னார்கள். மறுபடி அந்த முடபெண் தெய்வத்தை நினைச்சு அதிகோபத்துனாலே ஆண்டிக்க அந்த பெண் இரு பெறுக வேணுமென்று வாக்குநாலே சொல்லி விருட்சத்தை கய்யே அறுத்த மாத்திரத்துலே விடத்தேற் விருட்சம் மெதுவா பிறகாரமாச்சுது. அப்போ சகல சனங்களும் ஆச்சரியப்பட்டு சந்தோஷமாக்கி நட்டூர் கிராமத்தில் காய்பழம் காணியாட்சியாக சருதாற் முன்னிலேயத்தே குடுத்து விட்டார்கள். அந்த சமயத்தில் துலுக்க சருதாற் இவ்வளவு நான் பிரயாசப் பட்டதுக்கு யென் வம்ச பரம்பரையாக்கி என் பேர் நிலைத்திருக்கும்படியாக்கி பண்ண வேணுமென்றுந் தன் வசித்திலே

புள்ளி புள்ளிக் குடிமுறைகளுக்கும் ஞானாசிரியருக்கு மிக உத்தமமே யாது நத்தி கல்யாணமென்று பண்ணிக்கொண்டு வருகிறதென்று. சொன்னார். அதுக்கு முன் சொன்னதும் பிள்ளையுடைய புள்ளிகள் நாலு பேரும் நல்லது என்று சொன்னார்கள்.

அந்த முடிபெண்ணுடைய புள்ளிகள் நாலு பேரும் நட்டுக் காலு பல்லு கம்பளியாட்டி உள்ளாளர்களாய்க் குடியிருப்புக்காரராயி யிருக்கும் வேளையில் 1. கறுவைருந்த காங்கயன், 2. சொமன் காங்கயன், 3. தடிக்காளி காங்கயன், 4. சேவியன் காங்கயன் இந்த நாலு பேரும் பெற்றப்பட்டவாளாகி இருக்கும் நாளையில் வட தேசத்து ஒட்டிய சென்றுபயாசை தன்னுடைய தம்பி சனங்களுக்கு சம்பளம் கொடுத்து விவாகம் பண்ணமாட்டமல் பொருதண்டான படியினாலே தன்னுடைய தம்பிகளுக்கு தேசங்களை யெல்லாம் கொள்ளை யடித்துக் கொண்டு யிருக்கும் நாளையில் அக் காலத்தில் ஒட்டிய செகன்னாதராசா பொருந்து தண்டுகளுடனேயும் புறப் பட்டு கொள்ளையிட்டுக்கொண்டு திருப்பட தேசத்துக்கு வருகிறான் யென்று அக்காலத்தில் திராவிட தேசாதிபதிகளான பாண்டிய ராசா சமாசாரம் கேள்விப்பட்டு தம்முடைய தேசத்திலே யிருக்கப்பட்ட சனங்களுக்கெல்லாம் தெரியத்தக்கதாய் அந்த ஒட்டிய செகன்னாத ராசாவை செயம் பண்ணவனுக்கு யென்னுடைய பேரும் கொடுத்து பட்டமும் கட்டிவிக்கிறேனென்று அறிய பண்ணினான்.

அந்த நாளையில் நட்டுக் குடியிருப்புக்காரனாய் இருக்கப்பட்ட கறுவைருந்த காங்கயனுடைய சொற்பனத்தில் ஒரு பிராமண ரூபமாய் வந்து ஒட்டிய செகந்நாதராசாவை செயம் பண்ணுகிறேனென்று பாண்டியராசாவிடத்தில் பாக்கு வெத்திலை வாங்குமென்று சொன்னார். அதுக்கு நான் யென்ன மனுஷனென்றால் ராசாவை செயம் பண்ணு றதுக்கு யென்னாலே ஆகுமா யென்றும் பதில் சொன்னதுக்கு நான் துணையிருந்து செயம் பண்ணி தாரேனென்று சொல்லி உறுதியாய்ச் சொன்னார். அந்நேரமே வித்திரை முளிச்சவனாயி கண் திறந்து பார்த்து யிது கனாவில் சொன்னார் என்று மனசிலே யெண்ணிக் கொண்டு மதுரை சமஸ்தானத்துக்குப் புறப்பட்டுப் போயி பாண்டியராசா சமுகத்தில் ஒட்டிய ராசாவை நான் செயம் பண்ணுகிறேனென்று சொல்லிக் கொண்டிருக்கிறபோது ராசாவுக்கும் சந்தோஷமாகி நமக்கு சொற்பனமான படிக்கு வந்தான் என்று சிறிது தளத்தையும் கொடுத்து அப்பால் கறுவைருந்த காங்கயனுக்கு வெற்றிலை பாக்கு கொடுத்தார்கள்.

கறுவைருந்த காங்கயன் பாண்டியராசா தளத்தையும் கூட்டிக் கொண்டு நட்டுக்குச் சமீபமாயி வந்திருக்கும் வேளையில் ஒட்டிய

தெலுங்கு ராய ராசா போகுறதுக்குடனே திராவிட தேசத்துக்கு வந்து சேர்ந்து ஆழ்வார்திருநகரி காஞ்சிமாநகரி மத்தியில் வந்து தண்டிறங்கி, யிறங்கியிருக்கும் வேளையில் அந்த ஒட்டிய ராசாவினுடைய செய்கைகள் பிறப்பட்டு ஏகாதனியே கொள்ளை பண்ணிக்கொண்டு மறுநாள் தக்ஷணம் நோக்கி போற முன்னுக்கு நட்டில் தேவாலயத்தைக் கண்டு ஒட்டியராசா யிந்த தேவாலயத்துலே என்ன யிருக்குது யென்று பார்க்கச் சொல்லி ஒரு மனுஷனே அனுப்பிவிச்சார். அந்த மனுஷன் ஆலயத்துக்குள்ளே வந்து பார்க்கும்போது அந்த சன்னதியில் ஒரு தம்பிரான் வேஷ ரூபமெடுத்துக் கொண்டு ஜெபம் பண்ணிக் கொண்டு உட்கார்ந்து கொண்டு யிருந்தார். அதைப் பார்த்து யாரோ ஒரு வெள தம்பிரான் இருக்குறாம் என்று ராசாவுடனே சொன்னான். அந்த ஆலயத் துலே யிருக்குற தம்பிரானை அனைகளைச் சொல்லி ஆனை அனுப்பி விச்சார். தம்பிரானே அசைந்தும் யிடத்தில் யிவர் யோகத்தில சொல் லாமல் கண் திறந்து பாராமல் கண்ணை மூடிச்ச யிருந்தாலும் யிடு படாமல் யிருந்ததைப் பார்த்து சேனைகள் ராசாவுக்கு அறிக்கை பண்ணினார்கள். அப்போ ராசாவானவருக்கு கோபம் வந்து தன் னுடைய யானைகளை விட்டு தம்பிரான் யிடுப்பிலே சங்கிலி பூட்டி யிழுப் பிக்கும்போது அந்த தம்பிரான் காவட குளிகையாயி பறந்து யானை களுடைய துதிக்கைகளிலேயும் காதுகளிலேயும் புகுந்தபடியினாலே தண்டுகளை யெல்லாம் அந்த யானைகளானது அடிச்சது.

அந்த சமயத்தில் ஒட்டிய ராசாவானவர் யானைகளிலேயே தண்டு களுக்கு உபத்திரம் வந்தபடியினாலே வடதிசை திசை நோக்கி போற போது யிந்த யானைகள் கூட துடர்ந்து சனங்களைச் சங்காரம் பண்ணிக்கொண்டு போறபோது யிந்த சேதிகள் கனுவுறுந்த காங் கயன் அறிந்து தன்னுடைய புலிகளுடனே கூட தொடர்ந்து போற போது நட்டிற்க்கு வடக்கு நாலு நாழிகை தூரத்தில் யானையிலேயே ஒட்டியராசா பட்டுபோனான் என்று கேள்வி பட்டவுடன் மறுபடி நட்டிருக்கு வந்து சேர்ந்தான். ஒட்டிய ராசா பட்டுபோன பிற் பாடு அந்த யானைகளும் நட்டிற் வந்து சேர்ந்தது. ஒட்டிய ராசா வடதிசை நோக்கி ஓடி போறபோது யிவ்விடமேல் யிந்தப் பிர தேசத்துக்கு யாராதும் வேண்டி என்று சொல்லப்பட்ட யிடத்தில் புல் டான தூதர்த்து யிவ்விடமென்று நாமதேயம் வழங்காச்சது. ஒட்டிய ராசா பட்டுபோன யிடத்தில் யிருக்கப்பட்ட ஆறுக்கு பட்டாலி என்று பேர் வழங்கலாச்சுது.

கனுவுறுந்த காங்கய சேனாதிபதியுடன் நட்டிருக்கு வந்து யிருந்த யிடத்தில் ஒட்டிய ராசாவை சகோதரன் காவட குளிகை ரூப மெடுத்து சம்மாரம் பண்ணி போட்ட படியினாலே காவடயிகையர்

என்றும் காடையூரென்றும் பேர் வழங்கச்சுது. அக்காலத்தில் கலியுக சகாப்தம். (?)

அதன் பிறகு கலியுக சகாப்தம் (?). காடையூரிலேயிருந்து கழுவறுத்த காங்கயன் தனத்துடனே புறப்பட்டு மதுரைக்குப் போய் பாண்டிய ராசா சமுகத்தில் மூட்டிய ராசாவை சம்மாரம் பண்ணின சமாசாரங்களெல்லாம் அறிக்கை பண்ணிக்கொண்ட மட்டத்தில் ராசா ரொம்பவும் சந்தோஷப்பட்டு தேசத்துக்கு வந்த உபத்திரவத்தினாலேயே நிவர்த்தியாச்சு என்று யிந்த கழுவறுத்த காங்கயனைப் பார்த்து எனக்கு நீ உபகாரமுள்ளவன் என்று சகல வெகுமதிகளும் பண்ணி பட்டமுங் கட்டுவிச்சாருங்கள்.

கழுவறுத்த காங்கயன் பாண்டிய ராசாவிடத்திலே சகல வெகுமதிகளும் பெற்று மதுரையில் வாசமாயிருக்கும் நாளையில் தன்னுடைய புத்தியினாலே சகல வித்தைகளும் கற்று வல்லவனாக வேணுமென்று வித்திய விருத்தியாகி அநேகதக காலத்திலே ஆவின் பால் அபிஷேகத்துடனே சொக்கநாதர் மீனாட்சி தேவிக்கு அபிஷேகம் பண்ணிக்கொண்டு சகல வித்தைகளிலேயும் வல்லவனென்று பேர் பெற்றுயிருந்தான்.

பாண்டிய ராசாவானவர் காங்கயன் சகல வித்தையிலேயும் வல்லவனென்று சமாசாரம் கேள்விப்பட்டிருந்தார்.

இப்படியிருக்கும் நாளையில் ஒரு நாள் சமயத்திலே பாண்டிய ராசாவானவர் விக்கிரகங்கள் வாதப்பிரிச்சதை நிமித்தியமாக சொக்கநாத சுவாமியார் சன்னதிக்கு வந்து யிருந்தான். அந்த சமயத்தில் காங்கயன் வித்திய விருத்தியமாயி ஆவின் பால் அபிஷேகம் பண்ணவரும் வேளையில் அந்தச் சமயத்தில் ராசா காங்கயனைப் பார்த்து நீர் சகல கலைகளுக்கும் வல்லவனென்று சொல்லிக் கொண்டு நூறாயிரங்கோடி யிந்த தம்பிரான் காலிறது ஓலை அளவிலே நடனம் பண்ண வாராயென்று கேட்டார். அப்படியே பண்ணுவாயென்று சொல்லி தாமிரம் காயிறு ஓலையில் சொக்கநாயகா என்று குறிச்ச நடனம் பண்ணினார். அப்போ ராசா மிகவும் சந்தோஷப்பட்டு இரிடம், ஆறு காய் பீடம், வெப்பமாலை, பட்ச கொடி யிந்த பிருதுகளும் குடுத்து சகலகலாங்கய என்று ஆசிங்களம் பண்ணிக் கொண்டும் பின்னையும் தனக்குள்ள சுவேதச் சத்திரம் முதலான பிருதுகள் எல்லாம் கொடுத்தார். அந்தச் சமயத்தில் மீனாட்சியம்மன் சன்னதியில் அசரீர வாக்காய் பொற்குத்து பெண்ணென்றும் செங்கோலையும், மன்று பெண்ணைப்பட்ட சபையில் நடனம் பண்ணின படியினாலே உனக்கு மன்றாடி யென்ற நாமதேயமும் மன் வம்ச பரம்

பறையாயி தவி வெய்யமையும் உண்டாகக் கடவதென்று வாக்கு வுண்டாச்சுது.

கொங்குராது கலாமி மிறுக்கி தெவி கடாகத்துறையும் சகலகல காங்கய மன்றாடியார் என்னப்பட்ட பேர் உண்டானவராகி பாண்டிய ராசாவிடத்தில் சமானமாக யிருக்கிற முறையில் அக்காலத்து துக்கு தேறாதியும் பாண்டிய ராசாவுக்கு சேர்த்திருக்கபடியினாலே தனக்குச் சமானமாயிருக்கிற சகலகல காங்கய மன்றாடியாருக்கு யிந்த செருந்தியும் பிறபுத்துவம் குடுக்க வேணுமென்று மதுராபுரி பட்டணம் விட்டு பாண்டிய ராசாவும் சகலகல காங்கய மன்றாடியாரும் பிறப்பட்டு கொங்கு தாராபுரத்துக்கு வந்து யிருக்கும் நாளையில் பாண்டிய ராசா கொங்கு யிருபத்திநாலு நாட்டாரையும் தரிவிச்சு யெனக்கு சமானமான சகலகல காங்கய மன்றாடியாருக்கு யிந்த ராச்சியமும் பிறபுத்துவம் நாம் குடுத்துயிருக்கும்படியினாலே நீங்கள் அவரையும் அவருக்கு மனைவி நடத்து கொண்டு வாருங்கோள் யென்று கட்டளையிட்டு காங்கய நாடு முழுமையும் தானேராயி அனுபவிச்சுக் கொண்டு வாரும்படியாயும் மத்த யிருபத்தி மூனு நாட்டுயேயும் கண்டு முதலானதுக்கு பத்தியொரு பங்கு அனுபவிச்சுக் கொண்டு வரும்படியாயும் நேமுகம் செய்து பாண்டிய ராசா மதுரைக்குப் போயிச் சேர்ந்தார்கள்.

கலியுக சகாப்தம் ௲ க்கு மேல் கொங்கு யிருபத்தி நாலு நாட்டுக்கும் பட்டக்காரரும் சகலகல காங்கய மன்றாடியார் என்னப்பட்ட பேர் பிரசுத்திப்பட்டவராயி கொங்கு தாராபுரத்திலும் காடையூரிலேயும் யிருந்துகொண்டு பிறபுத்துவம் பண்ணினார்.

கலியுக சகாப்தம் ௲ 357க்கு சுக்கில ௵ ... மாதம் சுத்தபட்ச பஞ்சமி சங்கிராந்தி சுபதினத்தில் பட்டமாகி சகலகல காங்கய மன்றாடியார் ராச்சியாதிபத்தியம் பண்ணினது ௵ 25 யென்று பூர்வத்தில் உள்ள மித்திரவாக்கியங்கள் சொல்லப்பட்ட கவிகளினாலே தெரியப்பட்டுது.

அந்த பின் முதல் சகலகல காங்கய மன்றாடியார் குமாரர் குமார காங்கய மன்றாடியார் யிவர் குமாரர் ஆரால் சக்கர மன்றாடியார் யிவர்கள் பட்டம் ஆண்டுக் கொண்டு கொங்கு இருபத்து நாலு நாட்டுக்கும் பிறபுத்துவம் பண்ணிக்கொண்டு காடையூர் குடியிருப்புக் காணியில் இருந்து கொண்டு பாண்டிய ராசாவுக்கு கொங்கு இருபத்து மூனு நாட்டுமேயும் கண்டு முதலானதிலே பத்தில் ஒன்பது பங்கு செலுத்தி வந்ததுமல்லாமல் காங்கய நாடு முழுமையும் தாம் அனுபவிச்சுக்கொண்டு யிருந்தார்கள்.

மேல் எழுதப்பட்ட சகலகல காங்கய மன்றாடியார் வம்சத்தில் உள்ள ஸ்ரீமத்த பத்திரருக்கு பாரம்பரையாகிய குமார காங்கய மன்றாடியார் என்றும் அமராபதி காங்கய மன்றாடியார் என்றும் இந்த இரண்டு பேரும் பட்டாதிகாரிகளுக்கு பேர் பிரசித்தி பட்டு காடையூர் குடியிருப்புக் காணியாயிருந்து பிரபுத்துவம் பண்ணினார்கள்.

அதின் பிற்காலம் கலியுகம் 4200க்கு திருமங்கை தேவராசா சந்திர மூர்த்தி அனுக்கிரகத்தினாலே கைலாசத்துக்குப் போனபோது அந்தந்த பட்டத்துக்கு அவரவர்கள் பிரபுத்துவம் பண்ணுகிறது என்று தேசுகம் பண்ணி தன்னுடைய சேரன் தேசமான ராச்சியத்துக்கு தன் சொந்த பிறநாளிலே நாம் வருகிற பட்டுக்கும் ராஜியம் பிரபுத்துவம் பண்ணிக்கொண்டு இருமென்று சொன்ன சமயத்தில் அக்காலத்தில் காடையூர் பட்டக்காரரான குமார காங்கய மன்றாடியாருக்கு பாண்டிய ராசனாலே ராச்சியம் பிரபுத்துவம் பெறப்பட்ட விருது கிரீடம் முதலான விருதுகள் பெல்லாம் பெற்று இருக்கிறீர்களே இம்முடியும் கொடுத்தோம் என்று தம்முடைய கிரீடத்தைக் கொடுத்தார்கள் அதனாலே இம்முடி குமார காங்கய மன்றாடியார் என்று பேர் பிரசித்தி யாச்சுது.

இப்படிக்கு இம்முடி குமார காங்கய மன்றாடியார் என்றும் இம்முடி அமராபதி காங்கய மன்றாடியார் என்றும் இந்த ரெண்டு தாயாதியும் விளங்கிக் கொண்டு காடையூர்ப் பட்டக்காரராய் பாரம்பரையாய் பிரபுத்துவம் பண்ணிக்கொண்டு இருக்கும் நாளையில் பாண்டிய தேசத்துக்கு பாதுஷா பெண்ணைப்பட்ட துலுக்கர் வந்து அங்கங்கே பண்ணி ராச்சியம் கட்டிக் கொண்டு பெருகினார் துலுக்காணிய பிரபுத்துவமாயிருக்கும் நாளையில் பூமியும் துலுக்கராலே ராஜ நீதி கலியாணமென்று உண்டு பண்ணிக் கொண்டு இருந்த படியினாலே அது சேதியன் துலுக்காணியத்திலே கேள்விப்பட்டு தவறு உள்ள நடப்பிவிக்கக் கொண்டு வந்தார்கள்.

அதின் பிற்காலம் கன்னடியர் தேசத்திலே இருந்து கன்னடியர் வந்து துலுக்கர்களையெல்லாம் அதம் பண்ணி ராச்சியம் பாண்டிய ராசாவுக்கு நிலைநிறுத்திவிக்க கொடுத்து பட்டம் கட்டிப்போட்டு கன்னடியர் கன்னட தேசத்துக்குப் போனார்கள்.

அதின் பிற்காலம் பாண்டிய முடி வேந்தர்கள் ஆண்டுவரும் காலத்தில் கலியுகம் 4300 வரைக்கும் பாண்டிய முடி பிரபுத்துவம் பண்ணிக்கொண்டு வந்தார்கள்.

அதின் பிற்காலம் கலியுகம் 4300க்கு மேல் பாண்டிய மண்டலமும் ராயர் சமஸ்தானத்தில் சேர்ந்து வடுக துரைத்தனமாய் இருக்கும்

நாளையில் அக்காலத்தில் அமராபதி காங்கய மன்றாடியார். ஆகையால் அவர்கள் தங்கள் சம்பாதித்துக்கொண்டு கொங்கு இருபத்து நாலு நாட்டுக்கும் பெரிய பாளையப்பட்டுக்காரராகி உத்திரவு பண்ணிக் கொண்டு காடையூர் தேவிருப்புக்காரராய் மேல் எழுதிய ராஜா நாளையில் நடந்து வந்தபடிக்கு அனுபவித்துக்கொண்டு இருந்தார்கள்.

கலியுக சகாப்தம் 4300க்கு மேல் ஆண்டு வரைப்பட்ட பட்டங்களுடைய வரிசைகளும் அவர்களாளுடைய செய்தியோதாதிய காரியங்களும் பின்வரும் தொகுதியிருக்கிறது.

1. அமராபதி காங்கய மன்றாடியார் ௵ 15
2. இவர் குமாரர் குமார காங்கய மன்றாடியார் ௵ 12
3. இவர் குமாரர் அமராபதி காங்கய மன்றாடியார் பட்டம் ௵ 11
4. இவர் குமாரர் குமார காங்கய மன்றாடியார் ௵ 15
5. இவர் குமாரர் அமராபதி காங்கய மன்றாடியார் ௵ 10
6. இவர் குமாரன் குமார காங்கய மன்றாடியார் ௵ 16
7. இவர் குமாரன் அமராபதி காங்கய மன்றாடியார் ௵ 12

கலியுக சகாப்தம் 4391 வரைக்கும் பட்டம் 7க்கு ௵ 91

இவனுக்கு இம்முடி யென்றும் பேர் வழங்கிற்று கலியுக சகாப்தம் 4391க்கு மேல்

8. இம்முடி அமராபதி காங்கய மன்றாடியார் குமாரன் இம்முடி குமார காங்கய மன்றாடியார் பட்டம் ௵ 15
9. இவர் காரியத்துக்குக் கர்த்தராகிய இவர் தம்பி பெத்தான் காங்கய மன்றாடி-இவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்றாடியார் ௵ 12
10. இவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்றாடியார் பட்டம் ௵ 20
11. இவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்றாடியார் பட்டம் ௵ 14
12. இவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்றாடியார் பட்டம் ௵ 30
13. இவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்றாடியார் பட்டம் ௵ 25
14. இவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்றாடியார் பட்டம் ௵ 12
15. இவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்றாடியார் பட்டம் ௵ 9

16. இவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்றாடியார்
பட்டம் ஸ்ரீ 11
17. இவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கேயன் மன்றாடியார்
பட்டம் ஸ்ரீ 16
18. இவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்றாடியார்
பட்டம் ஸ்ரீ 8
19. இவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்றாடியார்
பட்டம் ஸ்ரீ 12
20. இவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்றாடியார்
பட்டம் ஸ்ரீ 31
21. இவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்றாடியார்
பட்டம் ஸ்ரீ 28
22. இவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்றாடியார்
பட்டம் ஸ்ரீ 22
23. இவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்றாடியார்
பட்டம் ஸ்ரீ 20
24. இவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்றாடியார்
பட்டம் ஸ்ரீ 38
25. இவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்றாடியார் ஸ்ரீ 22
26. இவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்றாடியார் ஸ்ரீ 18
27. யிவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்றாடியார் ஸ்ரீ 34
28. யிவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்றாடியார் ஸ்ரீ 9
29. யிவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்றாடியாற் ஸ்ரீ 14
30. யிவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்றாடியாற் ஸ்ரீ 6
31. யிவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்றாடியாற் ஸ்ரீ 19
32. யிவர் குமாரன் இம்முடி குமார காங்கய மன்றாடியாற் ஸ்ரீ 44
33. யிவர் குமாரன் இம்முடி அமராபதி காங்கய மன்றாடியாற் ஸ்ரீ 3

கலியுக சகாப்தம் 4887-க்கு பராபவ ஸ்ரீ வரைக்கும் பட்டம் 26 ஸ்ரீ 497

யிதுவத்தி ஆராள் புறவுக்கு யிம்முடி குமார காங்கய மன்றாடியாற் தம்பி பெத்தான் காங்கய மன்றாடியாற் நாளில் அக்காலத்தில் பல்லவ ராய கவுண்டரும் தென்கரைநாடு வேணாவுடையா கவுண்டரும் யிருவரும் கூடி சிதிரம் பண்ணின படியனாலே வேணாவுடையா கவுண்டனை கைப்பிடியாய் பிடிச்சு காளிக்காலிலே வெட்டிப்பிச்சு போட்டார். அந்த சமயத்தில் பல்லவராய கவுண்டன் அகப்படாமல் போய்விட்டார். அப்போ காங்கயம் பல்லவராய கவுண்டருக்கு ஆதின

மான ஊரில் காங்கயத்தில் கோட்டையைக் கட்டி வைக்க தம்முடைய [illegible] மைத்துனர் சலங்கைகளையும் போட்டு அந்த சனத்துக்கு தலைகத்த தான அளப்பிச்சா கவுண்டனுக்கு ரொக்க வரிபாக்கிகளையும் பேருக்கு பண்ணி காங்கயன் கோட்டை யென்று பேர்வச்ச படியாலே காங் கயம் கோட்டையென்று பேற்பட்டு செழித்தலமாய் பெருகத்திப் பட்டது.

மேல் யெழுதப்பட்ட பாளைக் காலிலே யெட்டிமைச்ச பேனா ஒடையா கவுண்டனுக்கு தம்முடைய சகோதரரான பெண்ணைக் குடுத்து யிருந்த படியினாலே அந்தப் பெண்ணுடையவள் தமையனிடத் தில் வந்து மிகவும் வெசனப்பட்டபடியினாலே அந்தப் பெண் புண்ணுக்கு வெசன பரிகாரம் பண்ணவேண்டிய விசித்திரம்,' உன் புருஷன் கொங்கு மிருவத்திரண்டு நாட்டுக்கும் பெரிய வீட்டுக்காரனா யிருந்தாலே யிப்போ உன்னுடைய புண்ணுக்கு தென்கரை நாட்டுக்குப் பட்டம் கட்டி விக்கிறேனென்று சொல்லி சகல விபவத் துடனே பட்டமுங் கட்டுவிச்சார்.

அதின் பிற்க்காலம் மணநாட்டின் தென்னிசை வெட்டுவதில் கொங்குராயன் பெண்சாதியன் சிறுது சனங்களைச் சேர்த்துக் கொண்டு ராத்திரி வேளையிலே கள்ளத்தனம் பண்ணி சில்லறை பயல்களைக் கொண்டு வைத்திருக்கு ஆப்புடாமல் யிருந்தபடியினாலே அவனை பிடிச்ச தம்பியைக் கொண்டு வறப்பட்டவருக்கு தம்முடைய பேரும் கொடுத்து பட்டமும் கட்டுகிறேனென்று சொல்லியிருந்தார்.

அந்த சமயத்தில் வள்ளியரச்சல் பில்லம்கூட்டத்தில் தொண்ட மாக்கவுண்டன் என்றொருவன் சிறிது கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு கொங்கராயனை ஜெயிச்சு அவன் தம்பியை வெட்டிக் கொண்டு தன் ஊரு மார்க்கமாய் வார போது அவன் மருமகனுவா அளகஞ்சக்கரை யென்னப்பட்டவன் கூட யிருந்தபோது கொங்குராயன் தம்பியை மருமகன் கையிலே கொடுத்து விக்கச் சொல்லி ஓடிப்போய் [illegible]. ரத்தக்குத்தகை யெல்லாம் சுத்திப் பண்ணிக் கொண்டு வருகிறே னென்று போனான். அந்தச் சமயத்தில் அளகஞ்சக்கரை கொங் குராயன் தம்பியை யெடுத்துக் கொண்டு காடையூருக்கு வந்து இப்படி குமார காங்கய மன்றாடியார் யிடத்தில் வச்சபடியினாலே கொங்குராயனை ஜெயிச்சு அவன் தம்பியைக் கொண்டு வந்து வெச்சான் யென்று சந்தோஷப்பட்டு அந்தட்சணமே சகல மரியாதைகளும் பண்ணி அளகஞ்சக்கரை மன்றாடியார் என்று பேர் குடுத்து அவனுக்கு சமான மானியந் தென்று சொல்லி பட்டமும் கட்டி. ஆனை மேலே வைச்சு மெறவனை பண்ணி நாடெல்லாருக்கும் அறியப்பண்ணினார்.

அந்தச் சமயத்தில் இத்தொண்டைமாக் கவுண்டன் வந்து செயிச்சவன் நான் என்று சொன்னவிடத்தில் அந்தி கொங்கராயன் தலையைக் கொண்டு வந்தவனுக்கு பட்டமாச்சுது என்று சொல்லி அவனுக்குச் சமாதானமாக மன்றாடி என்னப்பட்ட பேற்கொடுத்தோமென்று சொன்னார்கள். அதுனாலே தொண்டைமா மன்றாடி என்று அவனுக்கு பேர் இருந்தது.

மேல் எழுதப்பட்ட பேத்தான் காங்கய மன்றாடியார் நாளையில் மேல்புறம் கோயமுத்தூருக்கு சேர்ந்த அவிநாசி பாளையப்பட்டில் சோமணக் கவுண்டன் ஆனைக்குப் பிடிச்சு குடுத்துக் கொண்டு இருந்த படியினாலே சந்தோஷப்பட்டு தம்முடைய காரியங்களுக்கு அனுகூலமாயிருந்து நடந்து கொண்டபடியினாலேயும் மன்றாடியார் என்று பேர் குடுத்தார்கள். அதுனாலே அந்த நாள் முதல் சோமண மன்றாடியார் என்று பேர் வறாப்பட்டிது.

ஆவத்துறையிலே பங்கயம் சிற்றமையிலே காடையூரிலே வாசஸ்தலமாயி இருந்து தெய்வத்தியாதி சோதி புருஷரும் பனிரெண்டு கடகம் மாளிகைகள் கட்டிக்கொண்டு அநேக சனங்களையும் குதிரைகளையும் வைச்சுக் கொண்டு துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் பண்ணிக் கொண்டு இருந்தார்கள்.

அக்காலத்தில் இதர பிற தேசங்களிலே இருக்கப்பட்ட பிருமணாளைத் தருவிச்சு தம்முடைய பேரும் காங்கய சமுத்திரமென்று பேர் வச்சு பட்டவிருத்தி கிராமத்தை சுத்த சருவமானியமாக கிரகண புண்ணிய காலத்தில் பிராமணருக்கு தானம் பண்ணினார்கள்.

மூவயிருவத்தி நாலாவது புருஷன் இம்முடி அமராபதி காங்கய மன்றாடியார் நாளில் அக்காலத்தில் வையாபுரி நாடு வேட்டைக்கம்பல பாளையப்பட்டு வெறுப்பட்டு காங்கய நாடு வந்து சேர்ந்து வெகு நாள் இருந்த படியினாலே அவனை ஆதரவு பண்ணி வைச்சுக் கொண்டிருந்து அக்காலத்தில் காங்கய நாட்டுக்கு பொதுவான மடவளாகத்தில் பட்டமுங் கட்டி வச்ச இம்முடி சின்னப்ப நாய்க்கன் என்று பேர் வச்சு அவனுக்கு விரோதமா இருக்கப்பட்ட சிங்கவை பாளையக்காரரை செயிச்சு பண்ணி விச்சுக் கொடுத்து பணம் ஏறினார் பட்டு விசேஷித்துக் குடுத்தபடியினாலே மடவளாகம் இம்முடி சின்னப்ப நாய்க்கன் என்று பேர் வந்தது. அது முதல் வெங்கலுக்கும் பழனி பாளையப்பட்டாருக்கும் மிகவும் அன்னியோன்யமாயி இருக்குறது.

மேல் எழுதப்பட்ட வம்ச பரம்பரையிலே ஆளாளவான் நடக்கப் பட்ட நடத்தையள் முதலானதுகளுக்கு தகவலா இருக்கப்பட்ட

துரைகள் முதலான ஆதரவுகள் காலாந்திரங்களிலே ராசீகங்களிலே சிற்றரசர்கள் விட்டு சிற்றூர்களிலே வாசமாயிருந்தவா னானபடியநாலே அது வயனாப் பிறப்ப வில்லை.

வெங்கள் ஆதீனம் உண்டான நாள் முதல் வம்சத்தில் புண்ணிய பட்டாரத்தினருக்கு கவிபண்டிதமயும் உண்டானவனாயி யிருந்தார்கள். வெங்கள் வம்சத்திலே சொல்லப்பட்ட அருச்சொல் வெங்குற விகண்டு நாளது வரைக்கும் தேசவித்த விகண்டியிலே ஒரு விகண்டாக வெளங்கி யிருக்குது.

யென் தேப்பநாற் இம்முடி அடைப்பதி காங்கய மன்றாடியார் பூர்வத்தில் பல்லவராயகவுண்டர், சக்கரை கவுண்டர் மூன்று பேரும் கிராமங்கள் பிரிச்சக்கொண்டு யிருந்து தமக்குச் சேந்த காடையூர், பட்டாலி, சிறுணூர், பரஞ்சேர்வழி, ஆலாம்பாடி, ஆருதொழு, யிந்த கிராமங்கள் தாம் வச்சக்கொண்டு அடைப்பதியாற் கட்டளையிட்ட விசாரிப்புக்கு பணம் செலுத்திக்கொண்டு யிருந்தபடிக்குத் தாமும் டிப்புசுல்தான் அவர்கள் நாளையில் அறுவடைக்கு பணம் செல்லவில்லை யென்று துராகதமாயி பிடிச்சு வெகட்டகிரியிலே பந்து பண்ணி வச்ச யிருந்தார். அந்த சமயத்தில் கலியுக சகாப்தம் 4887 க்கு பாபவ ஆண்டு ஆவணி மீ பூர்வ பட்சத்துச் சதுர்த்தி நாள் தெய்வகெதி அடைந்தார்.

காடையூருலே சொந்த ஜனங்களுடனே இருப்பவளாயி இம்முடி குமார காங்கய மன்றாடியார் யென்று பேர் உண்டாகி யிருக்கும் யிடத்தில் பருபவ ஆண்டு ஆடி மீ முதல் பிறப்பட்டு பரஞ்சாலங்கள் வாசமாயி சிலகை ஆண்டு மார்கழி மீ வரைக்கும் யிருந்து தை மாசம் காடையூருக்கு வந்து சேந்து தை மாசத்தில் டிப்புசுலுதான் துரைத் தனத்தில் அந்த நாள் ஜமீந்தாரு முன்னிலைக்கு நாட்டார்களும் கூடி பட்டாபிஷேகம் பண்ணினார்கள்.

அந்த நாள் முதல் ரெட்சிகம் பண்ணப்பட்ட பிரபுக்களுடைய தலைக்கு பாத்திரனாக காத்து யிருக்கிறோம். காங்கயம் சிற்றமையிலே டிப்புசுலுதான் அவர்கள் நாள்முதல் அங்காங்கள் வந்து கொண்டு யிருந்தபடியனாலே நான் மெத்த பெலியாயி போயி பளனி சிற்றமையில் தும்பலப்பட்டி கிராமத்தில் குடியிருப்புக் காரனுமி மகா ராச ராச ஸ்ரீ கும்பினியாற் தலைக்குப் பாத்திரனும் காத்துக் கொண்டிருக்கிறேன்.

இம்முடி குமார காங்கய மன்றாடி ஒப்பிதம்.

-()-

# கொப்பையநாய்க்கனூர் ஜமீன்தாரி

## வம்முசாவழி

டி. 3847

இந்த கொப்பையநாயக்கன் வம்முசா வழி கணக்கும் ஒலைப் பட்டயத்திலிருந் தெழுதினது

பூருவ சங்கதிகளுடைய வர்த்தமானமும் வம்முசாவழிகளுடைய விபரமும் ராமசந்திர நாய்க்கர் பார்வைப்பட்டுக்கு:—

சுபஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1342 கலியுகாப்தம் 4521 மகாராசமானிய ஸ்ரீ ராயரவர்கள் ருசியப் பரிபாலனம் பண்ணுகிற முன்னுக்கு பெயங்கள் பெரியவர் காமய்யார் கோத்திரத்தில் ராமசந் திரப்ப நாய்க்கர் ... கம்பிலிக் கோட்டைக் கிருமத்தில் குடியிருந்து நாட்டாண்மை செய்துக் கொண்டிருக்கையில் ராயரவர்கள் சமஸ் தானத்தில் ... குதிரை பசுவரி சண்டு. அந்த மரியை சேவுகர் ... குச்ச ராச்சாருக்கொல்லி ஆகில் கிடங்குயில கொண்டுபோய் ... ட்டு விட்டார்கள். அந்தக் குதிரைக் குட்டியை வெள்ளுமுன் பெரிய ராம சந்திரப்ப நாய்க்கர் கண்டு குட்டியை யெடுத்துக்கொண்டு போய் வளர்க்கிப் பாலூத்தி வளர்த்து அந்தக் குட்டியும் பெரிய குதிரையாயி நல்ல நடையும் லட்சணமுள்ள குதிரையாய் யிருந்தது. அந்தக் குதிரையை ராயரவர்கள் வேணுமென்று கேட்டார். குதிரையைக் கொடுக்கிறதில்லையென்று தகரார் செய்துகொண்டு ராயரவர்கள் வலுவந்தமாய்க் கொண்டு போறதாய் யிருக்குதென்பதாய் தெங்கள் குலதெய்வமாகிய காமாட்சியம்மனைத் தோத்திரஞ் செய்ததில் அம்மன் சொப்பனத்திலே உத்தாரங் கொடுத்தது என்னவென்றால் குதிரையை வந்து கேட்டால் நீ குதிரையைக் கொடுக்க வேண்டிய தில்லை. யிருப்புக் கட்டியிரும்பிலே ஒரு துட்டு தடி செய்து வைச்சுக் கொண்டிரு. வலுவந்தமாய்க் குதிரையைப் பிடிக்க வந்தால் அப்போது துட்டுத்தடியாலே அடித்துச் சேதப்படுத்தி விரட்டிவிடச் சொல்லி நிச ... த்திரவாயிது. உத்திரவை மேரைக்கு துட்டுத்தடி செய்து வைச்சுக் கொண்டிருந்தார்கள். அப்படி யிருக்கையில் ராயரவர்கள் சேவுகாளைத்தி மனுஷாள் வந்து குதிரையைப் பலவந்தமாய்ப் பிடிக்க வந்தார்கள். அந்த முன்னேயில் யிருபேருக்கும் சண்டையானதில் வென் பெரியவராகிய ராமசந்திரப்ப நாய்க்கர் அந்த சேவுகரை அடிதண்ட

னாய் நுட்டுதடியாலே அடித்து லொரு சேதவாத படுத்தி விரட்டித் துரத்திவிட்டார்கள். அப்போது ராயரவர்கள் யிவருடைய சவுரியத்தை யறிந்து சந்தோஷப்பட்டு யெங்கள் பெரியவர் ராமசந்திரப்பநாய்க்கர் ஆகிறவரை வரவழைத்து மகாசந்தோஷமும் பட்டு யிவருக்கு கிராமமும் இனாமாகக் குடுத்து சிங்கமுகப் பல்லாக்கும் பஞ்சவர்ண வெட்டும் பாவாடை, சந்திரகாவி வெட்டுப்பாவாடை, உபையவெண்சாமரமும், சந்திரகாவிடம், அனுமந்தடாலு, குடை ..த்தப்பட்டுக்கம்பட்டி, உபையப்புச்சக்கிறதுடை, குடைமேல்க் குடையும் விராகம்டாமணி விருது, கோமதிக்கி விருது, சமுத்துராக வெண்டையம், கையில் மயில்...த தலைத்தா மூதலில் இமயவல்லி, வெளித்தோல் விருது, ரத்நமுறுஞ் முத்துப்போர மாலிகளடக்கொடாலி னொதுமை த்தில் ஒத்லைதமமளிக்கட்டு மவா.. இத்தையாதி விருதுகளும் குடுத்து ஓடைமேல் நகாறு. ஆனைமேல் அம்பாரியுங் குடுத்து சிறுது வெகுதிருஷ்ட் செய்து அனுப்பிவிச்சார்கள். அந்த வேலைக்கி தம்பியே ராமசந்திரப்பநாய்க்கர் பாளையப்பட்டென்று பேருமிட்டுக் கொண்டிருக்கையில் ராமசந்திரப்பநாய்க்கர் அந்த பிள்ளையள் ஆறு பிள்ளையாக பிறந்தார்கள். அதில் மூத்தவர் வயமநாய்க்கர் அவை த்தியே துரைத்தனஞ்செய்துக் கொண்டிருந்தார். அதுக்கு இளையவர்கள் நாலுபேரும் தலைவனுடத்தில் கோபஞ் செய்துக்கொண்டு தெற்கே பிறப்பட்டு வந்ததில், அதில் மூத்தவர் வெழுத்தி பூமாநாய்க்கருகுறவர், செங்லதாம் போய்சேர்ந்தார். அதுக்கு யிளையவர் பெத்தனாநாய்க்கராகுறவர் பெரிகுளம் வடகரைப்போய் சேர்ந்தார். அதுக்கு யிளையவர் தாடிக்கொம்பைநாய்க்கராகுறவர் நாகமலை அடிவாரத்தில் மாக்குச் சாரியில் குள்ளக்கோம்பை … ஆரண்யமான வடமிருந்தது. அந்தக் காட்டிலே தொழுதபோட்டு சிறிது பாச் பசுக்கள் அடைத்துக்கொண்டிருந்தார்கள். அதற்கிளையவர் நல்லதாது நாய்க்கராகுறவர் சொழுக்கு கிராமத்தில் போயிருந்தார். தாடிக்கொம்பைய நாய்க்கருகுறவர் பசுமாட்டிக்குத் தொழுப்போட்டுக் கொண்டு குடியிருக்கிற முன்னிலையில்: அப்போது பாண்டிய தேசத்தில் பாண்டிய ராசாக்கள் துரைத்தனம் பெறுப்பட்டு ராயரவர்கள் கோட்டிய முகம் நாயக்கரவர்களை விசுவநாதநாய்க்கர் கிருஷ்ணப்பநாய்க்கரை வரவழைத்து மதுரைபுரிக்கி பட்டங்கட்டி அனுப்பிவிச்சார்கள். அவர்கள் பாண்டிய தேசத்துக்கு வந்து தெச்சணத்தில் பஞ்சபாண்டியர் ..விசுவநாத நாய்க்கரவர்கள் மதுரையில் துரைத்தனஞ் செய்துக்கொண்டு யிருந்தார்கள். அப்போது யெங்கள் பெரியவராகிய தாடிக்கொம்பைய நாய்க்கரிடத்துக்கு ஒருவரை மனுஷரை அனுப்பிவிச்சி வரிகுடுக்கச் சொல்லிக் கேட்டார்கள். அப்போது அவர் புல்வரி கொடுக்கிறதில்லை

யென்று குலதெய்வமாகிய காமாட்சி அம்மனை ...[நன்]னாக்கியம்மை கன்னிமாத் அம்மனையும் தொழுதிருந்து செய்ததில் கனவில் உத்திரவு கொடுத்தது யென்னவென்றால்: நீ அரமனைக்கு பல்லாரி ரணங் கொடுக்க வேண்டியதில்லை. சசிப்பணக்கேட்டு வந்த ..விசுப்பேரு அதற்கு பேல் வழுவைத்தந்த பொய்யாய் நாம் உனக்கு செயப்பிரசித்து கொடுக்கிறோ மென்று உத்திரவாய் அந்த உத்திரவு பேரைக்கு விருக்கையில் அரமனை மனுசாள் ...தானத்துடனே வந்து பல்லாக்குப் பணாங்குடிக்கச் சொல்லி மற்றதில் தொழுதிருந்த பாக்கு னெல்லாம் யென்னவிந்து வந்த பேரையெல்லாம் விரட்டியடித்து சிரம்பவும் (சே)தப்படுத்தி வைப்பக்கு ஆக்குக்கு வடக்கே முடிக்கி விட்டுது. அந்த சமாச்சாரம் கற்னாடகத்துரைகளாகிய விகள ஒதுநூக்கரவர்கள் கேட்டு மகா சந்தோஷப்பட்டு யெங்ஙே நாயக்கிகொப்பையநாயக்கரை வரவழைத்து வெகுமதியுஞ் செய்து மதுர புரிக்கு மேல்புறம் நாகமலைக்கு வடக்குச்சாரியில் முள்ளக்கொப்பை கவுண்டர் யெனியே சேர்ந்த கம்பத்துமனை அடிவாற கிராமம் பேற்வழிக் கொப்பையநாயக்கர் கனர் ஜமீதாரி ஒன்று, சந்தையூர் சேடப்பட்டி ஒன்று, பெக்கைப்பநாயக்கன் பட்டி ஒன்று, வலைப்பட்டி ஒன்று, பூத்தைய கவுண்டன்பட்டி ஒன்று, விருவீ ஒன்று, கொல்லபநாயக்கன்பட்டி ஒன்று, நரசிங்கபுரம் ஒன்று, கேபகவுண்டன் பட்டி ஒன்று, செனுமாது பட்டி ஒன்று, மொட்டு தேவம்பட்டி ஒன்று, வாத்திநாபட்டி ஒன்று, சம.. நாயக்கன்பட்டி ஒன்று, தலைக்கோட்டை கணபதிபட்டி ஒன்று, பொடிகாவுண் டன் பட்டி ஒன்று, காமன்க்கவுண்பட்டி ஒன்று, ... வெலிசெட்டிப் பட்டி ஒன்று, காமிநாயக்கன்பட்டி ஒன்று, வண்டப்பட்டி ஒன்று, சின்னநாயகண்டன்பட்டி ஒன்று, செக்காம்பட்டி ஒன்று ஆக கிராமம் 24-ம் பாளையப்பட்டாக விட்டுக் குடுத்து கொப்பையநாயக்கனூர் என்று பேருங்குடுத்து பாளையக்காறப் பட்டமுங் குடுத்து ரூயர் சமஸ் தானத்தில் கொடுத்த விருதுகளும் அல்லாமல் மேலும் நகைகளையும் குடுத்து அதிலாக்கி பதக்கு முகச்சல்லி, முன்னங்கால் வெண்டயம், பனாயிர், முன்சல்லி, பின்சல்லி, சிங்கமுகக்கடுக்கன், அ(ண்ட)க்த மணி புலித்தோல், முகமட்டு, கொடிக்கி, ஒத்தை சல்லி, ரூதுநசல்லி, முன்னைச் சல்லி இத்தனையாதிபத்தக்கமும் குடுத்து வேண்டிய வெகுமதியுஞ் செய்து வரு இரும் விட்டு குடுத்து அனுப்பிவிச்சார்கள். அதுமேலை வருநக்கு வந்து சந்தையூர் கொப்பையநாயக்கனென்று பேரும் விட்டுக்கொண்டு அரமனைக்கு குமாரவர்க்கமாய் நடந்துக்கொண்டு வருவதில் கற்னாடகத் துரையன் மதுரபுரிக் கோட்டைப் போட்டுக் கோட்டைக்கு எழுவத்தி ரெண்டு கொத்தளமும் போட்டுவிச்சு எழுவத்திரெண்டு பாளையக்

காடுவரையும் வரவழைத்து அவர்களுக்கெல்லாம் ஒவ்வொருக் கொத்தளமும் பிரித்துவிட்டு கொம்மையனுக்குகந்த அன்பத்திரெண்டு கொத்தளமும் பிரித்து விட்டு நாயக்கரம் வைச்சுக் காத்துச் சொல்லியும் மதுரைத் திவ்விய க்ஷேத்திரங்களில் பாதுகாவல் கிராமம் விட்டுக்கொடுத்த பேர்வழி மதுரை சீர்மையில் கோவில் [வீடு] தாலுக்குச் சேர்ந்த நன்னூராங் கோட்டை உபகிராமம்... பூபடகிராமம் ஒன்று. திண்டுக்கல் சீர்மையில் ...த்தியக் குண்டுகிராமம் நற்சனையும் உபக்கிராமம் கோட்டைப்பட்டி ஒன்று. பழையகாத்திலங்குண்டு ஒன்று. சத்திரப்பட்டி ஒன்று, ஒத்தைநாரசப்பட்டி ஒன்று. விராலிப்பட்டி ஒன்று. சாமிநாயக்கன் பட்டி ஒன்று. பூசன்பாடி ஒன்று. வெள்ளியப்பநாயக்கன் பட்டி ஒன்று. ஆகக்கிராமம் ஒன்பதும் பாதுகாவல் விட்டுக் கொடுத்து அந்த கிராமங்களில் நஞ்சைபுஞ்சை உப்பளங்களும் வரிவகை வேண்டுகோளும் விட்டுக்கொடுத்து அநுபவித்துக் கொள்ளச் சொல்லி அனுப்பிவிச்சார்கள். அந்தப்படிக்கு சேர்ந்த பூமியையும் காவல் பூமியையும் இனமாக அநுபவித்துக்கொண்டு கொத்தளமும் சனம் போட்டு காத்துக்கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்கமாக நடந்துகொண்டு முப்பது வருஷம் துரைத்தனஞ் செய்து கொண்டு இருந்தார்.

2வது பட்டம் அவர் குமாரன் தும்மிச்சிநாயக்கர் சொந்த பூமியும் காவல் பூமியும் இனமாக அநுபவித்துக்கொண்டு கொத்தளமும் காவல் காத்துக்கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்கமாக நடந்து கொண்டு 25 வருஷம் துரைத்தனம் பண்ணி அதின்மேல் தெய்வீகமானார்.

3வது பட்டம் அவர் குமாரன் நாரமநாயக்கர் சொந்த பூமியும் காவல் பூமியும் இனமாக அநுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக் கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்கமாக நடந்துகொண்டு முப்பத்திரண்டு வருஷம் துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானார்.

4வது பட்டம் அவர் குமாரன் பொம்மைநாயக்கர் சொந்தபூமியும் காவல் பூமியும் இனமாக அநுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக்கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்கமாக நடந்து கொண்டு 50 வருஷம் துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானார்.

5-வது பட்டம் அவர் குமாரன் தும்மிச்சிநாயக்கர் சொந்த பூமியும் காவல் பூமியும் இனமாக அநுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காவல் காத்துக்கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்கமாக நடந்து கொண்டு இருபது வருஷம் துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானார்.

6-வது பட்டம் அவர் குமாரன் நாரமநாயக்கர் சொந்த பூமியும் காவல் பூமியும் இருமாக அநுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக்கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்கமாக நடந்து கொண்டு 27 வருஷம் துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானார்.

7-வது பட்டம் அவர் குமாரன் கொப்பையநாயக்கர் சொந்த பூமியுங் காவல் பூமியும் இருமாக அநுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக்கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்கமாக நடந்துக்கொண்டு 25 வருஷம் துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானார்.

8-வது பட்டம் அவர் குமாரன் தம்பாச்சிநாயக்கர் சொந்த பூமியுங் காவல் பூமியும் இருமாக அநுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக் கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்கமாக நடந்து கொண்டு 20 வருஷம் துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானார்

9-வது பட்டம் அவர் குமாரன் நாரமநாயக்கர் சொந்த பூமியுங் காவல் பூமியும் இருமாக அநுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக்கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்கமாக நடந்துக்கொண்டு 33 வருஷம் துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானார்.

10-வது பட்டம் அவர் குமாரன் பொம்மையநாயக்கர் சொந்த பூமியுங் காவல் பூமியும் இருமாக அநுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக்கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்கமாக நடந்து கொண்டு 29 வருஷம் துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானார்.

11-வது பட்டம் அவர் குமாரன் நாரமநாயக்கர் சொந்த பூமியுங் காவல் பூமியும் இருமாக அநுபவித்துக்கொண்டு கொத்தளமுங் காத்துக்கொண்டு கர்த்தாக்களுக்கு குமாரவர்க்கமாக நடந்துகொண்டு 19 வருஷம் துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்வீகமானார்.

அப்போது கலியுக வருஷம் 4831 சாலிவாகன சகாப்தம் வருஷம் 1652 இடித்தப்படிக்கி பதிமூனு பட்டக்காரரும் கர்நாடக சமஸ்தானம் அவர்களுக்கும் ராசாங்கம் தங்களுடைய சொந்த பூமியுங் காவல் பூமியிலுள்ள உம்பளா சுரோத்திரியமும் இருமாக அநுபவித்துக் கொண்டு வருகையில் ஸ்ரீரங்கபட்டணத்து லாயரும் கர்நாடகத்து ராயவர்களும் திண்டுக்கல் சீமையைக் கட்டிக்கொண்டு ஆண்டிருக்கையில் 12-வது அவர் குமாரன் தம்பாச்சிநாயக்கருக்குப் பட்டமாகி யாதொரு உள்ளபடிக்கி சொந்த பூமியுங் காவல் பூமியும் இருமாக அநுபவித்துக்கொண்டு இருக்கையில் திண்டுக்கல் சீமை அரும்பாக்கம் வெங்கிட்ட ராயவர்கள்

யிந்தப்பாளையப்பட்டுக்கு தோப்பாரப்பணம் நிருதிசெய்து ..200 பணம்.. ஜெகத்தீத்துக் குடுத்துப் பிறமலை நாட்டுக்கள்ளர் திண்டுக்கல் சீர்மையிலே களவும் செய்கிற நிமித்தியம் கணவாய்க் கட்டுக்கு ஆள்போட்டு காத்துச் சொன்னது. கல்கட்டிக்கணவாய் 1, கள்ளுக்கோம்பை கணவாய் 1, ஆத்தியான் கணவாய் 1, புல்லுக் கணவாய் 1, கூழ்நாவல் மூடுக்கு கணவாய் 1. இந்த அஞ்சுக் கணவாய்க்கும் ஆள்போட்டுக் கள்ளர் களவுகள் நடவாதபடிக்கி காத்து வரச்சொல்லியும் ௵ 1 க்கு... 500 கலம் அரமனையார் சம்பளம் குடுத்து வந்தார்கள். யிந்தப் பாளையம் ௵ 17 பாளையப்பட்டு துரைத்தனம் பண்ணி அதின்பேரில் தெய்விகமானார்

13 வது பட்டம் அவர் குமாரன் நாகமநாயக்கருக்குப் பட்டமாகி ஜதர்சாமய்ய நாளையில் முன்காணிக்கை......100 க்கு 200 பணம் உபரிக் கூடக்கூட்டி ஆக.. 500 பணம் தீர்த்து நிருதி செய்தார்கள். அதே மேரைக்கி ... 500 பணம் காணிக்கைகுடுத்துக்கொண்டு கந்தகாய்க் கட்டுக்கு ... 500 கலம் நெல்சம்பளம் வாங்கிக்கொண்டு சொந்த பூமியும் காவல் பூமியும் அனுபவித்துக்கொண்டு கணவாய்க்கட்டுங் காத்து கொண்டு 19 ௵ துரைத்தனம் பண்ணி தெய்வீகமானார்.

14 ம் பட்டம் அவர் குமாரன் பயனாகு நடப்ப பொம்மையநாயக்க ருக்கு பட்டமாகி மீருசாமய்ய நாளையில் வசைதுசாமய்ய திண்டுக்கல் சீர்மை அமுலுக்கு வந்தபோது சாதாருண வருஷம் வரைக்கும் . 500 பு குடுத்தும் கொண்டு சொந்த பூமியும் காவல் பூமியும் அனு பவித்தேன். அப்பால் கும்பினியாரவர்கள் திண்டுக்கல் சீர்மை துரைத் தனத்துக்கு வந்ததில் மக்களூட்டு துரையவர்கள் அதிகாரத்தில் என் பாளையபட்டுக்கு வரையறுப்பு . 300 பு .... 200 பு கூடக்கூட்டி ...700 பு தீர்ப்புச் செய்து பெரிய தாயாதிக்காரனுடைய தெய்வதானவத ரூத்தி பெத்தணாயக்கர் வென்விடப் வந்து தமக்குப்பின்னாலேன்ன வென்று தமையன் குமாரன் குமசாமிநாய்க்கரைத் தெத்துப் புத்திரனுக் குடுக்கச் சொல்லி பஞ்சன் நீர்குடித்து வளர்த்திருக்கையில் தாசாதி பெத்தணாயக்கர் தெய்வீகமானார்.

அந்தத் தெய்வதானம் பாளையப்பட்டு பூமிக்கி துரைத்தனத்துக்கு குமசாமிநாய்க்கரை பட்டங்கட்டி வைத்து மக்களூட்டு துரையவர்கள் நாளையில் தெய்வதானம் பாளையப்பட்டுக்கு வருஷம் 1க்கு ..2100 பு தீர்ப்புசெய்தார்கள். அதே மேரைக்கிச் சாதாருண ௵ முதல் ருட்சத வருஷம் வரைக்கும் காணிக்கையும் கொடுத்துக் கொண்டு பாளையப் பட்டை அனுபவித்து வருகையில் உத்தரதுரை குமாயில் துமாசீ வாசதேவபிள்ளையிடத்தில் பெருமாளுக்கர் குமாரன் நல்லதாது

நாய்க்கன் மித்திரமாய் 1005 ஏ யாவிலே குடுக்கிறேனென்று சொன்ன படியினலே பெண்விடமாக இருந்த பூமியை வஹுபத்துக்கலே அவனுக்கு தெய்வதானத்தைக் கட்டிக் குடுத்தார்கள். பின்னும் பெண் சொந்தப் பாளையப்பட்டை சப்தி பண்ணினார்கள். அப்பால் ஆற்காடு துரை யவர்கள் நாளையில் நளலூ பெண்ணை வரவழைத்து டவ் பாளையப் பட்டு கும்பினியார் சப்தி பண்ணியிருப்பதால் மாதம் 1க்கு 50 ரூபாய்ச்சம்பளம் செய்திருக்கிறோமென்று சொன்னார் வருஷ முதல் குமிதாக்காரி வருஷம் வரைக்கும் சம்பளம் பத்திலேன். மத்தா லூ சாமிக பெரிக துரையவர்கள் பெண்ணை வரவழைத்து பெண் பாளையப்பட்டு சப்தியா யிருந்ததையும் விட்டு குடுத்து பெண்க்கு கும்பினியிலிருந்து சிறது பணமுங் குடுத்து வகையறுபபு பூஸ் 1380... ...268 ஆக திட்டப்பு செய்து அனுப்பினார். அப்படியே குமிறுநவருஷம் வரைக்கும் செலுத்தினேன். ஆனால் மைபமெஷ் திரவை முன்பாரமாக விருந்தபடியினலே குடியன் 10 வருஷம் தீர்வு அதனால் குடுத்து ககை மெலிந்து ஒடுங்கி போய்விட்டபடியினலே பணம் நிலுவையாச்சுது. அந்த பெயரமிலி சப்தி பண்ணி அமீனு பேஷ்குசுத்துசெய்துக் கொண்டார். 8 வருஷம் கும்பினியில் சப்தியா யிருப்பதால் வருஷாவருஷம் ஆக்கு சாஷுக்கு உண்ணாமல் போறதில்லாமல் அடியேன் பாக்கிதாரனாய்ப் போனேன்-ஆனதால் அடியேன் பேரில் கும்பினியார் தயவு செய்து காப்பாத்த வேணுமாது.

★

# கோட்டைக்காடு ஒடுக்கம் கருப்பதம்புரான் வமுசாவழி விபரம்

டி. 3849

1816 ௵ ஜூன் ௴ 24. அடியனூத்து பிட்டாபிசேகரம்.

ஸ்ரீமுக சகாத்தம் 1832க்கு சாலிவாகன சகாத்தம் 1653க்கு மேல் செல்லா நின்ற விரோதிகிறுது வருஷத்துக்கு விசையரங்க சொக்கநாத நாயக்கரவர்கள் பட்டம். அதின் பிறகு அவருடைய பெண்சாதி ராணி மீனாட்சி அம்மாள் அதிகாரத்தில் யிந்த அம்மாள் தளவாய் வெங்கிடப்பெருமாள் நாயக்கர் திண்டுக்கல் சீர்மை அதிகாரஞ் செய்கிற நாளையில் திண்டுக்கல்லுக்குச் சேர்ந்த கன்னிவாடி அடியனூத்து கிராமத்தில் மேல்ப்பயூர் மேட்டுக் குளத்துக்கு மேற்கே ஆரணியமான காடாய் காடு நிக்கோட்டை ச் செடியும் மிறுக மெந்நும்பயமான வன மத்தியத்தில் வெள்ளாள திருமேனிக் கருப்பண்ணபாரதி யென்கிறவர் பிரகன்துயாக்கமாய் கொடிக்காலில் சிவனைப் பண்ணிக்கொண்டு யிருக்கிற நாளையில் முன்னுரைத்த சித்தாதிகள் மேலெழுதிய அடியனூத்து ஆரணியத்தில் ஒரு ஆலமரத்தடியில் வந்திருந்து இவரை வரவழைத்து இவருக்கு உபதேசம் பண்ணிவித்துப் போட்டுப் போனார்கள். அதின் பேரில் சிறுமலையின் திண்டுக்கல்லிலிருந்து சிவனைப் பண்ணிக்கொண்டிருந்தார். மேலெழுதிய சித்தாதிகள் பின்னும் மடத்தில் வந்திருந்து பயமாய் வரவழைத்து காவென்றுஇவரைப் போய் நேமமாயித்தானம் பண்ணிவிச்சிக்கொண்டு மறுபடி சொல்லிருப்பிய வனத்தில் ஒரு அத்திமரம் அத்திஷைத்து யென்றொரு வைத்துப் பிருக்குது அதிலிருந்து தவசு பண்ணிக் கொண்டிருமென்று உத்தரவு கொடுத்தார்கள். அதில் ஒடுக்கம் கட்டி வைத்து சந்தனமும் செய்விச்சுக் கொண்டு இருக்கிற நாளையில் மேலெழுதிய மீனாட்சியம்மாள் பிறந்து ராணியாய்ச் சீர்மையும் மைசூர்பரம் வசமாகி சொருகுதப்பண்ணாதர் அதிகாரத்தில் மேலெழுதியக் கருப்பண்ணபாரதி யென்கிறவர் பரம்பரைகள் கூட விசேஷமாயிருந்தது. தேசத்தில் தாதுவருஷமாய் நடக்கிற அநேகங்கள் யெல்லாஞ் சொல்லுகிறது. இப்படி செய்த சித்தாதி யாயிருக்கிற சமாச்சாரம் பேண்பாத யெருமைப்பண்ணாதர் இந்தப் பெரியவரிடத்தில் அவருடைய சித்து மருத்துவத்தை அறியவேணுமா

யென்று அவரிடத்தில் ரெகுநாதர் பண்டிதர் வந்து சாப்பாட்டுக்கு வரவேணுமென்று பல்லக்கு மேலேறச் சொல்லிச் சொன்னார்.

அதற்கு பல்லக்கு மேல் நாமேறினால் பல்லக்குக் கொம்பு முறிந்துபோகு மென்று சொன்னார். அதற்கு ரெகுநாதபண்டிதர் அப்படியல்ல பல்லக்குமேலேறிக் கொள்ளுமென்று சொன்னார். இவர் பல்லக்கு மேலேற பல்லக்குக் கொம்பு முறிந்து போச்சுது. பின்னும் ரெகுநாத பண்டிதர் நாம் பல்லக்கு தூக்கிக்கொண்டு போகவேணும் பல்லக்குச் செம்மையாயிருக்க வேணுமென்று சொன்ன அப்படியே சொல்வாயாகுமென்று உத்திரவு கொடுத்தார். பல்லக்குமேலேறிக் கொண்டு போனார். அதின் மேல் கோட்டைக்குள்ளே தன்வீட்டி லழைத்து வந்து சாப்பாடு பண்ணிவிச்சு ஒரு மச்சு வீட்டில் படுக்கை யமைத்துக் குடுத்து கதவு சாத்திப் பூட்டுப்போட்டுப் பாரா வைத்து காலமே பார்க்குமிடத்தில் இவர் ஒடுக்கத்தில் வந்திருந்தார்.

அதின் பிறகு ரெகுநாத பண்டிதர் தாம்செய்தது அபசார மாச்சுதென்று ஆயிரம் பேருக்கு பிராமண போசனம்[ம்]பண்ணு விச்சு இவருக்கு காரையிலேயே ஒடுக்கமுங் கட்டிவிச்சு பின்னும் மேலெழுதிய அடியனாத்து கிராமத்தில் மானியம் புஞ்சைக்குளி 24, நஞ்சைக்குளி 10-ம், தொட்டனூர்த்தில் புஞ்சைக்குளி 12. இவளவும் சறுவமானியமாக செய்து குடுத்தார்கள். அதின்பிறகு தலைமடு பாளையப்பட்டில் புஞ்சைக்குளி 50 நஞ்சை பெரியஏரிக்கல் குளம் நஞ்சைவிதைப்பாடு கலம், இமக்கலாபுரம் பாளையப்பட்டில் புஞ்சைக் குளி 30 நஞ்சை நத்தம்பாடிப்பாரக் குளத்தில் நஞ்சை விதைப்பாடு கலம், அம்மையநாய்க்கர் பாளையப்பட்டில் புஞ்சைக்குளி 7 இவ்வளவுஞ் சறுவமானியமாய் விட்டு கட்டளை பேருக்கு போகத்துக்கு குறுணி தவசம் சமுசாரியளிடத்திலே வத்தனைக் குடுக்கச்சொல்லி ரெகுநாத பண்டிதர் உத்திரவு குடுத்தார். அக்கப்பிரகாரமே நடந்து வந்தது. இப்படி யிருந்து சறுவசித்து வருஷம் தை மீ நக்ஷத்திரத்தில் அடைந்து போனார். அவருக்குச் சமாதியும் வைத்து ஒடுக்கங்கட்டி அவருடைய சிஷன் மருதூர்சிவலையடியன் செட்டிக்கிருபேசி பண்டிச்சாமியாரென்று வந்து அவருக்கு சகல கருமங்களும் செய்துவிச்சு நித்தியப்படி பூசைசெய் விச்சுக்கொண்டு அவர் பட்டத்துக்கு யிருந்தார். அவரும் முன்னிருந்த சுவாமியார் பிடாவந்தத்திலும் சகல வியாதிகளுக்கும் விபூதி குடுத்தால் சொஸ்தமாகும்.

அப்படி காளயுக்தி ௵ வரைக்குமிருந்து அவர் சமாதியாகி அவருக்கு ஒடுக்கங்கட்டி நித்தியப்பூசை நடந்து வருகுது.

அவருடைய சிஷன் வெள்ளானைத்திருமேனி அருணாசலப்பரதேசி யென்று பிறமலையிலிருந்து வந்து அவருக்கு ஆகவேண்டிய கருமங் களுஞ்செய்து மறுபடி பட்டங்கட்டிக்கொண்டு சித்தார்த்தி ஸு முதல்கொண்டு யின்னேரம் வரைக்கும் (ஆக வருஷம் 49) அவருடைய கிருபாகடாக்ஷத்தினாலே சகல வியாதிகளுக்கும் விபூதி குடுத்தால் சொஸ்தமாகும்.

இடி ஒடுக்கத்தில் சுப்பிரமணியசுவாமிக்கும் விநாயகருக்கும் வயிரவருக்கும் நித்தியப் படிப் பூசையாகுது. சமாதி ரெண்டுக்கும் பூசை யாகுது.

வந்த பரதேசியளுக்கு அன்னங்குடுத்து வருகிறது. முன் அடைந்து போன பெரியோர்களுக்கு அவரவர் அடைந்த தினத்தில் குருபூசை செய்து அன்னதானம் நடந்து வருகுது. இந்த ஸ்தலத்தில் மேலெழுதிய மானியத்தில் இப்போ பாதிமானியம் நடந்து வருகுது. யெதுவுமே யென்னாலும் ஸ்ரீ ஆற்காட்டு துரையவர்கள் தனியில் மெய்ம்மெய முன்னுக்கு கிராமத்தார் பயந்து பொறுப்பு வருமென்று பாதிமானியம் கெடுத்து விச்சார்கள்.

[அதிவஹுராத்து பாலகிருஷ்ணய்யா கையெழுத்து. தெலுங்கில் உள்ளது.]

பாதிமானியம் கட்டுப்பட்டுபோச்சுது. நீக்கின் கொஞ்சம் மானியம் நடந்து வருகுது. கும்பினியாரவர்கள் தயவுசெய்து பழையபடி மானி யங்கள் நடத்தும்படியாக உத்திரவு குடுத்தால் பரதேசிகளுக்கு அன்னதானம் நடந்து வரும். கும்பினியாரவர்கள் எங்கள் மேல் கிருபை செய்யும்படியாய் தயவு செய்து ரட்சிக்கவேண்டியது. இப்போ நடந்து வருகிறது சர்க்காரிலே புஞ்சை குளி... 1000 பணம் நஞ்சைகுளி 2½ குழி இனாமும் நடந்து வருகுது.

*

# சல்லிப்பட்டி பாளையக்காரன் எரம நாய்க்கன் வமிசாவளி

டி. 3130

தாராபுரம் தாலுக்கு புள்ளாச்சி தாலுகா சல்லிப்பட்டி யெரம நாய்க்கன் யென்னப்பட்ட பாளையக்காறனுடைய வம்சாவளி முதலான கைபீது யென்னவென்றால் :-

பூர்வத்தில் மகாதனா வம்சத்தில் உதிப்பதியான ஒன்பது கம்பளத்தில் தொட்டிய கம்பள சாதியான குச்சல பொம்(ம) நாய்க்கன் நாளையில்லடக்கு ஆனெயந்தில் தில்லிபாதுஷாவா யிரும்பியிலே குறுசி யென்னப்பட்ட பாளையப்பட்டுக்கு மன்னாதனமாக ஆண்டுகொண்டு யிருக்கும் நாளையில், அக்காலத்துக்கு டில்லிபாதுஷா கம்பள சாதியில் பெண்வா[க]ங்கிக்கொள்ள வேணுமென்று யிச்சித்த யிருந்த படியனாலே அதுக்கவனுக்குப் பெண் குடுக்கமாட்டோமென்று கம்பளசாதி அனைவரும் யேககூட்டமாயி புறப்பட்டு பரதேசத்துக்கு போயி சேரவேணுமென்று யோசனைத்திறீலே புறப்பட்டு வருகிறபோது மார்க்கத்தில் தென்டாறு பூர்ணபிரவாகமாயி இருந்தது அந்த சமயத்தில் அதின்சாமத்தியிலே கம்பளசாதி கூட்டங்கள் யெல்லாம் நதி பிறவேசம் பண்ணவேணுமென்று யிச்சித்து யிருந்தார்கள். அந்த சமயத்தில் இருகரையிலேயும் இருக்கப்பட்ட புங்கமரங்கள் ஒன்றாக சாஞ்சபடியனாலே அந்த ஆதாரத்திலே நதி தாண்டி இக்கரை சேந்தார்கள். அப்போ அந்த புங்கமரங்களை தங்களுடைய இஷ்டதெய்வமாக யெண்ணிக்கொண்டு அக்காலத்து குரு சறுவ்தாரனான விஜய நகரப்பட்டணம் பிரவேசிக்க யிருந்தார்கள்.

விஜயநகரப்பட்டணத்திலே கம்பளத்தார் கூட்டம் அனைவரும் வந்துயிருக்கும் நாளையில், அக்காலத்து ராயர் சறுவ்தாரனதிபதியாள ......ருபர் அவர்கள் கம்பளசாதியார் அனைவரையும் தரிசிக்க அவரவர்களை அவரவருடைய சாதனைபோதி வித்தை குலதெய்வங்களை ட்டு தெரிந்து கொண்டு அவரவருக்குத் தக்கின யோக்கியதாவு யாயி சீவனங்கள் உண்டு பண்ணிக்கொடுக்குற சமயத்தில் ல்தறனை குச்சல பொம்ம நாயக்கனை தரிசிக்க போகட் ல்லாம் விசாரிச்சு தெரிஞ்சு கொண்டு அவர் சொல்லப் ன்னிலே கெம்பீர புருஷனென்று தோணப்பட்டு

நம்ம சமுஸ்தானத்திலே தானே இருமென்று பிறதி பண்ணி யிருந்தார்கள்.

அதின் பிற்க்காலதுல் ராயர் சமுஸ்தானத்தில் பட்டத்து குதிரை யானையிம், ருஷ்லி சமுஸ்தானத்தார் வையாளிக்கத் துறையிலே கொண்டு போனபடியினாலே, அந்த குதிரையயை சாதனம் பண்ணி கொண்டு வருவோமென்று நினச்ச ராயர் தர்பாரத்தில் யிருக்கப்பட்ட சொங்களே மெல்லாம் தறியச்ச சனவு போன குதிரையனைத் தபிச்சப்பட்ட வனுக்கு அனேகம் வெகுமதி பண்ணுகிறோமென்று உத்திரவு செயித சமயத்தில் மென் பெரியோற்களில் குச்சல பொம்ம ருயக்கன், சனவு குதிரையயை நான் கொண்டு வந்து ஒப்புவிக்குறே மென்று வெத்திலை பாக்கும் வாங்கி கொண்டு டில்லி சீறமைக்கு போயி தன்னுடைய மனத்திர சாதனை நயிதியங்கள்னாலே பட்டத்து குதிரையயை கண்டு பிடிச்ச டில்லியிலே யிருந்து நக்ஷித்திரத்தியாறு பிறப்பட்டு விஜயநகரபட்டணம் வந்து சேந்து ராயர் சமுஸ்தானத் திலே பட்டத்து குதிரையயை கொண்டு வந்து ஒப்புவிச்சார்கள். ராயர் சந்தோஷப்பட்டு சகல வெகுமதிகள் செய்து தகு ஸ்தானமும் உம்பளிக்கையும் குடுத்து பிறதிபாலனம் பண்ணிக்கொண்டு யிருந்தார்கள்.

அதின் பிற்க்காலதும் ராயர் சமுஸ்தானத்திலே சேந்த சில்லரை பாளயகார் முதலான பேர்கள் சமுஸ்தானத்துக்கு அஹிதமாக நடந்து கொண்டு சில்லரை பண்ணிக் கொண்டு இருந்தபடியினாலே யின் வம்சஸ்தனான-குச்சல பொம்ம னாயக்கன் தன்னுடைய செவுரிய பராக்கிரமத்தினாலே அந்தச்சில்லரை மநுஷர் யாவரையு மெல்லாம் மட்டு அடக்கி ராயர் சமுஸ்தானத்துக்கு பகுதிபணம் செலுத்தி வரும் படியாக ஜெனங்கள் பண்ணின படியினாலே ராயர் மிகவும் சந்தோஷப் பட்டு இவனுடைய செவுரிய பராக்கிரமத்துக்கு மெச்சி ரொம்பவும் சந்தோஷமாயிருக்கிறபடியினாலே நம்முடைய சமுஸ்தானத்துக்கு சேந்த சில்லரை பாளயக்காரருக்கு யெல்லாம் முதன்மைக்காரனாக யிருமென்று செயிலி, பல்லாக்கு, உபயசாமரம் குடுத்து சகசம்பு குடை, பூசக்கிர குடை, பஞ்சவர்ண டால், சக்குசக்கிறடால், சந்திரகாவிடால், மகரடால், செருப்பு டால், அனுமந்த டால், பருந்து டால், பஞ்சவர்ண டால், வெள்ளை பக்ஷ டால், ஆனை மேல்பாரி, ரணபாஷிங்கம், கட்டியம், முத்துசரம், வீரசங்கிலி, பாதுகைகள், சாமதோஷ ஜெயா வெண்டயம், சோமத்தலை, பிருதண்டாமணி இப்படிக்கு சக... விருதுகளுடனே வெகுமதிகள் பண்ணி பாளயகாருக்கு யெ... முதன்மைகாரனாக விஸ்வ பதிபதியாக இருமென்று, ஆனை மே... ஆனைமேல் பேறிகை, ஒட்டைமேல் நகாறு, குதிரை... எருக்கு மேல் தம்பட்டம், நவபத்து சங்கீதவாத்தி...

குதிரை இடப்படிக்கு சகல வாத்தியங்களுடனே பட்டத்து ஆனைமேல் பட்டணப்பிரவேசமும் வந்து பட்டம் கட்டினார்கள்.

அந்த நாள் முதல் வடக்கு பிறதேசத்துக்கு சில்லவார பாளையக் காரருக்கு எல்லாம் முதலைக்காரு பாளையக்காரர் என்கிற பேர் பிரசித்திப்பட்டவராகி குர்சலிப் பொம்மநாயக்கர் இருக்கும் நாளையில் அவர் குமாரன் பரமேதாளுல்நாயக்கன். இவருக்குப் பிள்ளைகள்..... 1. எத்துலமுத்தே நாயக்கன். 2. வீரம நாயக்கன்.

நாயர் சமுஸ்தானத்திலே அதிபராக்கிரம சாலிகளாயி இருக்கும் நாளையில் தட்சணப்பிரதேசத்தில் கம்பளத்தார் அனைவரையும் அவரவருக்கு பாளையப்பட்டு தேருகாம் செய்து தட்சிண தேசத்துக்கு அனுப்பிவிச்ச சமயத்தில் என் வம்சத்தில் வீரமநாயக்கர் என்கிற வருக்கு நல்லூருக்க நாட்டிலே நல்லாறு அக்கரைக்குசீமைக்கு மேற்கு, குடமலுட்டி சித்தகல்லுக்கும் கிழக்கு, தாலையூர் பேட்டை கரைக்கும் தெற்கு, முதுமடி சிறுமலைக்கும் வடக்கு விந்தநாங்கெல்லைக்கு உள்பட்ட காடுமலை உள்பட இடமேல் பந்து நாளிகை வழியும் இதல்படம் ஏறும் காதவழி விந்த நால்பாங்கு எல்லைக்கு நீயே பாளையக்காரராக இருமென்று உத்திரவு செய்தபடியாலே என் வம்சத்திலே வீரம நாயக்கர் பிறப்பட்டு மேலடத்துக்கு வந்து சேந்து நல்லூருக்க நாட்டிலே அனகாபுரி என்கிற ஊருக்குச் சேந்து மேற்படி அவர்கள் சமூகத்தில் உத்திரவுபடிக்குத் தம்முடைய அதுக்குச் சேர்ந்த காளாங்கள் கோட்டைபிச்சு சல்லிப்பட்டி என்கிற ஊர் உண்டு பண்ணி அதுக்கு சேர்ந்த கிராமமும் 14... சல்லிப்பட்டி பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப்பட்டவர்களாயி சகல பிறுதுகளுடனே பாளையகாற் ஆண்டு கொண்டு வந்தார்.

அந்த நாள் முதல் சாலிவாகன சகாப்தம் 1268 முதல் சகாப்தம் 1723 வரைக்கும் ௵ 455க்கு பட்டங்களுடைய விவரமும் அவர்களுடைய நடத்தைகளும் இதின் கீழ எழுதியிருக்குது.

1. வீரம நாயக்கன் பட்டம் ஆண்ட ௵ 30
2. சம்பால நாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 24
3. யிவர் குமாரன் சக்கம்பாலநாயக்கன் பட்டம் ஆண்ட ௵ 18
4. யிவர் குமாரன் மலையாளநாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 14
5. யிவர் குமாரன் குறிச்சி நாயக்கன் பட்டம் ஆண்ட ௵ 32
6. யிவர் குமாரன் கதிர் நாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 27
7. யிவர் குமாரன் கொண்கரான்டி நாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 19
8. யிவர் குமாரன் ரணவீரன்டி நாயக்கன் பட்டம் ஆண்ட ௵ 22
9. யிவர் குமாரன் அழகுவீட்டி நாயக்கர் பட்டம் ஆண்ட ௵ ...
10. யிவர் குமாரன் சல்லி வீரப்ப நாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 26

11. யிவர் குமாரன் கும்மநாயக்கர் பட்டம் ஆண்ட ௵ ...
12. யிவர் குமாரன் பெரியமலையாண்டி நாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 9
13. யிவர் குமாரன் முத்துலிங்கமலையாண்டி நாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 24
14. யிவர் குமாரன் சின்னமலையாண்டி நாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 15
15. யிவர் குமாரன் அரசலிங்கமநாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 26
16. யிவர் குமாரன் லிங்கமாண்டி நாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 12
17. யிவர் குமாரன் நல்லமுத்து நாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 29
18. யிவர் குமாரன் அழகுமலையாண்டி நாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 19
19. யிவர் குமாரன் வெங்கடபதி நாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 40
20. யிவர் குமாரன் ரங்கப்ப நாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 30
21. யிவர் குமாரன் பெரிய நல்லமுத்து நாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 10

| | |
|---|---|
| 21 | 455 |

முதல் பட்டக்காரர் பெருமநாயக்கர் நாளையிலே பாலாத்துக் கரையில் யிந்த ஆத்து நடுவில் பெரிய குன்றின் சுடாரூபமும் பாத் தழிவரும் யிப்படி அதிசயம் கண்டு அதுக்கு வடபால் புஞ்சையை யும் தெற்கு மலைமேலே கதிநரய பெருமாள் இருக்கிற மகத்துவம் கண்டு பங்குனி மாசத்தில் மகா கத்தி தேர் உண்டுபண்ணி ரதோச் சவமும் செய்வித்த தன்னுடைய பாளையப்பட்டு கிராமங்களிலே கிராம தேவதை முதலானதுகளுக்கு மானியங்கள் விட்டு பாளையப் பட்டுக்கு பிரசித்தி புருஷனாய் பாளையப்பட்டு ஆண்டு கொண்டு வந்தார்.

ரெண்டாவது பட்டம் சம்பாலநாயக்கர் நாள் முதல் பதினெட் டாம் தலைமுறை அழகுமலையாண்டி நாயக்கர் நாள்வரைக்கும் யெங்கள் பெரியவாள் சம்பாதிக்கப்பட்ட விருதுகள் ஆயுதங்களுடனே அக் காலத்துக்கு ரெஜியாதிபதிகள் கட்டளை செய்தபடிக்கு நிகதி செலுத்தி விச்சுக் கொண்டு மதுரை சமஸ்தானத்துக்கு திருதி பணத்தில் வருஷம் 1க்கு (ஒ) ஒரு யானை குறித்துக் கொண்டு பாளையப்பட்டு ஆண்டு அனுபவித்துக்கொண்டு பிரபுக்கள் தயவுக்குப் பாத்திரனாய் நடந்து கொண்டு வந்தார்கள்.

பத்தொன்பதாம் பட்டமான வெங்கடபதி நாயக்கர் நாளையில் அக்காலத்து ரெஜியாதிபதிகளான மைசூர் சமஸ்தானத்தில் அயிதர்

அப்போது அவர்கள் நாளையில் அறமனையாற் உத்திரவுபடிக்கு அருமனை குமக்கு சனம் 1000 சேர்ந்த சனம் 500 யிந்த சனத்துடனே பாலக்காட்டு ராசா யென்பேரிலே தண்டுயெடுத்து பாலகாட்டுக்கு சேந்தவுடனே புளிக்கோட்டையில் டாணாவும் போட்டுயிருந்த யிடத்தில் பாலக்காட்டு ராசா சனத்தை யெல்லாம் சேதம் பண்ணி போட்டு கோட்டை கையாற் பண்ணிக்கொண்டு அந்த யுத்த சண்டை கத்தில் வெட்டுப்பட்டு செ... விட்டான்.

யிருவதாம் பட்டம் ரங்கப்ப நாயக்கன் நாளையில் அக்காலத்தில் ரப்புகள்தாய் அவர்கள் சருக்காருக்கு சல்லிப்பட்டி பாளையப்பட்டுக்கு வருஷம் 1க்கு கண்டிருபயன் வருஷம் 1க்கு 9010 பணம் நிருதி செய்த படியனாலே நிருதிபடிக்கு அரமனைக்கு பணம் செலுத்திவிச்சக் கொண்டு சல்லிப்பட்டி பாளையப்பட்டுக்கு சேர்ந்த பதினறு கிராமமும் பாளையப் பட்டம் ஆண்டு அனுபவித்துக்கொண்டு வந்தார்.

யெல்லப்பநாயக்கர் பெரிய நல்லமுத்து நாயக்கர் நாளையில் அறமனையாற் யிட்ட கட்டளைபடிக்கு நிருதி பணம் செலுத்திவிச்சக் கொண்டுவரும் நாளையில் மகா ராஜ ராஜ ஸ்ரீ கும்பினி சற்காருலே சல்லிப்பட்டி பாளையகாருக்குக்கு பதினெழுவராதி நிருதி செய்து யிருந்த சமயத்தில் சருக்காருலே துகையில்லாமல் பாருதியான படியனாலே நெருக்கத்துலே யிருக்கப்பட்டவனை சருகாருலே கண்டு பிடிக்க சருகாருக்கு குத்தகையானியான படியனாலே கும்பினி சருகாருக்கு நிரம்பவும் குத்தகையாளியாகி தெய்வகதி அடைந்தான்.

மகா ராச ராச ஸ்ரீ கும்பினி சருகாருலே யென்னையும் யென்னை சேர்ந்த செனத்தாரையும் திண்டுக்கல் முதலான யிடங்களுலே கைதுலே வச்சயிருந்து தொரைகள் தயவு செய்து யென்க்கும் யென்னை சேர்ந்த சனத்துக்கு மாசம் 1க்கு படி விராகன் யிருவத்தினாலு பொன் நிருதி செய்து அதுலே போடு யிருக்கச் சொல்லி உத்திரவு செய்த படியனாலே அறமனையாற் கட்டளையிட்ட படிக்கு மாசம் மாசம் படியும் பத்திகொண்டு யிருக்குறேன்.

நான் பதினறு வயசு சிறு பிள்ளையாகி யென்னை சேர்ந்த குடும்ப குளந்தை பாலனாகி பரதேசியாகி போகியிருந்து வந்து சனத்துடனே நாற்பது சனத்துடனே தயவு செய்து யிருக்குறபடியினாலே சீவனம் பண்ணிகொண்டு சல்லிப்பட்டிக்கு சேந்த தொல்லைமான் புத்தூரு கிராமத்திலே ஆசருலே யிருந்து-

மகா ராஜ ஸ்ரீ கும்பினி துரைகள் தயவுக்கு பாத்திரனுயி காத்துக் கொண்டு யிருக்கிறேன். பெத்தநாயக்க ருசு-

★

# சிஞ்சுவாடி பாளையக்காரர் சம்பே நாயக்கர் வமிசாவளி

டி. 3131

பொள்ளாச்சி தாலுக்கா சுஞ்சுவாடி பாளையக்காரர் சம்பே நாய்க்கர் எழுதிக்குடுத்த பாளையக்காரர் வம்சாவளி முதலான விவரீது என்னவென்றால் :-

பூர்வத்தில் பாதுஷாஹா சீர்மையில் பாளையக்காரர் பாளையப் பட்டாயிருக்கப்பட்ட கம்பள சாதி ஆனவரும் ராயர் சமஸ்தானத்தை நாடி வந்த தருணத்தில் ராயர் சமஸ்தானத்தார் எங்கள் வம்சஸ்த்தரை பாலாவசித்தம முக்கள் ராயர் சமஸ்தானத்தில் குமார வர்க்க மென்று பேர் பிரசித்திபட்டவர்களாகி யிருக்கும் நாளையில் அவருடைய புள்ளையன் பேரு பேதிலேயும் ரெண்டாம் புள்ளை பிறந்து. பெத்துவுபுத்த ராச்சருக்கு ஒரு புள்ளை பிறந்து வுடனே அந்த புள்ளைக்குத் தாயார் தெய்வகதியானாள். அந்த தாயி இல்லாத குழந்தையை வச்சுக்கொண்டு பதினாறு நாள் ஆனவுடனே சரியாக பத்துவீரப்பன் வீட்டில் கொழந்தையை போட்டுப் பிரதட்சண நமஸ்காரம் பண்ணி வேண்டிக்கொண்டபடியினாலே அந்த பசு நிதம் பிரீதியும் தானாக குழந்தையிடத்துக்கு வந்து மூணு காலமும் பால் குடுத்துக் கொண்டு இருந்தபடியினாலே இது செய்தி ராயர் ஸமஸ்தானாதிபதிகளான சோமதேவராயர் அவர்கள் கேட்டு அந்த பசுமாட்டையும் குழந்தையையும் தரிசிக்கப் பாத்து மஹா ஆச்சரியப்பட்டு அந்தக் குழந்தையிடத்தில் ரொம்பவும் பிரீதியாக அபிமானம் வச்சபடியினாலே தினம் தினம் பிரவர்த்தமாகி வளந்து கொண்டு இருந்தான். ராயர் அவர் களும் தினகாலமும் அந்த குழந்தை சுகமாயென்று விசாரிக்கக் கொண்டுயிருப்பார்கள். அந்த குழந்தை பசுவுபால் குடித்து வளந்த தினால் நாய்க்கர் என்கிறவனுக்கு ராயர் வைத்த ஆனதுடனே ராயர் சமஸ்தானத்தில் அரமனைக்குக் கூட்டிபோயி வச்சுக்கொண்டு பிதுர்பாவியமாகி அபிமானமாயி வளந்துக் கொண்டு இருக்கும் நாளையில் விபரான் கபயோகங்கள் பண்ணிவிச்ச கொண்டு வித்தியா பியாசம் தநுர்வித்தியாதிகள் முதலானதுகளிலே மிகவும் வல்லவனாயி அப்பியாசித்துக் குடுத்து பசுவின்பால் உண்டு வளந்தபடியினாலே ராயர் அவர்கள் அவனுடைய கோத்திரம் சின்னம தூய்க்கற் யென்று பேரும் குடுத்து நம்பிபுத்துரத் இடங்களில் இவனுக்கு மன்னவேட்டாகி

விடவேணுமென்று யாசிக்க மந்திரனு லவிசேன கூடவே பல்லாக்கு உபயசாமரம், குயக்காளு, ரணபாகஷிக்கம், முத்துதூராயி, பூசகிழ கொடை, முத்திருவண்டி, பஞ்சவர்ணடி, செம்புச்சாதுல்லை, வெள்ளி பக்குருடால், சங்குசக்கிருடால், சுருட்டி, திபட்டி முதல் பின்னும் முப்பத்திரண்டு பிருதும் பதினெட்டு வாத்தியமும் குடுத்து வேண்டிய வெகுமதியும் பண்ணித் தட்சனைப் பிறதேசத்தில் நம்பிபுத்தூர் செடியும், கோழிக்கடை செடியும் இந்த இரண்டு செடி களுக்கும் சேந்த சீமைக்கு ஜமீன் மன்னவைதாரனாயி இருவென்று பட்டாபிஷேகம் பண்ணினார்கள்.

வண்டாரகுடிகினிவாக நாயக்கர் என்று பேர் பிரகத்திப்பட்டவராயி சகல பிருதுகள் வாத்தியங்களுடனே சிறந்த பவுசுகளையும் கூட்டிக் கொண்டு தெற்கு நோக்கி வந்து கூழுருக்கு மேற்கே நம்பிபுத்தூரில் வாசமாயிருந்துக்கொண்டு நம்பிபுத்தூர் செடியும் கோழிக்கடை செடியும் ரெண்டு செடிக்கும் சேந்த சீமையும் பந்தோபஸ்து பண்ணிக்கொண்டு மன்னரிக்கமாயி பிரபுத்துவம் பண்ணிக்கொண்டு வந்தார்.

இவர் ரெண்டாவது குமாரன் சம்பெ நாய்க்கன் செவுநீயோதாநிய காம்பதிருப்பங்களியே பிராணலிங்க பவுசும் கொண்டு பண்ணிக்கொள்ள வேணுமென்று யோசிச்ச தாமாக லிங்கடமாதி பூப சமுஸ்தானைத் ஆக்குதப்போதி தம்முடைய பவுசுகளையும் நல்லாண்மை யெல்லாம் காண்பி விச்ச சொல்பதிபண்ணி சிஞ்சிவாடி பாளையகரராயி பட்டம் கட்டிக்கொண்டு சகல பிருதுகளுடனே வந்து லிங்கடமாதி சிஞ்சிவாடி பாளையக்கர் என்று பேர்பட்டவராயி இருந்தார்.

அந்த நாள் முதல் சாலிவாகன சகாப்தம் 1212 முதல் 1722 வருஷம் வரைக்கும் ௵ 510க்கு பட்டங்களுக்கு வந்த ஜமீன்தாரர்களும் அவர்களுடைய நடத்தைகளும் இதன் கீழ் எழுதியிருக்கிறது.

1. சம்பெ நாய்க்கன் பட்டம் ஆண்டு கொண்டு வந்த ௵ 32
2. இவர் குமாரன் பெத்த நாய்க்கன் பட்டம் ஆண்ட ௵ 18
3. இவர் குமாரன் பொம்மைய நாயக்கன் பட்டம் ஆண்ட ௵ 12
4. இவர் குமாரன் முத்துமல்லயாண்டி நாய்க்கர் பட்டம் ஆண்ட ௵ 11
5. இவர் குமாரன் வெங்கடகொண்டம நாய்க்கர் பட்டம் ஆண்ட ௵ 24
6. இவர் குமாரன் முத்துவெள்ளையத நாய்க்கன் பட்டம் ஆண்ட ௵ 15
7. இவர் குமாரன் குமார பொம்ம நாய்க்கர் பட்டம் ஆண்ட ௵ 19
8. இவர் குமாரன் பொன்னுசாமி நாய்க்கன் பட்டம் ஆண்ட ௵ 28

9. யிவர் குமாரன் காமய நாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 26
10. யிவர் குமாரன் கோபால ஞாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 14
11. யிவர் குமாரன் வரதராம ஞாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 9
12. யிவர் குமாரன் குமாரவேலு ஞாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 17
13. யிவர் குமாரன் தெப்பப்ப ஞாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 25
14. யிவர் குமாரன் பெரியமலையாண்டி நாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 22
15. யிவர் குமாரன் சின்ன பொம்மஞாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 20
16. யிவர் குமாரன் கஞ்சிவரத ஞாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 10
17. யிவர் குமாரன் வெங்கிட்டராம ஞாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 28
18. யிவர் குமாரன் முத்தித ஞாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 20
19. யிவர் குமாரன் குமாரவேலாயுத ஞாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 16
20. யிவர் குமாரன் முத்துவ ஞாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 19
21. யிவர் குமாரன் வெத்துலப்ப ஞாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 11
22. யிவர் குமாரன் ரங்கசாமி ஞாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 60
23. யிவர் குமாரன் பொன்னுமலையாண்டி நாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 40
24. யிவர் குமாரன் சின்னபொம்மஞாயக்கர் பட்டம் ஆண்ட ௵ 11

24 முதல் பட்டக்காரனை சம்பெஞாயக்கர் நாளையிலே முதல் சமுஸ்தானத்திலே பிறந்தவர் உண்டு பண்ணிக்கொண்டு பாளையகர் பிரபுத்துவமாகி தேமுகம் செய்து கொண்டு பாளையப்பட்டு எல்லைக்கு விபரம் விபரம [நாயக்கர்] பாளையப்பட்டு வெல்லைக்கு தெற்கு தவி பாளையப்பட்டு எல்லைக்கு மேற்கு வெறுமஞாயக்கன் பாளையப்பட்டு எல்லைக்கு கிழக்கு மேடு வெத்துலஞாயக்கன் பாளையப்பட்டுக்குத் தெற்கு யிந்த சதிரத்துக்கு உள்பட்ட பூமியில் கொமேல் காதவழி தென்வடல் மூணு நாழிகைவழி யிந்த பூமியில் கச்சவாடிக்கு சேர்ந்த உபகிராமஞ்சள் சயித்தம் கிராமமும் 14 யிந்த பதினாலு கிராமமும் உண்டு பண்ணி கச்சவாடி பாளையப்பட்டாகி அனுபவிச்சு கொண்டு வந்தார்.

இரண்டாவது பட்டக்காரனை வெத்த ஞாயக்கன் நாள் முதல் யிருவத்தி மூணும் பட்டம் பொன்னுமலையாண்டி நாயக்கர் நாள் வரைக்கும் மொகலனுடைய பெரியவர்கள் சம்பாதிக்கப்பட்ட பாளையப் பட்டு ஆண்டுக் கொண்டு அரமனையார் கட்டு செய்தாருக்கு கிஸ்திப்படிக்கு பணம் செலுத்திக் கொண்டு வந்தது...

மதுரை சமுஸ்தானத்தில் வருஷம் 1க்கு கிஸ்தி...மூச கோபாலி [பணம்] 500 மயிசூரு சமுஸ்தானத்தில் ௵ 1க்கு கிஸ்திவிறையல் [பணம்] 700 பணம் யிந்த கிஸ்திபடிக்கு பணம் செலுத்திக் கொண்டு பாளையகர் பட்டம் ஆண்டு கொண்டு வந்தார்கள்.

யென் தோப்பனுமானவன் சின்ன பொம்ம நாய்க்கன் மஹா ராச ராசஸ்ரீ கும்பினி துரை யவர்கள் சறுக்காறுக்கு மிகவும் நுத்துவாவியாயி நடந்து கொண்ட படியினாலேயும் பருதியாயி சறுக்காறுலே ஆகப் பட்ட படியனாலே மிகவும் நுத்துவாவியானபடியனாலே கும்பினியார் உத்திரவுபடிக்கு நெடயியபெத்தியாளுவ்.

நானது ஆசறுலே யிருக்கப்பட்ட முத்துமலையாண்டி சம்பெ நாயக்கன் நானும் எனக்கு சேந்த சனமும் திண்டுக்கல் முதலான யிடங்களிலே கைதிலேயிருந்து மகா-ராச ராச ஸ்ரீ காவேர சாயபு துரை யவர்கள் கடாட்சம் செயிது மாசம் 1க்கு ஒரு விருபன் பணம் 15 பணம் ரு பணம் உத்திரவு செயிது வழியிலே போதி இருக்கச் சொல்லி உத்திரவு செயிதபடியினாலே நிக்குலியபடிக்கு செலுத்தி கொண்டு ஆசறுலே யென்னை சேந்த சனம் பதனாருக சனத்துடனே மகா-ராச-ராச ஸ்ரீ துரை யவர்கள் கட்டுபண்ணின படியிலே சிலவம் பண்ணிக்கொண்டு சுஞ்சுவாடி குடியிருப்புக்காரனாயி கும்பினியார் தயவுக்கு பாத்திரனாயி காத்துக்கொண்டு யிருக்குறேன்.

சம்பெ நாயக்கன் குசவு.

# தவசிமடு ஜமீன்தாரி வம்முசாவழி கணக்கு

டி- 3843

இந்தத் தவசிமடு வம்முசாவழிக் கணக்கு ஓலைப்பட்டையத்திலிருந்து எழுதினது.

நாங்கள் வெங்களுக்குப் பாவைப்பட்டு வந்தது முன் நாங்களிருந்தது ருக்கு தேசம். அவ்விடத்தில் வெங்கள துலுக்கர் பெண்கேட்ட நிமித்தியமாக எங்களுடைய போக்கியம் பூமிபுத்திகள் சகலத்தையும் வெடுக்காமல் விட்டுப்போட்டு தெட்சணம் பாண்டிய தேசத்துக்கு எங்களுடைய குஞ்சு குழந்தைகளை மயிலைச்சரும் கூட்டிக் கொண்டு வருகையில் குறுக்கே ஆற்றில் பிறவாகம் மிகுதியாய் வந்து மறித்துக் கொண்டது. அந்த முன்னுக்கு வெள்ளத்தில் வரமாட்டாமல் எங்களுடைய தேவதைகளை ஆராதனைப்பண்ணுகிற முன்னுக்கு தேவதைகள் பிரத்தியட்சமாய் வந்து ஆற்றங்கரையில் ஒரு புங்க மரத்தை வளைந்து குடுத்தது. அந்த மரம் குறுக்கே வளைந்து குடுத்தது. அந்த மரத்தின் பேரில் நாங்கள் சகலபேரும் ஆறுதாண்டி தென்கரை சேர்ந்தோம். எங்களிடத்தில் பெண்கேட்ட துலுக்கள் எங்களைப்பிறகே தொடர்ந்து வருகிற முன்னுக்கு அதில் குறுக்கேயிருந்த புங்கமரம் துலுக்களைக் கண்ட மாத்திரத்திலே அந்த மரம் அவர்களுக்கு வளைந்து கொடாததினாலே அந்த துலுக்கள் திரும்பிப் போய் விட்டார்கள்.

அதின் பிறகு நாங்கள் சகலமான பேருங்கூட்டித் தெட்சணப் பாண்டியன் தேசமாகிய மதுரைபுரிக்கு வடமேற்கு பூமியில் சிறுமலைச் சாரலில் எங்களுடைய வமிச குஞ்சு குழந்தைகள் சகலமும் பிழைப்பிக்கொண்டு எங்களுடைய பெரியவர்கள் சோத்துமுறைக்கு எங்களுடைய தெய்வங்களை நோக்கி ஆராதனைப்பண்ணி மகா தவசு பண்ணிக்கொண்டிருந்தார்கள். மேலும் ராத்திரி பகல் அறுபது நாழிகையும் நேமநிஷ்டை வைத்துக்கொண்டு தவசு பண்ணுகையில் எங்களுடைய தேவதை பிரத்தியட்சமாய் வந்து அவர்களை நோக்கி மகா தவசு பண்ணினதாலே இந்த இடத்தில் தானே யிருந்துக் காட்டுச் செடிகளை வெட்டி குடியேற்றி கிராமம் உண்டுபண்ணி அந்த கிராமத்துக்குப் பேர் நீ தவசு பண்ணின இடமானதுனாலேயும் சன்னாசி தவசிகள் பெரியவர்களிருக்குற மலையாகச்சேயும் பேர் தவசி மடுவென்று சொல்லியும் எங்கள் பெரியவர்கள் தவசு பண்ணினவர்

களுக்கும் பேர் சோத்தநூருக்கர் யென்று பேருங்குறித்துயிருந்தார்கள். அதே மேரைக்கிக் காடுகளை வெட்டி நுசவு பண்ணி பயிர் பச்சை பண்ணுகையில் அப்போது பாளயபுரா ரெச்சியத்துக்கு கர்த்துரான கர்த்தாக்களாகிய ராசமனுக்கராளர்கள் சந்திரசேகரபாண்டியன் வீர சேகர சோழனுக்கும் ஒன்றுக்கொன்று சண்டையாய் இருந்து அந்த சண்டையும் தீருகிறதற்கு இந்த மார்க்கமாக வந்து திண்டுக்கல்லுக்கு வந்து பழனிக்கி சுவாமி தெரிசனைத்துக்குப் போக பயணமாகையில் ராசமனுக்கரவர்களுக்கு உடம்பில் சரீர செளக்கியமில்லாமல் இருந்து அந்த முன்னூருக்கு அவர்களிடத்திலிருந்து பெரிய மனுஷான் நாகம நாயக்கர் அவர்கள் சமட் டயாத்தில் சொன்னது சமாச்சாரம் நாம் வந்த வழியில் தவசிமடு யென்று ஒரு பாளையப்பட்டு யிருக்குது. அந்த ஊரில் ஒரு கம்பளத்தான் சவுடாரியை வைத்துக் கொண்டு யென்னேரமும் தவசு பண்ணிக்கொண்டிருக்கிறான். அவனை வரவழைத்தால் சரீர பீடையானதுக்கு மீந்தி சொல்லுவானென்று சொன்ன முன்னூருக்கு அந்த கம்பளத்தானை சீக்கிரம் அழைத்துவரச் சொல்லி உத்திரவாகி அவர்களுடைய மனுஷாள் வந்து எங்களுடைய பெரிய மனுஷாள் சோத்தனாருக்கன் தவசு பண்ணிக்கொண்டிருந்தவரைக் கூட்டிக்கொண்டு போய் கர்த்தாக்களுடைய சமூகத்தில் விட்டார்கள். அந்த முன்னூருக்கு நாயக்கர் அவர்களுக்கு உடம்பில் சரீர பீடையா யிருக்குது. அதுகாரியம் பார்க்கச் சொல்லி உத்திரவு ஆச்சுது. அதின் பேரில் எங்களுடைய பெரிய மனுஷன் சோத்தனாருக்கன் தேவதாவை பிரார்த்தினைபண்ணி விபூதியை மேலில்ப் போட்டவுடனே உடம்பில் கண்டிருந்த பீடை நிவர்த்தியாய்ப் போய் விட்டுது. அந்த முன்னூருக்கு விபூதி போட்டவர் பேரில் யிருந்த சந்தோஷமாகி கர்த்தாக்கள் உத்திரவு ஆனது. நீ தவசு பண்ணிக்கொண்டிருந்த இடத்தில் காடு செடிகள் யிருக்குறதெல்லாம் வெட்டி நுசவுபண்ணி வைத்துக் கிராமங்கள் உண்டு பண்ணிக் கொண்டு தவசிமடு பாளையக்காரனென்று பேரென்பிச்சுக் கொண்டு எங்களுடைய உத்திரவு மேரைக்கிச் சொன்னபடி கேட்டு நடந்துக் கொண்டிரு யென்று பட்டயமும் குறித்து அனுப்பிவிச்சார்கள்.

அதே மேரைக்கி எங்களுடைய பெரியவர் சோத்தனாருக்கர் தவசிமடு பாளையத்துக்கு வந்து உடபடி செடிகாடு யிருந்ததெல்லாம் அறுப்பண்ணி பின்னும் அதிக கிராமம் உண்டுபண்ணி அந்த கிராமங்களுக்கெல்லாம் குடியானும் வரவழைத்து வெள்ளாமை நுசவுபண்ணி வைத்தோம். ஆகையினாலே தவசிமடுபாளையம் என்றும் கர்த்தாக்கள் பேரும் கொடுத்து என்னைக்கும் கோத்திரபுத்திரம் வரைக்கும் பூர்வீகமாயிருக்கச் சொல்லிக் கர்த்தாக்கள் உத்திரவு செய்தார்கள். அதே

மேலாக்கி எங்களுடைய பெரிய மனுஷன் சொத்தனாய்க்கர் நடத்து கொண்டு வந்தார்.

அந்த முன்னுக்கு நாகமனாய்க்கர் குமாரன் விசுவநாதனாய்க்கர் அவர்கள் பாண்டிதேசத்துக்கு கர்த்தராக ஆனதுக்கு மேல் அரியநாயக முதலியாரும் கர்த்தாக்களும் பாண்டியன் கோட்டையை வெளியாக எழுபத்திரெண்டு கொத்தளத்துடனே கோட்டையும் போட்டு திருமஞ்சன வாசலுக்கு பிறதெட்சணையாகிய வெழுபத்து ரெண்டாங் கொத்தளங் காத்துக்கொண்டிருக்கச் சொல்லி உத்திரவு கட்டளை யிட்டார்கள். அதே மேலாக்கி அந்தக் கொத்தளமுங் காத்துக் கொண்டு அறுபது வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டிருக்கையில் விசுவநாதனாய்க்கர் அவர்களும் அரியநாயக முதலியாரும் கயத்தாத்து ராய சண்டைக்கிப் போகையில் எங்களுடைய சொத்தனாய்க்கரை வரவழைத்து கர்த்தாக்கள் கூடாரத்தை ஆதிரமாகக் காத்துக் கொண் டிருக்கச் சொல்லி உத்தாரம்பண்ணி அந்தக் கூடாரத்துடனே போர முன்னுக்கு சண்டையானதில் சொத்தனாய்க்கர் சிவலோக பிராப்தி யானார்கள்.

ரெண்டாம் பட்டம் சொத்தனாய்க்கர் குமாரன் தெருகுறும சொத்தனாய்க்கர் கர்த்தாக்கள் உத்திரவுபடிக்கு நடந்துக்கொண்டு காணியாட்சியாகிய கொத்தளமுங் காத்துக்கொண்டு நாற்பத்தி ரெண்டு வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

மூன்றாம்பட்டம் அவர் குமாரன் தெருகுறுமசொத்தனாய்க்கர் பட்டத்துக்கு வந்ததுக்குமேல் காணியாச்சியாகிய கொத்தளமுங் காத்துக்கொண்டு கர்த்தாக்கள் உத்தரவுபடிக்கி நாற்பத்தொன்பது வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டிருந்தார்.

4ம் பட்டம் அவர் மகன் தெருகுறுமசொத்தனாய்க்கர் காணியாச்சி யாகிய கொத்தளமுங் காத்துக்கொண்டு கர்த்தாக்கள் உத்திரவுபடிக்கி நடந்துக்கொண்டு ஐம்பது வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண் டிருந்தார்.

5ம் பட்டம் அவர் மகன் தெருகுறுமசொத்தனாய்க்கர் காணியாச்சி யாகிய கொத்தளமுங் காத்துக்கொண்டு கர்த்தாக்கள் உத்திரவுபடியே நடத்துகொண்டு 2 வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டி ருந்தார்.

6ம் பட்டம் அவர் மகன் பொன்னுசாமி சொத்தனாய்க்கர் காணியாச்சியாகிய கொத்தளமுங் காத்துக்கொண்டு கர்த்தாக்கள்

உத்திரவுப்படியே நடந்துகொண்டிருந்து பத்து வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டிருந்தார்.

7ம் பட்டம் அவர் மகன் ரெகுநாத சொத்தனாயக்கர் பட்டத்தில் கர்த்தாக்களாகிய திருமலைநாயக்கர் அவர்கள் அதிகாரத்தில் ரூமப்பய்யன் தளகர்த்தர் பண்ணு வகையில் சேதுபதிபேரில் தண்டெடுத்து போகையில் எங்களையும் வரச்சொல்லி உத்திரவாகி நாங்களும் போய் அந்தச் சண்டையிலிருந்து உத்தியோகமும் பண்ணித் திரும்ப ரூமப்பய்யனை மதுரைக்கி வருகிறவர்களுக்கு கூடவே வந்து கர்த்தாக்களிடத்தில் ரூமப்பய்யரவர்கள் எங்களுக்கு வெகுமதி வஸ்திர பூஷணாதிகள் வாங்கிக்கொடுத்து தம்பியேந்திரனுக்கு எங்களை அனுப்பி வைச்சார்கள். அந்த மேரைக்கி எங்கள் காணியாச்சியாகிய கொத்தளமுங் காத்துக் கொண்டு கர்த்தாக்கள் உத்திரவுப்படியே நடந்து கொண்டு 42 வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டு யிருந்தார்கள்.

8-ம் பட்டம் சொத்தனாயக்கர் பட்டத்தில் தானதர்மம் பண்ணிக்கொண்டு காணியாட்சியாகிய கொத்தளமுங் காத்து கொண்டு கர்த்தாக்கள் உத்திரவுப்படியே நடந்துகொண்டு 40 வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டு இருந்தார்.

9ம் பட்டம் அவர் மகன் ரெகுநாத சொத்தனாயக்கர் பட்டத்தில் அவரைச் சொக்கலிங்க நாயக்கர் அவர்கள் வரவழைத்து தஞ்சாவூர் கோட்டையின் பேரில் படையெடுத்து போனதுக்கு கூடாரம் காவலாக வரச்சொல்லிக் கூட்டிக் கொண்டு போய்ச் செயமாகிப் பாளையம் வந்தபின் பேரில் ரெகுநாத சொத்தனாயக்கரை கர்த்தாக்கள் ருமார வந்தமென்று ரொம்பவும் சந்தோஷமாகி வெகுமதி வஸ்திர பூஷணாதியளும் கொடுத்து அனுப்பிவைச்சார்கள். அந்த மேரைக்கிக் காணியாச்சியாகி கொத்தளமுங் காத்துக் கொண்டு கர்த்தாக்கள் உத்திரவு படி நடந்துக்கொண்டு 45 வருஷம் துரைத்தனம் பண்ணிக் கொண்டிருந்தார்.

10ம் பட்டம் அவர் மகன் சொத்தனாயக்கர் தான தர்மம் செய்துக்கொண்டு காணியாச்சியாகிய கொத்தளமுங் காத்துக்கொண்டு கர்த்தாக்கள் உத்திரவுப்படியே நடந்துக்கொண்டு 33 வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டியிருந்தார்.

11ம் பட்டம் சொத்தனாயக்கர் மகன் ரெகுநாத சொத்தனா யக்கர் தானதர்மங்கள் அநேகங்கள் செய்துக்கொண்டு கர்த்தாக்கள் உத்திரவுப்படியே நடந்துகொண்டு 31 வருஷம் துரைத்தனம் செய்துக் கொண்டிருந்தார்.

12ம் பட்டம் ரெகுனாத சொக்கனாயக்கர் குமாரன் சொக்கனாயக்கர் 19 வருஷம் துரைத்தனம் பண்ணிக்கொண்டு கர்த்தாக்கள் உத்திரவுபடியே நடந்துக்கொண்டு தானதர்மத்துடனே துரைத்தனம் பண்ணிக்கொண்டிருந்தார்.

—0—